# அகளங்கன் பக்திப் பாடல்கள்



அகளங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகளங்கன்
# பக்திப் பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகளங்கன்
# பத்திப் பாடல்கள்

அகளங்கன்

வெளியீடு :
வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் - 46

2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பெயர் | :- | **அகளங்கன் பக்திப் பாடல்கள்** |
| வகை | :- | இசைப் பாடல் (சமயம்) |
| எழுதியவர் | :- | **அகளங்கன் (நா.தர்மராஜா)** |
| முகவரி | :- | 90, திருநாவற்குளம், வவுனியா |
| பதிப்புரிமை | :- | திருமதி பூரணேஸ்வரி தர்மராஜா B.A (Hons) |
| வெளியீடு | :- | வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்<br>90, திருநாவற்குளம், வவுனியா |
| முதலாம் பதிப்பு | :- | 2023 ஜனவரி 15 |
| அச்சுப்பதிப்பு | :- | வாணி கணினிப் பதிப்பகம்.<br>இல 85, கந்தசுவாமி கோவில்வீதி,<br>வவுனியா 024- 2223658 |
| விலை | :- | ரூபா 1000/= |
| ISBN | :- | 978-624-6141-02-8 |

---

| | | |
|---|---|---|
| Name | :- | **Agalangan Pakthip Paadalkal** |
| Type | :- | Lyrics (Religion) |
| Author | :- | **Agalangan (N.Tharmarajah)** |
| Address | :- | 90, Thirunavatkulam, Vavuniya. |
| Copyrights | :- | Mrs. Pooraneswary Tharmarajah B.A(Hons) |
| Published by | :- | Circle of Arts and Literary friends Vavuniya.<br>90, Thirunavatkulam, Vavuniya. |
| First Edition | :- | 2023 January 15 |
| Printer | :- | Vaani Computer Printing Centre.<br>No 85, Kanthasamy Kovil Road,<br>Vavuniya. 024 2223658 |
| Price | :- | Rs 1000/= |
| ISBN | :- | 978-624-6141-02-8 |
| Email | :- | akalankan04@gmail.com |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வானொலியில் மெல்லிசைப் பாடல்கள் பாடிய
வவுனியா மாவட்டத்தின் முதல் மெல்லிசைக் கலைஞர்
ஈழத்துச் சௌந்தரராஜன்
கலைமாமணி **இரத்தினசிங்கம் சிவசோதி**
அவர்களுக்கு

இந்நூல்
காணிக்கையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வாழ்த்து

இசைத்திட இனிதாகும் எங்கள் பெருமை - தமிழ்
இன்பமோ சொல்லினிலே சொல்லல் அருமை
திசைதோறும் எங்கள்மொழி செய்யும் புதுமை - இது
தேவர்க்கும் கடவுளர்க்கும் என்றும் இனிமை.

(இசைத்.... )

பக்தியின் மொழி தமிழாம்
பரவசந் தரும் புதிராம்
நித்தியம் வளம் பெருகும்
நிகரிலா மொழி தமிழாம்.

கம்பனும் வள்ளு வரும்
கவிஇளங் கோவுந் தந்த
செம்மை மிகு கவிதை
சிந்தை தனை நிறைக்கும். (இசைத்.....)

ஔவையின் அறி வுரைகள்
அருண கிரிப் புகழ்கள்
செவ்வை மிகு தமிழில்
சேக்கிழார் தரும் கவிகள்

மூவர் தமிழ் அமுதும்
முடி மன்னர் ஆதரவும்
தேவர் களும் பருகும்
திருவா சகப் பொலிவும் (இசைத்....)

நல்லூர் நா வலரும்
நல்ல விபு லானந்தரும்
பல்லோர் புகழ்ந் தேத்தும்
பாரதி வள்ள லாரும்

குமர குரு பரரும்
குரு தாயு மானவரும்
உமறுப் புல வரொடு
உயர் வீர மாமுனிவர்.

(இசைத்....)

**இசையமைப்பு : திரு.சோ.ஜெயச்சந்திரா**

**பாடல் : அகளங்கன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| வெளியீட்டுரை | | 12 |
| இந் நூலாசிரியர் | | 13 |
| அணிந்துரை | | 15 |
| முன்னுரை | | 17 |
| 1. | பார்போற்றும் கணபதி | 27 |
| 2. | இல்லை என்போர்களும் | 28 |
| 3. | நல்ல குடும்பம் | 29 |
| 4. | என்னையும் ஏன் படைத்தான் | 30 |
| 5. | எத்தனை கோடி | 31 |
| 6. | கருமாரி அபிராமி காளியம்மா | 33 |
| 7. | கருணை வடிவானவளே | 34 |
| 8. | கருணைப் பெருவடிவே | 35 |
| 9. | கலைகளெல்லாந் தருபவளே... | 36 |
| 10. | தொந்திக் கணபதி | 37 |
| 11. | நலந்தரும் விநாயகன் | 38 |
| 12. | விக்கினங்கள் தீர்ப்பான் | 39 |
| 13. | சரணம் என்றே தொழுவாய் | 40 |
| 14. | உன்னையன்றி யாரை | 41 |
| 15. | வண்ணமலர்ச் சோலையிலே... | 42 |
| 16. | கன்னி என்னை ஏன் மறந்தாய்? | 43 |
| 17. | என்னை ஏன் தவிக்க விட்டாய்? | 44 |
| 18. | உளம் நொந்து ஓடிவந்தேன் | 45 |
| 19. | இறைவா இது என்ன சோதனையோ? | 46 |
| 20. | மயிலாகப் பிறந்தேனில்லை | 47 |
| 21. | தாமரை மலர் கண்ணில் | 48 |
| 22. | கருணைக் கடலே கந்தா | 49 |
| 23. | நீ இல்லாத உலகேது முருகா | 50 |
| 24. | ஓமெனும் மந்திரத்தில் பாடி | 51 |
| 25. | குன்றுதோ றாடிவரும் குமரன் | 52 |
| 26. | என்னோடு விளையாட எழுந்தோடி வா... | 53 |
| 27. | கோல மயில் ஏறி வரும் குமரன் | 54 |
| 28. | சிவாய நமவென்றே – திருக்கேதீஸ்வரம் | 55 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 29. | திருக்கோணேச்சரம் | 56 |
| 30. | காணக் கண்கோடி வேண்டும் - திருக்கோணேச்சரம் | 57 |
| 31. | வ/சுத்தானந்த நடராசர் | 58 |
| 32. | வ/செட்டிகுளம் வெளவாலை | 59 |
| 33. | முன்னேஸ்வரம் - சிலாபம் | 60 |
| 34. | கீரிமலை நகுலேஸ்வரம் | 61 |
| 35. | ஆடுகின்றார் காரை சுந்தரேசர் | 62 |
| 36. | மு/ஒட்டிசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் | 63 |
| 37. | ம/கொக்கட்டிச் சோலை தான்தோன்றி ஈஸ்வரர் | 64 |
| 38. | யா/சுதுமலை விஸ்வநாதர் | 65 |
| 39. | வ/இரணை இலுப்பைக்குளம் ஈஸ்வரன் | 66 |
| 40. | வ/சிவபுரம் சிவபுர சுந்தரேஸ்வரர் | 67 |
| 41. | வ/கோயில்க்குளம் அகிலாண்டேஸ்வரர் | 68 |
| 42. | ம/அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் | 69 |
| 43. | ஈஸ்வரா பரமேஸ்வரா - யாழ் பல்கலைக்கழகம் | 70 |
| 44. | வ/திருநாவற்குளம் காசிவிசுவநாதர் | 71 |
| 45. | வ/கூமாங்குளம் சிவன் | 72 |
| 46. | வ/தோணிக்கல் ஆதி சிவன் | 73 |
| 47. | வ/புதூர் நாகதம்பிரான் | 74 |
| 48. | வ/திருநாவற்குளம் நாகதம்பிரான் | 75 |
| 49. | திருக்கேதீச்சரத்திலே | 76 |
| 50. | பாரோரும் பணிகின்ற கேதீச்சரா | 77 |
| 51. | திருக்கேதீச்சரம் ஒரு தேன்பொந்து | 78 |
| 52. | கேடுகள் அகற்றும்பதி கேதீச்சரம் | 79 |
| 53. | திருக்கேதீச்சரத்தினிலே | 80 |
| 54. | கேதீச்சரர் அழைக்கின்றார் | 81 |
| 55. | ஈழத்தின் வடக்கினிலே - திருக்கேதீச்சரம் | 82 |
| 56. | எண்ண எண்ண இனிக்கிறார் - திருக்கேதீச்சரம் | 83 |
| 57. | மயில் நடமாடும் | 84 |
| 58. | பாவங்களைக் கழுவும் பாலாவி | 85 |
| 59. | நாவொன்று போதாது தாயே - வ/குருமன்காடு | 86 |
| 60. | குருமன் காட்டில் குடிகொண்ட | 87 |
| 61. | வற்றாப்பளை கண்ணகையம்மா | 88 |
| 62. | வ/அரசர்பதி கண்ணகை அம்மன் | 89 |
| 63. | வ/கிடாய்ச்சூரி கண்ணகை அம்மன் | 90 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 64. | வ/பண்டாரிகுளம் முத்துமாரி அம்மன் | 91 |
| 65. | தெல்லிப்பழை துர்க்கை அம்மன் | 92 |
| 66. | திருகோணமலை நகரக் காளியம்மா | 93 |
| 67. | மாத்தளையில் மகிழ்ந்திருக்கும் | 94 |
| 68. | அழகுக்கு அழகு சேர்க்கும் நயினைத் தாய் | 95 |
| 69. | யாழ் எழில் வண்ணைக் காமாட்சி | 96 |
| 70. | யா/காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் | 97 |
| 71. | வ/தோணிக்கல் நாகபூஷணிஅம்மன் | 98 |
| 72. | வ/குட்ஸ்செட் வீதி கருமாரி அம்மன் | 99 |
| 73. | வ/இறம்பைக்குளம் கருமாரி அம்மன் | 100 |
| 74. | வ/குருக்கள் புதுக்குளம் மீனாட்சி அம்மன் | 101 |
| 75. | வ/புளியங்குளம் முத்துமாரி அம்மன் | 102 |
| 76. | வ/கோயில்க் குஞ்சுக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் | 103 |
| 77. | வ/கற்குழி முத்துமாரி அம்மன் | 104 |
| 78. | வ/ஓமந்தை நாவற்குளம் வீரசக்தி அம்மன் | 105 |
| 79. | வ/வேப்பங்குளத்துக் காளியம்மா | 106 |
| 80. | வ/ சூசைப்பிள்ளையார்குளம் முத்துமாரி அம்மன் | 107 |
| 81. | புன்னைச்சோலைக் காளியம்மா – மட்டக்களப்பு | 108 |
| 82. | டென்மார்க் பிராண்டா அபிராமி | 109 |
| 83. | ம/மாகாளியே திரிசூலியே – புன்னைச்சோலை | 110 |
| 84. | காளியம்மா எங்கள் காளியம்மா – புன்னைச்சோலை | 111 |
| 85. | அபிராமியே பிராண்டா – டென்மார்க் | 112 |
| 86. | வவுனியா வெளிவட்டவீதி சிந்தாமணி விநாயகர் | 113 |
| 87. | வவுனியா குடியிருப்பு சித்தி விநாயகர் | 114 |
| 88. | ஊற்றங்கரைப் பிள்ளையார் – தண்ணீரூற்று | 115 |
| 89. | காட்டு விநாயகர் – முள்ளியவளை | 116 |
| 90. | விநாயகனைத் தொழுதால் (வு/ த.ம.ம.வி. வித்யா விநாயகர்) | 117 |
| 91. | விநாயகனே ஸ்ரீ விநாயகனே (வு/ குருமன்காடு ஸ்ரீ விநாயகர்) | 118 |
| 92. | வவுனியா ஆதி விநாயகர் | 119 |
| 93. | வ/வைகாழி கூழாங்குளம் பிள்ளையார் | 120 |
| 94. | வவுனியா புளியடி விநாயகர் | 121 |
| 95. | வவுனியா உக்குளாங்குளம் பிள்ளையார் | 122 |
| 96. | வவுனியா வேப்பங்குளம் பிள்ளையார் | 123 |
| 97. | வ/ஓமந்தை வீரகத்திப் பிள்ளையார் | 124 |
| 98. | வ/நொச்சிமோட்டை கருங்காலி மரத்தடிப் பிள்ளையார் | 125 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 99. | முறிகண்டிப் பிள்ளையார் | 126 |
| 100. | வ/நெளுக்குளத்துப் பிள்ளையார் | 127 |
| 101. | வ/சாம்பல்த் தோட்டப் பிள்ளையார் | 128 |
| 102. | வ/பம்பைமடுச் சந்திப் பிள்ளையார் | 129 |
| 103. | வ/தவசிகுளம் பால விநாயகர் | 130 |
| 104. | வ/கூமாங்குளம் சித்தி விநாயகர் | 131 |
| 105. | வ/வெளிக்குளம் சித்தி விநாயகர் | 132 |
| 106. | வ/புதுக்குளம் சித்தி விநாயகர் | 133 |
| 107. | வ/சமளங்குளம் கல்லுமலைப் பிள்ளையார் | 134 |
| 108. | வ/முதிரைத் தோட்டம் தேடிவந்த பிள்ளையார் | 135 |
| 109. | மானிப்பாய் மருதடி விநாயகர் | 136 |
| 110. | குயின்ஸ்லாந்து பிரிஸ்பேர்ன் செல்வவிநாயகர் | 137 |
| 111. | வ/கரப்பங்காடு வரசித்தி விநாயகர் | 138 |
| 112. | வேல் இருக்கும் உலகினிலே - வவுனியா நகர் | 139 |
| 113. | சிந்தை செய்வாய் மனமே - வவுனியா நகர் | 140 |
| 114. | வ/ஓமந்தை மருதோடை முருகன் | 141 |
| 115. | வ/தாண்டிக்குளம் பதியினிலே | 142 |
| 116. | வ/சிதம்பரபுரம் திருப்பழனி முருகன் | 143 |
| 117. | வ/நெளுக்குளம் முருகா | 144 |
| 118. | வ/பம்பைமடு முருகா | 145 |
| 119. | வ/புளியங்குளம் முருகா | 146 |
| 120. | வ/ஆறுமுகத்தான் புதுக்குளத்து முருகா | 147 |
| 121. | நல்லூர் அலங்காரக் கந்தன் | 148 |
| 122. | செல்லச்சன்னதி அன்னதானக் கந்தன் | 149 |
| 123. | மாவிட்டபுரம் அபிஷேகக் கந்தன் | 150 |
| 124. | குருநாத சுவாமிகள் - யா/இறங்கண்யவளை | 151 |
| 125. | ம/மண்டூர்க் கந்தன் | 152 |
| 126. | குன்றாத இளமையுடன் குமரன் | 153 |
| 127. | கிளிநொச்சி கந்தசுவாமி | 154 |
| 128. | பேராதனைக் குறிஞ்சிக் குமரன் | 155 |
| 129. | குறவள்ளி தனைக் கொஞ்சும் - குறிஞ்சிக் குமரன் | 156 |
| 130. | காட்டுக் குறவள்ளி காதலா - கதிர்காமம் | 157 |
| 131. | வவுனியா நகரின் நடுவிலுறை நாயகன் | 158 |
| 132. | வாழ்வுக்கு உகந்த பெருமான் - வவுனியா நகர் | 159 |
| 133. | கந்தனே என்று உன்னை - வவுனியா நகர் | 160 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 134. | அழகான சித்திரத் தேர் – வவுனியா நகர் | 161 |
| 135. | தேரேறி வருகிறான் முருகன் – வவுனியா நகர் | 162 |
| 136. | எந்த வினையானாலும் – வவுனியா நகர் | 163 |
| 137. | குறைகேட்டால் போதும் – வவுனியா நகர் | 164 |
| 138. | வவுனியா நகர் வாழும் திருமுருகா | 165 |
| 139. | மண்ணவரைக் காப்பதொரு வேலையா - வவுனியா நகர் | 166 |
| 140. | வேல்பிடித்து நின்றவனே – வவுனியா நகர் | 167 |
| 141. | கலை சிறந்த வவுனியாக் கந்தன் – வவுனியா நகர் | 168 |
| 142. | வா என்று அழைத்தால் – வவுனியா நகர் | 169 |
| 143. | யா/நல்லை நகருறைகின்ற | 170 |
| 144. | வ/கள்ளிக்குளம் கிருஷ்ணர் | 171 |
| 145. | திருமலை நிலாவெளி பொற்கோவில் | 172 |
| 146. | வ/கோயில்க்குளம் கண்ணபிரான் | 173 |
| 147. | உடப்பு பார்த்தசாரதி | 174 |
| 148. | வ/பம்பைமடு நரசிங்கர் | 175 |
| 149. | வ/பூந்தோட்டம் நரசிங்கர் | 176 |
| 150. | வ/தாண்டிக்குளம் ஐயனார் | 177 |
| 151. | சூல அசைவினிலே – (வ/2ம் குறுக்குத்தெரு ஞானவைரவர்) | 178 |
| 152. | வ/வைரவ புளியங்குளம் ஞான வைரவர் | 179 |
| 153. | தவசிகுளம் ஞான வைரவர் | 180 |
| 154. | வ/வேப்பங்குளம் ஞான வைரவர் | 181 |
| 155. | உப்புவெளியிலே முருகா புரியிலே – திருகோணமலை | 182 |
| 156. | வ/பம்பைமடு வைரவா | 183 |
| 157. | முருகா உன் லீலை | 184 |
| 158. | ஜெயசித்தி விநாயகர் (சேத்துப்பட்டு - சென்னை) | 185 |
| 159. | பாழையத்தம்மா (சேத்துப்பட்டு - சென்னை) | 186 |
| 160. | கருக்காத்த அம்மன் (சேத்துப்பட்டு - சென்னை) | 187 |
| 161. | பிரசாந்தப் பிள்ளையார் (சேத்துப்பட்டு - சென்னை) | 188 |
| 162. | திரு ஊஞ்சற் பாமாலை (சின்னத்தம்பனை ஸ்ரீ சித்திவிநாயகர்) | 189 |
| 163. | திரு ஊஞ்சற் பாமாலை (புதுவிளாங்குளம் விளாங்குளேஸ்வரர்) | 194 |
| 164. | இந் நூலாசிரியரின் நூல்கள் | 199 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியீட்டுரை

மீண்டும் தொடங்கும் மிடுக்குடன் இன்னுமொரு நூல் வெளியீட்டுடன் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் தனது இலக்கிய நண்பர்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றது.

வட்டம் வெளியிடும் 46 ஆவது நூலாகவும் தமிழ்மணி அகளங்கனின் 52 ஆவது நூலாகவும் "அகளங்கன் பக்திப் பாடல்கள்" நூல் அமைகின்றது.

ஏற்கனவே இசைப்பாடல்களை "இசைப்பாமாலை" "அகளங்கன் இசை நடனப் பாடல்கள்" மற்றும் "அகளங்கன் கவிதைகள்" நூல்களிலும் தந்த கவிஞர், "அகளங்கன் பக்திப் பாடல்கள்" என்ற இந்த நூலினூடாக ஒரு புதிய சாதனை படைத்து இனிமை கூட்டுகிறார்.

தமிழ் நாட்டில் வெளியிடப்படும் பாடல்களை விஞ்சும் அளவிற்கு எமது கவிஞர்களின் பாடல்களும் காணப்படுவது ஒன்றும் வெறும் புகழுரையல்ல.

பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்களின் **"கற்பக வல்லி"** பாடல் ரி.எம். சௌந்தரராஜன் அவர்களின் குரலில் கூட்டிய பக்தி உலகம் அறிந்ததே. அவர்களின் இன்னொரு பாடலான **"சுட்டிபுரம் வாழும்"** பாடல் சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் குரலில் தேனாய் இனித்து, எம்மண்ணைப் பரவசப்படுத்திப் பெருமைப்படுத்தியதை மறக்கமுடியுமா?.

எமது கோவில்கள் பற்றி **"தெய்வம் தந்த வீடு"** என்ற இலங்கைத் தமிழ்த் திரைப்படத்திற்கு பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள் எழுதிய **"நாதம் கேட்குதடி"** என்ற பாடல் எமது உள்ளங்களைக் கொள்ளை கொண்டது போல, தமிழ்மணி அகளங்கன் எழுதிய கோவில்களின் புகழ்பாடும் பக்திப் பாடல்களும் எம் நெஞ்சை நிறைக்கும் என நம்புவோம்.

தேவாரப் பாடல்கள் பெற்ற தலங்கள் பெற்ற சிறப்பைப்போல, எமது தலங்களும் பெற்று, நிறைவான பக்தியையும் வாழ்வையும் எம்மண்ணில் பெற வழிசமைக்க வழிகோலுவன ஈழத்துப் பக்திப் பாடல் மரபை மெருகூட்டும் எமது கவிஞரின் பக்திப் பாடல்கள்.

தொடரட்டும் கவிஞரின் பணிகள். படரட்டும் பக்திப் பரவசத்துடன் நம்மவர்களின் மனங்களில்.

**கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்.
ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
செயலாளர், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந் நூலாசிரியர்

சொந்தப்பெயர் : நாகலிங்கம் தர்மராஜா
புனைபெயர் : அகளங்கன்
பிறந்த இடம் : இலங்கையின் வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்திலுள்ள பம்பைமடு என்னும் கிராமம்.
பிறந்த திகதி : 04.12.1953
முகவரி : 90, திருநாவற்குளம், வவுனியா
Email : akalankan 04@gmail.com
தொழில்நிலை : ஓய்வுநிலை ஆசிரியர்
பொது ஈடுபாடு : தமிழ், சைவ, சமூக முன்னேற்றத்துறை,
கலை இலக்கிய ஈடுபாடு : தமிழிலக்கியம், சைவசமயம், சமூகம் சார்ந்த ஐந்நூறுக்கும் மேற்பட்ட கட்டுரைகள். கவிதை, நாடகம், பாடல், புனைகதை, சிறுவர் இலக்கியம், பேச்சு, புராண படனம்,
நூல் வெளியீடு : ஐம்பதிற்கும் மேற்பட்ட பல்துறைசார் நூல்கள், 25க்கும் மேற்பட்ட சிறப்பு மலர்களின் ஆசிரியர்

**பெற்ற பட்டங்களில் சில**

காவிய மாமணி, கவிமாமணி, திருநெறிய தமிழ் வேந்தர், பல்கலை எழில், புராணபடன புகழ் தகை, புராண படன வித்தகர், விநாயகர் புராண வித்தகர், இலக்கியச் சுடர், சிவனருட் செல்வர். வாகீச கலாநிதி, செஞ்சொற் செல்வர், வித்தியா சுரபி, முத்தமிழ்ச் சுரபி, செந்தமிழ்க் கொண்டல், சைவத் தமிழியற் கோ, செந்தமிழ் வாரிதி, முத்தமிழ்க் கலைச் சுடர், தமிழியல் வித்தகர், செம்பணிச் சிகரம், சொல்வேந்தர், தமிழறிஞர், தமிழ்முகில், தமிழ்க்கடல், கவிமணி, தமிழ்மாமணி, செஞ்சொற்சிலம்பன், செந்தமிழ்ப்பாரிவேள், கலாபூஷணம், தமிழ்மணி, கலைமாமணி, கலாநிதி, தமிழியல் வாரிதி.

**பெற்ற கௌரவங்களில் சில**

**இலங்கையில்**

- ஆளுநர் விருது (வடக்கு - கிழக்கு மாகாணம்)
- நாவலர் விருது (மன்னார் அறநெறிப் பாடசாலைகளின் ஒன்றியம்)
- கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை விருது. (நாடகம் - யாழ் இலக்கிய வட்டம்)
- முத்தமிழறிஞர் சொக்கன் விருது (முத்தமிழ் - யாழ் இலக்கிய வட்டம்)
- முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பி விருது (மன்னார் தமிழ்ச்சங்கம்)
- பாரதி விருது (கவிதை - மன்னார் மாவட்ட சைவக் கலை இலக்கிய மன்றம்)
- நுழைபுலம் ஆய்வு விருது (ஆய்வு - கொழும்பு கம்பன் கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாழ்நாள் சாதனையாளர் விருது (எழுத்து – கல்வியமைச்சு கொழும்பு)
- வாழ்நாள் சாதனையாளர் விருது (இரா உதயணன், இலங்கை, இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்)
- ஐ.பி.சி (I.B.C) வானொலி தொலைக்காட்சி நிறுவனத்தின் தமிழ் ஆளுமைக்கான விருது (பழந்தமிழ் இலக்கியம்)

**இந்தியாவில்**

- விபுலானந்தர் படைப்பிலக்கிய விருது – **முற்றத்துக் கரடி** சிறுகதைத் தொகுப்பு (தமிழ் நாடு எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழக தமிழ்ப் பேராயம்)
- தமிழ் நாடு திருப்பூர் விருது – **முற்றத்துக் கரடி** சிறுகதைத் தொகுப்பு
- தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற அறந்தை நாராயணன் விருது – **கங்கையின் மைந்தன்** (நாடகத் தொகுப்பு)
- தமிழ் நாடு திருவையாறு தமிழ் ஐயா கல்விக் கழக விருது.
- புதுச்சேரி (பாண்டிச்சேரி) குழந்தைகள் கலை இலக்கிய வளர்ச்சிக் கழக விருது.

**நூல்களுக்காகப் பெற்ற விருதுகள்**

- தேசிய சாகித்திய மண்டல விருது – மூன்று நூல்கள்.
- தேசிய சாகித்திய மண்டல சான்றிதழ் – மூன்று நூல்கள்
- வடக்கு கிழக்கு மாகாண சிறந்த நூற் பரிசு – இரண்டு நூல்கள்.
- வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு – ஆறு நூல்கள்.
- கொழும்பு தமிழ்ச்சங்கம் – ஒரு நூல்
- எழுத்தாளர் ஊக்குவிப்புமைய தமிழியல் விருது – நான்கு நூல்கள்.
- இலங்கை இலக்கியப் பேரவை விருது – ஒரு நூல்
- இலங்கை இலக்கியப் பேரவை சிறப்புச் சான்றிதழ் – இரண்டு நூல்கள்.
- கொடகே தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழ் – ஒரு நூல்
- இரா உதயணன் இலக்கிய விருது – ஒரு நூல்

**பாடத்திட்டத்தில்**

**இலங்கை கல்வி அமைச்சின் பாடத்திட்டத்தில்**

- **"குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்"** – மரபுக்கவிதை – க.பொ.த.சாதாரண தரம், தமிழ்மொழி
- **"சேற்று வயற் காட்டினிலே"** – இசைப்பாடல் – க.பொ.த.உயர்தரம் – கர்நாடக சங்கீதம்
- **"ஔவையாரும் நெல்லிக்கனியும்"** – நாடகம் – ஐந்தாம் ஆண்டு – தமிழ்

**கிழக்கு மாகாண முன்பள்ளி பாடத்திட்டத்தில்**

- **"அம்புலிமாமா"** – குழந்தைப் பாடல்

**டாக்டர் ஓ.கே.குண நாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

அகளங்கன் அவர்களின் 52 வது நூலான **'அகளங்கன் பக்திப் பாடல்கள்'** என்ற நூலுக்கு அணிந்துரை எழுதுவதற்கு கிடைத்த வாய்ப்பிற்கு நன்றி கூறுகின்றேன்.

வழமையாகக் கவிஞர்கள் கற்பனையாகச் சிந்தித்துப் பக்திப் பாடல்கள் எழுதுவார்கள். சிலர் தாம் நேரடியாகச் சென்று பார்த்த ஆலயங்கள் பற்றியும், வழிபட்டதால் ஏற்பட்ட அனுபவங்களையும் வைத்துக் கொண்டு பக்திப்பாடல் எழுதுவார்கள். உண்மையில் குறிப்பிட்ட ஆலயத்தை தரிசித்த அனுபவத்தோடு, அதனை இரை மீட்டு எழுதப்படும் பாடல் வரிகள் உயிருள்ளவை, உணர்வுள்ளவை.

பெருநிலப்பரப்பின் (வன்னி) வரலாற்றைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் எனக்கு, இவருடைய பாடல்களில் உள்ள வரலாற்றுத் தகவல்கள் மகிழ்ச்சியைத் தருகின்றன. வடபுலத் தமிழரின் வரலாற்றடை யாளமாகத் திகழும் **'யாழ்ப்பாண வைபவமாலை'** மயில்வாகனப் புலவரால் இயற்றப்பட்டது.

**"வையாபாடல்"** என்ற நூல் பாடல்களாகவும் வசன நடையிலும் எழுதப்பட்டுள்ளது. தொன்று தொட்டு தமிழ் வரலாற்றுக் குறிப்புகளை வைத்துக் கொண்டு கவி பாடியவர்கள் அதிகம். அவர்களே வடபுல வரலாற்றாசிரியர்களாகவும் திகழ்கிறார்கள்.

விசேடமாக கோவில்களுக்காகப் பாடப்பட்ட பிரபந்தங்கள், ஊஞ்சற் பாடல்கள், பக்திப்பாடல்கள் போன்றவற்றில் ஆலயங்கள் அமைந்துள்ள பிரதேசங்களின் வரலாறுகள் இலைமறைகாயாக புதைந்திருப்பதைக் கண்டிருக்கின்றேன். இதனால் பிரதேச வரலாற்றிற்கு அவை முக்கியமானவை.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகியவற்றை உள்ளடக்கிய தேர்தல் தொகுதி மற்றும் ஏனைய இடங்களில் உள்ள பெரிய சிறிய ஆலயங்களின் சிறப்புக்கள் பாடல்களாகப் பாடப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டங்களில் அமைந்திருக்கும் கோவில்களில் நேரடியாக விஜயம் செய்த ஆலயங்களின் சிறப்புகள் பற்றியும் பாடல்கள் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்று தொட்டு எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்களில் உள்ள கவிதைகளில் அந்தந்த நாட்டின் வரலாறுகள் அமைவிடங்கள் பற்றிய விபரங்கள் புதைந்திருக்கின்றன. அவற்றைத் தேடவேண்டியது வரலாற்றா சிரியர்களின் பொறுப்பு என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**வடதிசையில் மன்னகுளம், தெற்கே புதூர்**
**வற்றாத ஆறாக ஓடி நிற்கும்**
**குடதிசையில் பாலியாறு கிழக்கே குளம்**

எனப் புதுவிளாங்குளம் விளாங்குளேஸ்வரர் மீது பாடப்பட்ட ஊஞ்சற்பாடலில், புதுவிளாங்குளம் விளாங்குளேஸ்வரர் ஆலயத்தின் அமைவிடம் பற்றி இந்தத் தொகுப்பில் கூறியுள்ளதை உதாரணமாகக் கூறலாம். இப்படியாக ஒவ்வொரு பாடலும் தகவல்களைத் தரும் பாடல்களாக அமைந்துள்ளன.

இதுவரை 51 நூல்களை எழுதி வெளியிட்டு அகளங்கன் சாதனை படைத்துள்ளார். அவர் தொடர்ந்து பல நூல்களை வெளியிட்டு பெருநிலப் பரப்பில் அதிக நூல்களை வெளியிட்ட பதிவில், பெருமைக்குரிய சாதனையாளராகத் திகழ வேண்டும். அதற்கான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தமிழ் நிதி அருணா செல்லத்துரை**
இல.68, வைரவர் கோவில் வீதி,
வைரவர் புளியங்குளம்,
வவுனியா, இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## இசைப் பயணம்

1970 இல் நான் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் (இப்போது வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் - தேசியப் பாடசாலை) க.பொ.த. சாதாரண தர வகுப்பு மாணவனாகப் படித்துக் கொண்டிருந்தபோது (வயது 17) **"சந்திரமதி சுயம்வரம்**: என்ற தலைப்பில் வில்லுப் பாட்டொன்றை எழுதினேன்

எனது சக மாணவர்களோடு சேர்ந்து அந்த ஆண்டில் சரஸ்வதி பூசைநாளில் அவ்வில்லுப் பாட்டை மேடையேற்றினேன். அதிலுள்ள பாடல்கள் பெரும்பாலும் திரைப்படப் பாடல் மெட்டுக்களையே கொண்டி ருந்தன. அப்போதுதான் எனது இசைப்பாடல் பயணம் ஆரம்பமானது.

நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் (அப்போது இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகம்) கல்வி பயின்றுகொண்டிருந்த காலத்தில் 1977 பிற்பகுதியில் **திரு உமாகாந்தன்** அவர்களோடு பழக்கம் ஏற்பட்டது

அவர் அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட மாணவனாக வயலின் படித்துக் கொண்டிருந்தார். அவரின் வேண்டுகோளுக்கிணங்கி 1978 இல் சில மெல்லிசைப் பாடல்களை எழுதிக் கொடுத்தேன். அவர் இசையமைத்து தனது சக மாணவனாகிய **மாணிக்கராஜா** வின் மூலம் பல இடங்களிலும் ஒலிக்கச் செய்தார்.

அவர் வயலினில் மெட்டை வாசிக்க உடனடியாகவே சில பாடல்களை எழுதி மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்தேன். பேராதனைப் பல்கலைக் கழக இந்துமாமன்ற வெள்ளிவிழா நிகழ்வுகள் பேராதனைக் குறிஞ்சிக் குமரன் ஆலயத்தில் நடைபெற்றபோது அந்நிகழ்வில் எனது சில பாடல்களை திரு உமாகாந்தன் குழுவினர் பாடினர்.

அப்பாடல்களில் சில இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி விழாவில் எனது **"ஈஸ்வரா - பரமேஸ்வரா! அருள் நீதாராய்"** என்ற பாடல் திரு.உமாகாந்தன் அவர்களின் இசையில் பாடப்பட்டது. அப்பாடல் இப்போது இல்லை. இருப்பினும் அதே தொடக்கத்தோடு இத்தொகுப்பிற்காக ஒருபாடலை எழுதியுள்ளேன். அவருக்காக எழுதப்பட்ட சில பாடல்கள் தொலைந்துவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு இலங்கை வானொலிக்கு மெல்லிசைப் பாடல்களை எழுத விரும்பினேன். **"சேற்று வயற் காட்டினிலே நாற்றுநட வந்த பெண்ணே..."** என்ற கிராமிய மணம் கமழும் பாடலொன்றை எழுதினேன்.

அப்பாடலை அக்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்த **கலாநிதி நா.சுப்பிரமணிய ஐயர்** அவர்கள் பார்த்து மகிழ்ந்து அப்போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த **திரு. அருணா செல்லத்துரை** அவர்களுக்கு அனுப்பிவைத்தார்.

அக்காலத்தில் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வந்திருந்த தமிழ்த் திரைப்படப் பிரபல இசையமைப்பாளரும், விஸ்வநாதன் இராமமூர்த்தி இரட்டையர்களில் ஒருவருமான **திரு.T.K.ராமமூர்த்தி** அவர்களிடம் அப்பாடல் போய்ச் சேர்ந்தது.

அவர் அப்பாடலுக்கு அருமையாக இசையமைத்தார். இலங்கைப் பாடகர்களான திரு.T.கிருஷ்ணன் அவர்களின் ஆரம்ப ஒலியோடு, திரு.S. பத்மலிங்கம், திருமதி.ஜெகதேவி விக்னேஸ்வரன் ஆகியோரின் சோடிக்குரலில் 1979 இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மெல்லிசைப்பாடலாக வெளிவந்து பெரும் வரவேற்பைப் பெற்றது.

எனக்கு இசைப்பாடல் எழுதும் அங்கீகாரம் கிடைத்துவிட்டதாக மனம் மகிழ்ந்தேன். தொடர்ந்தும் சில மெல்லிசைப் பாடல்களை வானொலிக்காக எழுதினேன்.

திரு.T.V.பிச்சையப்பா, திரு M.முத்துச்சாமி, திரு.ரொக்சாமி முதலானோரின் இசையமைப்பில் சிங்கள மொழிப் பாடகி சுயாத்தா அத்தநாயக்கா, திரு. ஸ்ரனி சிவானந்தன், திரு K.R.கணேஸ், திரு. யோகராஜன் முதலானோர் எனது பாடல்களைப் பாடினர். எனது இசைப் பாடல் பயணத்தில் பங்குகொண்ட இவர்கள் யாவருக்கும் எனது நன்றி.

**"சேற்று வயற் காட்டினிலே..."** பாடல் இப்போது க.பொ.த. உயர்தரத் திற்கான கர்நாடக சங்கீத பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி யளிக்கிறது.

எனது பக்திப் பாடல்கள் சிலவும் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகியுள்ளன. **"சோதிட மலர்"** என்ற சஞ்சிகையிலும் வெளி வந்திருக்கின்றன.

1982இல் வவுனியாவில் நடைபெற்ற பண்டாரவன்னியன் விழாவில் பண்டார வன்னியன் பற்றி நான் எழுதி விழா மலரில் இடம்பெற்ற சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களை தமிழகத்திலிருந்து வந்திருந்த பாடகி **குமாரி பிறேமினா** அவர்கள் இசையமைத்துப் பாடினார்கள். அவர்களுக்கு நன்றி.

வவுனியாவில் எனது பக்திப் பாடல்களையும் வேறு பாடல்களையும் முதன் முதல் இசையமைத்துப் பாடியவர் **கலாபூஷணம் திரு.கந்தையா கனகேஸ்வரன்**, அவருக்கு நன்றி.

**கலாபூஷணம் திருமதி.விமலலோஜினி கனகேஸ்வரன்** அவர்கள் எனது சில பாடல்களுக்கு இசையமைத்து தனது மகள் **துகாரதி**யையும் தனது மாணவிகளையும் பாடச்செய்து என்னை உற்சாகப் படுத்தினார். இப்பொழுதும் அவரது மாணவிகள் எனது பாடல்களைப் பல இடங்களிலும் பாடிவருகிறார்கள். இவர்கள் யாவருக்கும் நன்றி.

**அமரர் கலாபூஷணம் தேவிமனோகரி நாகேஸ்பரன்** அவர்களே எனது பல நாட்டிய நாடகப் பாடல்களுக்கும். பல நடனப் பாடல்களுக்கும், பல மெல்லிசைப் பாடல்களுக்கும் இசையமைத்தவர். அவருக்கு எனது **"அகளங்கன் இசை நடனப் பாடல்கள்"** நூலைச் சமர்ப்பணம் செய்திருந்தேன். அவருக்கு நன்றி.

**திரு.சோ.ஜெயச்சந்திரா** அவர்களின் இசையமைப்பில் எனது **"இசைத்திட இனிதாகும் எங்கள் பெருமை..."** என்று தொடங்கும் தமிழ் வாழ்த்துப் பாடலை **செல்வி உசேனி ஶ்ரீதரன்** அவர்கள் பாடினார்.

பல விழாக்களில் தமிழ் வாழ்த்தாகப் பாடப்பட்டுவரும் இப்பாடல் பெரும் வரவேற்பைப் பெற்றது. இப்பாடல் நாடுகடந்தும் ஒலிக்கிறது.

குறிப்பாக உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையின் (WTBF) நிறுவுனர் திரு.கந்தையா சிங்கம் அவர்கள் தனது நிகழ்வுகளில் இப்பாடலைப் பல நாடுகளிலும் தமிழ் வாழ்த்துப் பாடலாக ஒலிக்கச் செய்கிறார்.

ஜேர்மனி தமிழ் வானவை நிறுவுனர் **திருமதி. சந்திரகௌரி சிவபாலன் (கௌசி)** அவர்கள் ஜேர்மனியிலிருந்து நடத்தும் தமிழ் வானவை இணைய வழிப் பன்னாட்டு இலக்கியச் சந்திப்பு நிகழ்வுகளில் இப்பாடலை ஒலிக்கச் செய்துவருகின்றார்.

சுவிற்சர்லாந்து நாட்டில் லுற்/சூர்சே தமிழ்ப்பள்ளி ஆசிரியை **கவிஞர் திருமதி.நா.இரதி கமலநாதன்** அவர்கள் தனது மாணவர்களுக்கு இப்பாடலுக்கான அபிநய நடனத்தைப் பழக்கி ஆற்றுகை செய்து இப்பாடலைப் பரப்பி வருகிறார். இவர்களுக்கு எனது நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடல் இறுவட்டாகவும் வெளியிடப்பட்டது. இதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எனது நன்றி.

கலாசூரி. திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன், கலாபூஷணம் திருமதி.வதனி ஸ்ரீதரன், திரு.சோ.ஜெயச்சந்திரா, திருமதி வேல்விழி சூரியகுமாரன், திரு.ஜே.ஜஸ்டின், இசை இளவரசன் கந்தப்பு ஜெயந்தன், கலாநிதி. திருமதி.அருந்ததி இரவீந்திரன், சிதம்பரம் இசைமைந்தன் நயினை பத்மநாதன் சிவமைந்தன். திரு.சிவநாதன் பிரதீபன், திரு.எஸ். சிந்துஜன், திரு பா.கேதீச்சரன், திரு.ஜெகதீஸ் அருணா மற்றும்

இசைக்கலைமணி திருமதி லலிதகுமாரி சிவபாலன், திரு. அகிலன் சிவானந்தன்(அவுஸ்ரேலியா) திரு.எல்.ஷிவனேஷ்(தமிழ் நாடு) முதலான பலர் எனது பாடல்களுக்கு இசைவடிவம் கொடுத்துள்ளனர். இவர்களுக்கும் பாடல்களைப் பாடியவர்களுக்கும் பக்கவாத்தியக் கலைஞர்களுக்கும் எனது நன்றி.

வன்னி ஓடை, வன்னி அருவி, வன்னி ஊற்று, TRAIN, சிறகுகள், இதயத்தின் ஓசை, வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய நூற்றாண்டு விழா நினைவு வெளியீடான எங்கள் பள்ளிக்கு நூற்றாண்டு, குணகரவை கூழாங்கேணி வன்னியப் பிள்ளையார் பக்திப் பாமாலை, அவுஸ்ரேலிய பிரிஷ்பேர்ன் ஸ்ரீ செல்வ விநாயகர் கோவில் தெய்வீக இசைப்பாமாலை, திருக்கேதீச்சரம் பெருஞ்சாந்தி வெளியீடு,

முதலான பெயர்களில் வெளி வந்த ஒலி நாடாக்கள். இறுவட்டுக்கள் முதலான இலத்திரனியல் சாதனங்களில் எனது இசைப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றை வெளியிட்ட அனைவருக்கும் நன்றி.

டென்மார்க் பிரண்டா ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தினர் எனது பன்னிரண்டு பக்திப்பாடல்களை **"டென்மார்க் பிரண்டா ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மன் பாடல்கள்"** என்ற பெயரில் இறுவட்டாக வெளியிட்டனர். அப்பாடல்களில் சில இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

இசையமைப்பாளர் திரு.எல்.ஷிவனேஷ்(தமிழ் நாடு) அவர்களின் இசையமைப்பில் திரு.புஷ்பவனம் குப்புசாமி, திரு.வீரமணி ராஜு முதலான தமிழ் நாட்டுப் பிரபல பாடகர்கள் பாடல்களைப் பாடியிருந்தனர். சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வவுனியா மாவட்டம்**

தேவார முதலிகளான திருஞானசம்பந்தர். சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு நாயனார், முதலானவர்களினால் பாடப்பட்ட **திருக்கே தீச்சரம், திருக்கோணேச்சரம்** ஆகிய சிவத்தலங்கள் வன்னியிலே தான் (திருகோணமலையும் வன்னி இராச்சியத்திற்குள்ளேயே இருந்தது.) இருந்தன.

அருணகிரிநாதர் திருக்கோணேச்சரம் பற்றியும், கதிர்காமம் பற்றியும், நல்லூர் பற்றியும் ("யாழ்ப்பாணாயன் பட்டினம் மருவிய பெருமாளே!") பாடியிருக்கிறார். யாழ்ப்பாணத்து ஆலயங்கள் பற்றி இன்னும் பலர் பாடியிருக்கிறார்கள்.

1880 இல் வவுனியாவில் **"ஓமை அந்தாதி"** என்ற பெயரில் **ஓமந்தை வீரகத்திப் பிள்ளையார்** மேல் **சிலம்பு நாத பிள்ளை** என்பவரால் நூறு பாடல்கள் கொண்ட ஒரு பிரபந்தம் பாடப்பட்டதாக அறிய முடிகிறது. அதில் சில பாடல்களே எமக்குக் கிடைத்திருக்கின்றன. இவை இசைப்பாடல்களல்ல.

**கிடாய்ச்சூரி** அம்மன்மேல் ஒரு வசந்தன் பாடல் பாடப்பட்டதாக எனது தந்தையார் கூறினார். ஓரிரு வரிகளையும் அவர் பாடிக் காட்டினார். ஆனால் அவ் வசந்தன் பாடல்களும் கிடைக்கவில்லை.

1953 இல் பம்பைமடு திரு.அ.பூலோகசிங்கம் அவர்களின் முயற்சியில் ஆறுமுகம் வேலு (வேலுப் பூபதி) என்ற கவிஞர் பாடிய **"சண்முகவேலவர் பேரில் கிளிவிடு தூது"** என்ற சிறிய பிரபந்தம், நூல் வடிவில் வெளி வந்தது. இப்பிரபந்தம் கதிர்காம வேலர் மேல் பாடப்பட்டது.

பம்பைமடுவில் வாழ்ந்த பிரபல விஷகடி வைத்தியர் **அமரர் வ.அருணாசலம்** அவர்களிடம் இருந்த பழைய ஏட்டுப் பிரதியை, எனது தந்தையார் **அமரர் சே.நாகலிங்கம்** அவர்கள் பாடிய காப்புப் பாடலோடு சேர்த்து அவரது மகனான **அமரர் அ. பூலோகசிங்கம்** அவர்கள் ஒரு சிறிய நூலாக வெளியிட்டிருந்தார்.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கவெளியீடாக 1992 இல் **"கதிரைமலைப் பேரின்பக் காதல்"** என்றொரு நூல் இரண்டாம் பதிப்பாக வெளிவந்தது. இது அமரர் பௌராணிகர் பொன்னையா இராசையா அவர்களின் ஞாபகார்த்தமாக அவரின் வேண்டுகோளை ஏற்று வெளியிடப்பட்டது. இது கதிர்காமக் கந்தன் பற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"கந்தன் புகழ் மாலை"** என்ற பெயரில் **அமரர் தா.வீரவாகு** அவர்கள் **பம்பைமடு** முருகன் மேல் பாடிய பாடல்களின் தொகுப்பு 2017 ஆம் ஆண்டில் அவரது நினைவாக வெளியிடப்பட்டது. இதிலுள்ள பாடல்கள் பெரும்பாலும் விருத்தப் பாடல்களாக இருக்கின்றன.

**"பன்னிரு திருத்தலப் பதிகங்கள்"**என்ற தலைப்பில் பன்னிரண்டு கோவில்கள் மேல் **கலாபூஷணம் க. ஐயம்பிள்ளை** அவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு 2022 இல் வெளிவந்துள்ளது.

இத்தொகுப்பில் ஒன்பது பாடல்கள் வவுனியா மாவட்டக் கோவில்கள் மேலும், ஒரு பாடல் முல்லைத்தீவு மாவட்ட வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில் மேலும், ஒரு பாடல் திருகோணமலை மாவட்ட முத்துக்குமாரசாமி கோவில் மேலும், ஒருபாடல் றம்பொடை ஆஞ்சநேயர் கோவில் மேலும் பாடப்பட்டவை. இவை யாவும் விருத்தப் பாக்களில் அமைந்தவை.

கோவில் மலர்களில் சிலர் இசைப்பாடல்களை எழுதியுள்ளனர். சில கோவில்களுக்கு ஊஞ்சற் பாடல்களும் எழுதப்பட்டுள்ளன. அவையும் கோவில் மலர்களில் இடம் பெற்றுள்ளன.

**சாகித்திய ரத்னா, கலாநிதி முல்லைமணி** அவர்கள் பாடிய **"ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் திருப்பள்ளி எழுச்சிப் பாமாலை" "நெடுங்கேணி வில்லையடிப் பிள்ளையார் பாமாலை"** ஆகிய பக்திப்பாமாலைகள் வெளிவந்துள்ளன. இவற்றில் திருப்பள்ளி எழுச்சி முதலான பாடல்கள் காணப்படுகின்றன.

வவுனியா கோவில்க்குளம் மகாவிஷ்ணு கோவிலில்(கண்ணன் கோவில்) வெளியிடப்பட்ட **"திருவரங்கன் கீதங்கள்"** என்ற இறுவட்டில் பத்துப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

சைவப் புலவர் செ.குணபாலசிங்கம், கீழ்கரவை இ.சிவநேசன், கீழ்கரவை குலசேகரன், கவிஞர் T.V. இராஜேந்திரா ஆகியவர்கள் எழுதிய கண்ணன் பாடல்களுக்கு திரு. கந்தப்பு ஜெயந்தன் இசையமைத்துள்ளார்.

திரு.க.ஜெயரூபன், பா.சர்மிளா, S.சுபாலஜந்தினி, திரு.பு.கோபு, திரு.வ.கந்தப்பு ஆகியோர் பாடியிருந்தனர். இவற்றில் ஒருபாடல் மட்டும் வவுனியா கோவில்க்குளம் கண்ணன்மேல் பாடப்பட்டிருக்கின்றது. ஏனையவை பொதுவான பாடல்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிக்கைக்குரியவர்

**கலைமாமணி இரத்தினசிங்கம் சிவசோதி** அவர்கள் இசை, சோதிடம், தமிழாற்றல், வைத்தியம் முதலானவற்றில் பாரம்பரியப் பெருமைமிக்க பரம்பரையில் பிறந்தவர்.

இவரது தாயார் பார்பதி அவர்கள் ஒரு இசை ஆசிரியை. இவரது தந்தையார் இரத்தினசிங்கம் அவர்கள் பாலபண்டிதர். வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலையின் முதல் அதிபராகப் பணியாற்றியவர். அவரது தந்தையார் கோதண்டர் அவர்கள் தமிழிலக்கியத்தில் தோய்ந்தவர். சோதிட அறிவு மிக்கவர். சித்த வைத்தியர்.பாடகர். அவரது தந்தையார் சின்னையாபிள்ளை அவர்கள் நாடகங்களுக்குப் பாட்டுப் பாடுபவர். சின்னையா பாகவதர் என்று அழைக்கப்பட்டவர். சோதிடர்.

திரு சிவசோதி அவர்களின் பூர்வீகம் வவுனியாவிலுள்ள "மருக்காரம் பளை" என்ற அழகிய சிறிய கிராமம். இருப்பினும் இவர் வவுனியா குடியிருப்பில் 02-11-1948 இல் பிறந்தார். வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்விகற்று ஆசிரியப் பணியில் சேர்ந்து பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கர்நாடக சங்கீதம், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் விசேட பயிற்சி பெற்றார்.

பாடசாலைக் காலத்தில் சங்கீத பூஷணம் பொன்.நடராசா அவர்களிடமும், ஆசிரிய கலாசாலையில் இயலிசை வாருதி பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர், சங்கீத பூஷணம் பொன். முத்துக்குமாரு ஆகியோரிடமும், கர்நாடக சங்கீதத்தை முறைப்படி கற்றார்.

கலைமாமணி, கலாபூஷணம், வடக்குமாகாண ஆளுநர் விருது, இசைமாமணி, இசைஎழில், இசைச்செல்வர், முதலான பல சிறப்புப் பட்டங்களையும், கௌரவங்களையும் பெற்றார்.

ஈழத்துச் சௌந்தரராஜன் என்று அழைக்கப்படும் இவர் ஏழு வயதில் பாடிப் பரிசு பெற்று ஈழத்தின் பல பாகங்களிலும் பல பாட்டுக் குழுக்களோடு சென்று பாடிப் புகழ் பெற்றார். ஆர்மோனியம் வாசிப்பதில் வல்லவர்.

இவரே இலங்கை வானொலியில் மெல்லிசைப் பாடல்கள் பாடிய வவுனியா மாவட்டத்தின் முதல் மெல்லிசைக் கலைஞர். பாடசாலை அதிபராகப் பணியாற்றி ஓய்வுநிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார். கவிஞர். சோதிடத்திலும் வல்லவர்.

இவருக்கு இந்நூலைக் காணிக்கையாக்கியிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இத்தொகுப்பில்

வவுனியா மாவட்டக் கோவில்கள் பற்றிய எனது பல இசைப் பாடல்கள் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. அந்தவகையில் வவுனியா மாவட்டத்திலுள்ள கோவில்கள் பல முதற் தடவையாகப் பாடல் பெறுகின்றன.

ஏனைய பிரதேசத்துக் கோவில்கள் மேல் நான் பாடிய பல பக்திப் பாடல்களும் இத் தொகுப்பில் உள்ளடங்குகின்றன.

தமிழகத்துச் சில கோவில்கள் மேலும், ஈழத்திலுள்ள சில கோவில்கள் மேலும் எமது மகளுக்குப் பிள்ளைவரம் வேண்டி நான் பாடிய சில பாடல்களும் இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

எமது மகளுக்குப் பிள்ளைப் பேறளித்து என்னை நாத்திகனாகாமல் காப்பாற்றிய இறைவனின் கருணையை என்னென்று சொல்ல. மகள் **அநிந்திதை**. மருமகன் **திரு.தி.கேசவராஜன்**, பேரனின் பெயர் **ஆருத்ரன்**. எமக்கு இன்னருள் பாலித்த இறைவனுக்கு எனது உயிரல்லால் காணிக்கையில்லை.

பொதுவான பக்திப் பாடல்கள் சிலவும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. நான் இயற்றிய இரண்டு ஊஞ்சற் பாடல்களும் இத்தொகுப்பில் சேர்க்கப் பட்டுள்ளன.

## இன்னும் சில

எனது. **வாலி (ஆய்வு), வன்னிப்பிரதேச வயற் பண்பாடு" (ஆய்வு)** ஆகிய நூல்களின் வெளியீடுகளுக்கான முழுச் செலவையும் தந்ததோடு, எனது படைப்புக்களெல்லாம் நூல் வடிவம் பெறவேண்டு மென்று இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்பே கூறி என்னை உற்சாகப்படுத்தி நூல் வெளியீடுகளுக்கு நிதி உதவி செய்து உறுதுணையாக இருந்துவரும் எனது தம்பியும் எழுத்தாளருமாகிய **கந்தையா சிங்கம்**(சிங்கம்-சுவிஸ்) அவர்களுக்கு எப்படி நன்றி சொல்ல

எனது **"முற்றத்துக் கரடி"** சிறுகதைத் தொகுப்பு, **"அகளங்கன் இசை நடனப் பாடல்கள்"** ஆகிய நூல்களின் வெளியீட்டுச் செலவுகளை முழுமையாகத் தந்துதவி எனது ஆக்கங்கள் யாவும் நூலுருப்பெற உதவிவரும் பிரபல எழுத்தாளர் **வவுனியூர் இரா.உதயணன் (லண்டன்)** அவர்களுக்கும் எப்படி நன்றி சொல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இந்த நூல் வெளியீட்டுக்கான செலவில் ஒரு பகுதியைத் தந்துதவிய எனது நண்பன் **திரு.செல்வசுந்தரம் இரவிச்செல்வன் (நியூசிலாந்து)** அவர்களுக்கு எனது நன்றி.

வவுனியா கந்தசுவாமி கோவில் வீதியில் 50 ஆண்டுகளுக்குமேல் வாழ்ந்து அமரரான திருமதி நவரஞ்சிதமலர்(மனோன்) இராமச்சந்திரன் அவர்களின் நினைவாக அவரது சகோதரரும் எனது நண்பருமாகிய **திரு. ஐயாத்துரை குலவீரசிங்கம்(லண்டன்)** அவர்கள் எனது **"திருக்கேதீச்சரம்"** என்ற நாட்டிய நாடக நூல் வெளியீட்டுச் செலவின் பெரும் பகுதியைத் தந்துதவினார். அவருக்கு எனது நன்றி.

எனது பல பாடல்களுக்கு நாட்டிய வடிவம் கொடுத்தவரும், எனது பல நாட்டிய நாடகங்களை தயாரித்தவரும், எனது **"திருக்கேதீச்சரம்"** என்ற நாட்டிய நாடக நூலின் அடிப்படையில் அதை **"திருக்கேதீச்சரம் ஒரு தேன் பொருந்து"** என்ற தலைப்பில் மூன்றரை மணிநேர நாட்டிய நாடகமாக வடிவமைத்து, நூறுக்கும் மேற்பட்ட பிள்ளைகளைப் பயிற்றி திருக்கேதீச்சர கோவில் குடமுழுக்குப் பெருவிழாவின் முதல் நாள்(05-07-2022) திருக்கேதீச்சரத்தில் மேடையேற்றி, பலரினதும் பாராட்டுக்களைப் பெற்று **"ஆடற்கலை அரசி"** என்ற பட்டத்தையும் பெற்ற **நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்** அவர்களுக்கும் மிகுந்த நன்றி.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்ட வெளியீடாக இந்நூலை வெளியிட ஏற்பாடு செய்து வெளியீட்டுரையையும் தந்துதவிய வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டச் செயலாளரும் யாழ் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளருமாகிய என் பெரு மதிப்புக்கு உரிய **கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன்** அவர்களுக்கும் என் நன்றி.

எனது பல நூல்களை தனது எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் மூலம் வெளியிட்ட எனது எழுத்தாள நண்பர் **டாக்டர் ஓ.கே. குணநாதன்** அவர்களுக்கும் எனது பல நூல்களின் முதற்பிரதி பெற்றுச் சிறப்பித்த **அமரர் சிவநெறிப் புரவலர் சி.ஏ.இராமஸ்வாமி, அருட்கலை வாரிதி கலாபூஷணம் ஸ்தபதி சு.சண்முகவடிவேல்** ஆகியோருக்கும் எனது நன்றி.

அச்சுப்பிழைகளைத் திருத்தி ஆலோசனை வழங்கி உதவிய எனது மூத்த சகோதரர் எழுத்தாளர் **கலாபூஷணம் நா.தியாகராஜா B.A ச.நீ** அவர்களுக்கும், எனது நூல் வெளியீடுகளுக்குப் பெரும் ஒத்துழைப்பு வழங்கி வரும் எனது பெறாமகன் **திரு.தர்மலிங்கம் பிரதாபன் B.A(Hons) ச.நீ** அவர்களுக்கும் என் நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலுக்கு நல்லதொரு அணிந்துரையை வழங்கிய பிரபல ஆய்வாளரும், எழுத்தாளரும், ஊடகவியலாளருமாகிய **தமிழ்நிதி கலாபூசணம் அருணா செல்லத்துரை** அவர்களுக்கு நன்றி.

அட்டையின் பின்புறத்தில் என்னைப்பற்றிய அறிமுகக் குறிப்பை எழுதிய எனது அன்புக்கும் மரியாதைக்கும் உரியவரும் ஈழத்தின் தலைசிறந்த மூத்த கவிஞரும் கல்விமானுமாகிய என் ஆசான் **கவிஞர் சோ.பத்மநாதன் (சோ.ப)** அவர்களுக்கும் நன்றி.

1978 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் என்னால் எழுதப்பட்ட பக்திப் பாடல்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகின்றது. இவற்றைப் பத்திரமாகச் சேமித்துப் பாதுகாத்து வைத்திருந்த எனது அன்பு மனைவி நானேயாகி என் எழுத்துப் பணிகளுக்கெல்லாம் உந்து சக்தியாக விளங்கி வருபவர்.

என் ஆக்கங்களுக்கு முதல் வாசகியாகவும் முதல் இரசிகையாகவும் முதல் விமர்சகியாகவும் இருந்து, இந்நூல் வெளியீட்டுக்குமான அனைத்துக் கருமங்களிலும் பங்கு கொண்டு, என்னை உற்சாகப்படுத்தி வரும் என் அன்பு மனைவிக்கும் என் இனிய நன்றி.

இந்நூலை அழகாக அச்சிட்டுத் தந்த வவுனியா வாணி கணினிப் பதிப்பகத்தாருக்கும், நூல் வடிவமைப்பு, அட்டைப்பட வடிவமைப்பு ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்து தந்த செல்வி.ஜெ.திவ்யா அவர்களுக்கும் என் நன்றி.

இந் நூலிலுள்ள இசைப்பாடல்களுக்கு இசையமைத்தவர்களுக்கும், இசையமைக்கப் போகிறவர்களுக்கும், எனது பாடல்களைப் பாடியோருக்கும் இனிப் பாடப் போகிறவர்களுக்கும் எனது நன்றி.

இந்நூலை ஆதரிக்கக் காத்திருக்கின்ற அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றி. மீண்டும் அடுத்த நூலுடன்...

அன்பு
**அகளங்கன்**
15.01.2023

"தமிழ் அதர்"
90, திருநாவற்குளம்,
வவுனியா.
077 9606893



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பார்போற்றும் கணபதி

சித்தி தருவாய் – நல்ல
புத்தி தருவாய் – எந்தன்
சிந்தை யெல்லாம் நிறைந்த
தொந்திக் கண பதியே

(சித்தி .....)

குளத்தின் கரை யினிலும்
கோயில் அறை யினிலும்
உளத்தின் உணர் வினிலும்
உறையும் கண பதியே

(சித்தி .....)

ஆல மரத்தின் கீழும்
அரச மரத்தின் கீழும்
பால மரத்தின் கீழும்
பரி வுடனே இருப்பாய்

(சித்தி .....)

கும்பிடும் அடியவர் தம்
குறைகளைப் போக்கி அவர்
நம்பிடுந் தெய்வ மாக
நலந் தருங் கணபதியே

(சித்தி .....)

தும்பிக் கைக் கணபதியே
துயர் தீர்க்குங் குணநிதியே
நம்பிக்கை கொண்ட வர்க்கு
நாளுந் துணை வருவாய்

(சித்தி .....)

மோதகம் அப்பம் எள்ளு
முப்பழம் அவல் படைத்தோம்
பாதகம் எல்லாம் தீர்ப்பாய்
பார் போற்றும் கணபதியே

(சித்தி .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இல்லை என்போர்களும் சொல்லட்டும்

இல்லை என்போர்களும் சொல்லட்டும் – இல்லை
இருக்கு தென்போர்களும் சொல்லட்டும்
எல்லை இல்லாத பரம்பொருள் உண்டென்றேன்
என்மன உறுதியும் வாழட்டும்

(இல்லை ......)

கல்லிலே காண்பவர் காணட்டும் – மனக்
கண்ணிலே காண்பவர் காணட்டும்
எல்லை யில்லாதபேர் ஒளியென்றே காண்பவர்
என்றும் அதைக்கண்டு வாழட்டும்

(இல்லை ......)

இயற்கையே என்பவர் இயம்பட்டும் – இல்லை
செயற்கையே என்பவர் செப்பட்டும்
செயற்படு கின்றதோர் சக்தியே என்பவர்
சிந்தையும் பல்கிப் பெருகட்டும்

(இல்லை ......)

கோவிலில் காண்பவர் காணட்டும் – மலைக்
குன்றினில் காண்பவர் காணட்டும்
ஆயிரம் ஆயிரம் வடிவு சொல்வோர்களும்
அப்படியே சொல்லி வாழட்டும்

(இல்லை ......)

ஒன்றென்று சொல்வோரும் சொல்லட்டும் – இல்லை
ஒருநூறு என்போரும் சொல்லட்டும்
அன்றென்றும் ஆமென்றும் ஐயத்தோடே நின்று
ஆராய்ச்சி செய்வோரும் செய்யட்டும்

(இல்லை ......)

நன்றெது தீதெது என்றறி யாதவர்
நாலு விதமாகச் சொல்லினும்
ஒன்றது உண்டென்பேன் உண்மை அதுவென்பேன்
உன்னறி வில்லதை உணர்வென்பேன்

(இல்லை ......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நல்ல குடும்பம்

நல்ல குடும்பம் – இது
நல்ல குடும்பம்
சக்தியும் சிவனும் சேர்ந்து
சரி சம மாக வாழும்

(நல்ல குடும்பம்.....)

சர வணன் விநா யகனும்
சக்தி சிவன் பிள்ளை களாய்
சங்க டங்கள் ஏது மின்றி
எங்க ளுக்கு வாழ்ந்து காட்டும்

(நல்ல குடும்பம்.....)

மூத்த வன் பெரும் புகழோன்
முன் நின்று முடிக்கும் தெய்வம்
இளை யவன் எழில் முகத்தோன்
எல் லோர்க்கும் அருளும் தெய்வம்

கல்வி கலை ஞானம் எல்லாம்
கணக் கின்றிக் கொடுப்பான் மூத்தோன்
நல்ல வினை ஆற்ற வல்ல
நல்ல ஆற்றல் தருவான் இளையோன்

(நல்ல குடும்பம்.....)

சக் தியோ இரக்கம் மிக்காள்
சக லர்க்கும் உண வளிப்பாள்
சங் கரன் போகம் யோகம்
தந் தெமை வாழ வைப்பார்

எல் லோரும் உறவு என்றே
எல் லோர்க்கும் உதவும் இந்த
நல்ல தோர் குடும்பம் எங்கள்
நமச்சி வாயன் குடும்ப மாகும்

(நல்ல குடும்பம்.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## என்னையும் ஏன் படைத்தான்?

என்னையும் ஏன் படைத்தான்
எனக்கது விளங்க வில்லை

கல்லைக் கனி மரத்தைக் கடல் மலை ஆறுகளை
புல்லைப் புழு பூண்டைப் பூச்சி வகை களையும்
எல்லை யில்லா அளவில் எங்கும் படைத்த சிவன்
(என்னையும் .....)

முன்னைப் பழம் பொரு ளாம் மூத்த படைப்பாளி
பென்னம் பெருங் கடவுள் பேச அரிய சிவன்
மண்ணை யெல் லாம் படைத்த மாபெரும் படைப்பாளி
(என்னையும் .....)

தேனைப் படைத்த சிவன் தேளையும் ஏன் படைத்தான்
வானைப் படைத்த சிவன் வறுமையை ஏன் படைத்தான்
கூனை குருட்டை கொடுமை களை ஏன் படைத்தான்
(என்னையும் .....)

வில்லை வளைத்து மதில் வீழ்த்தி அழித்த பிரான்
கல்லைக் கனிய வைத்துக் கல்நார் உரித்த பிரான்
தில்லை நட ராசன் திருவிளை யாடல் செய்ய
(என்னையும் .....)

பெண்ணைக் கொடுத்தா னுக்குப் பேரருள் செய்த சிவன்
கண்ணைக் கொடுத்தான் என்று தன்னைக் கொடுத்த சிவன்
என்னைக் கொடுத்தால் ஏற்று என்ன பரி சளிப்பான்
(என்னையும் .....)

ஒளியைப் படைத்த சிவன் இருளையும் ஏன் படைத்தான்
வழியைப் படைத்த சிவன் குழியையும் ஏன் படைத்தான்
தெளிவைப் படைக் காமல் திகைப்பையும் ஏன் படைத்தான்
(என்னையும் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## எத்தனைகோடி இன்பங்கள் வைத்தாய் இறைவா

### பல்லவி

எத்தனைகோடி இன்பங்கள் வைத்தாய்
இறைவா எங்கள் இறைவா - இந்த
இயற்கை உன் பரிசல்லவோ
இறைவா எங்கள் இறைவா

(எத்தனைகோடி.....)

### அனுபல்லவி

முத்தென நிலவு வீசி வரவே
மோகனம் வண்டுகள் பாட
இத்தரை மாந்தர் மனம் மயக்கும்
இயற்கையின் அழ கினிலே (எத்தனைகோடி .....)

### சரணம்

மலர்களில் வந்து தென்றலும் மோத
வண்டுகள் சிந்து பாடிடுமே
கலைகளின் அழகைக் கண்களிற் காட்டிக்
கலையினம் துள்ளி ஓடிடுமே

மயில்களின் நடனக் கோலத்தைக் கண்டு
மணிக்குயில் கூவிப் பாடிடுமே
வெயிற்கதிர் கடலின் அலைகளில் வீசி
விரித்திடும் ரத்ன தீபங்களே

புல்நுனி மேலே பனித்துளிக் கோளம்
புதுப்புது வர்ணம் காட்டிடுமே
நெல்மணி குனிந்து தென்றலில் அசைந்து
நிர்மலன் தாளை வணங்கிடுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரை மலர்கள் நிரம்பிய குளங்களின்
தரிசனம் பிறவியின் பரிசல்லவோ
சாமரை வீசிடும் அலைகளின் கரங்கள்
சரித்திரப் பெருமைகள் தருவனவோ

கானத்து முல்லை வானத்தில் எழுந்த
காட்சியோ வானத்து மீனினங்கள்
வானத்து நாயகன் கார்த்திகை நாளில்
வரிசையாய் வைத்த தீபங்களோ

மலைமகள் முகிலின் ஆடைகள் போர்ப்பது
மனதினை மயக்கிடும் காட்சியன்றோ
கலைமகள் ஆடை இதுவென அருவி
கரைபுரண் டோடுதல் மாட்சியன்றோ

(எத்தனைகோடி .....)

இசையமைப்பு : கலாபூஷணம் திருமதி விமலலோஜினி கனகேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கருமாரி அபிராமி காளியம்மா....

கருமாரி அபிராமி காளியம்மா – எங்கள்
கர்மவினை போக்கிடம்மா காளியம்மா
அருமையிலும் அருமையுந்தன் கருணையம்மா – எங்கள்
அவலமெல்லாந் தீர்ப்பதுந்தன் கடமையம்மா
(கருமாரி அபிராமி....)

சண்டனையும் முண்டனையும் கொன்றவளே – அதனால்
சாமுண்டி என்றபெயர் கொண்டவளே
அண்டமெல்லாம் ஓருருவாய் நின்றவளே – இந்த
அகிலமெல்லாம் அருளாட்சி செய்பவளே
(கருமாரி அபிராமி....)

கும்பிடுவோர் குறைகள்தீர்த்துக் குதூகலிப்பாய் – ஒரு
குறையுமின்றி அடியவரைக் குளிரவைப்பாய்
நம்பிடுவோர்க் கருள்புரியும் காளியம்மா – உன்னை
நம்பிவந்தோம் கண்திறந்து பாருமம்மா
(கருமாரி அபிராமி....)

ஆலாலம் உண்டவனின் பாதிநீயே – இந்த
அகிலத்தின் ஒளிவழங்கும் ஜோதிநீயே
சூலாயுதம் தரித்த காளிநீயே – எங்கள்
துயர்க்கடலைப் போக்கிடுவாய் காளித்தாயே
(கருமாரி அபிராமி....)

தாருகனைச் சங்கரித்த சங்கரியே – கொடியோர்
சரணடைய வடிவெடுக்கும் பயங்கரியே
ஆருமுனைத் தேடிவந்து அடிபணிந்தால் – அவர்க்கு
அமுதூட்டி அரவணைக்கும் நிரந்தரியே
(கருமாரி அபிராமி....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கருணை வடிவானவளே காளித்தாயே...

கருமைநிற மானவளே காளித் தாயே
கருணைவடி வானவளே காளித் தாயே
பெருமையெல்லாம் கொண்டவளே காளித் தாயே
பேருலகின் அன்னைநீயே காளித் தாயே

(கருமை நிறமானவளே....)

வேப்பிலையில் குடியிருக்கும் காளித் தாயே
வேண்டும்வரம் தந்திடுவாய் காளித் தாயே
காப்புஇங்கு நீயேதான் காளித் தாயே
காலடிகள் பணிந்துநின்றோம் காளித் தாயே

(கருமை நிறமானவளே....)

அபிராமி என்பவளும் அன்னை நீயே
அதிரூபி ஆனவளும் அன்னை நீயே
புவியாகிக் காற்றாகி வானாய்த் தீயாய்ப்
புனலாகி நிற்பவளும் நீயே தாயே

(கருமை நிறமானவளே....)

துன்பஇருள் போக்கியெங்கும் ஒளி தருவாய்
துயரங்களைப் போக்கிநல்ல வழி தருவாய்
அன்புமழை பொழிந்து இந்த அகிலத்திலே
அடியவராம் பயிர்களைநீ வாழ வைப்பாய்

(கருமை நிறமானவளே....)

மாகாளி பராசக்தி மலை மகளே
மாநிலத்தைக் காத்திடம்மா தலை மகளே
ஏகாந்த நிலைவிட்டு எழுந் திடம்மா
எங்கள்குறை தீர்த்திடுவாய் காளி யம்மா

(கருமை நிறமானவளே....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௨

## கருணைப் பெருவடிவே கலைமகளே

கருணைப் பெரு வடிவே கலை மகளே....
கை கூப்பினேன் உந்தன் திருவடியே
அருளைத் தரும் வடிவே அடிமை யெந்தன்
அறிவில் உறைந் திடுவாய் அழகுறவே

(கருணைப் .......)

கம்பன் கவிதையிலே அமர்ந்து கொண்டாய்
கருத்தாய்த் திருக்குறளில் விருப்புக் கொண்டாய்
இளங்கோ தந்தபுதுச் சிலம்பு கொண்டாய்
இளம்பா ரதிப்புதுமை ஏற்றுக் கொண்டாய்

(கருணைப் .......)

அகமும் புறமும்நீயே அறிந்து கொண்டேன்
ஔவைத் தமிழும்நீயே தெரிந்து கொண்டேன்
இகபரம் தருமெங்கள் பக்திக் கவி
இசையும் நீயேதான் உணர்ந்து கொண்டேன்

(கருணைப் .......)

அலைகளின் ஆடலிலே நட மிடுவாய்
அருவியின் ஓசையிலே பதம் பிடிப்பாய்
கலைக்குயில் பாடலிலே இசை தருவாய்
கவிதரும் போதையிலே அசைந் திடுவாய்

(கருணைப் .......)

நானுன்னை அறிந்து கொண்டேன் நாயகியே
நலந்தரும் கவிதைதர நானறி யேன்
தாயுந்தன் பாதங்களைச் சர ணடைந்தேன்
தமிழ்தந்து எனை அணைப்பாய் சரஸ்வதியே

(கருணைப் .......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கலைகளெல்லாந் தருபவளே...

கலைக ளெல்லாந் தருபவளே கலைமகளே! – பெருங்
காவியங்கள் தருபவளே கலைமகளே!
சிலைக ளெல்லாம் உன்வடிவே கலைமகளே – அழகுச்
சித்திரங்கள் உன்வடிவே கலைமகளே

(கலைக ளெல்லாந்....)

கல்லு மலை புல்லிலும்நீ குடியிருப்பாய் – வீசும்
காற்றினிலும் ஆற்றினிலும் நீயிருப்பாய்
சொல்லுங் கவி அழகினிலும் குடியிருப்பாய் – விஷக்
கொல்லும்பாம்பின் உருவத்திலும் நீயிருப்பாய்

(கலைக ளெல்லாந்....)

எழுது கோலில் நீயிருப்பாய் கலைமகளே – எங்கள்
எண்ணமெல்லாம் நிறைந்திருப்பாய் கலைமகளே
அழகி லெல்லாங் குடியிருக்குங் கலைமகளே – எங்கள்
ஆன்மாவின் ஒளிவிளக்கே கலைமகளே

(கலைக ளெல்லாந்....)

ஆடல் பாடல் இசைநடனம் அழகுக்கலை – எதிலும்
அமர்ந்திருந்து வாழவைக்கும் கலைமகளே
வாடும் மனித உள்ளத்துக்கு மருந்தாவாய் – என்றும்
மனக்கவலை தீர்க்கும்பெரு விருந்தாவாய்

(கலைக ளெல்லாந்....)

பூவி னிலே இருப்பவளே கலைமகளே – எந்தப்
பொருளினிலும் இருப்பவளே கலைமகளே
நாவி னிலே நடம்புரியும் கலைமகளே – உன்னை
நாள்தோறும் போற்றுகின்றோம் கலைமகளே

(கலைக ளெல்லாந்....)

உழைப் பவர்கள் உள்ளத்திலே குடியிருப்பாய் – எல்லா
ஊர்களிலும் அழகெனவே நிறைந்திருப்பாய்
களைப் பின்றித் தொழில்செய்யத் துணைபுரிவாய் – எல்லாக்
கலைகளுக்கும் நாயகியே கலைமகளே

(கலைக ளெல்லாந்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தொந்திக்கணபதி....

தொந்திக் க ண பதியை
வந்தனை செய் தி டிலோ
எந்தக் கலை வ டிவும்
எளிதாகும் – என்றும்
குந்தி இருந் தெ மும்பி
சிந்தை தனில் நி னைந்தால்
இந்திர வாழ்வு என்றும்
இயல் பாகும்

(தொந்திக்....)

முந்தை முதற் க டவுள்
மூத்த வி நாய கனாம்
எந்தை தனை நினை தல்
இனி தாகும் – வெறும்
சந்தை தனில் க லையும்
மந்தை நிலை ம னதின்
விந்தைகள் மாறி உள்ளம்
விரி வாகும்

(தொந்திக்....)

தொந்திக் க ண பதியைத்
தந்தி மு க த்தவனை
முந்தி முதல் வ ணங்கல்
முறை யாகும் – மண்ணில்
சொந்த பந்தம் பெரு கும்
சுக மான வாழ்வு வரும்
இந்த உலகில் இன்பம்
நிலை யாகும்

(தொந்திக்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## நலந்தரும் விநாயகன்

சிவசக்தி பாலகனே சிந்தைக் கினியவனே
செந்தமி ழ்ப் பாவலர்க்குக் காவலனே
நவசக்தி யாய்உலகில் நலந்தரும் நாயகனே
ஞானவி நாயகனே நமைக்காப்பாய்

(சிவசக்தி....)

தம்பிக்கு முன்கனியைத் தாயிடம் பெற்றவனே
தம்பியொரு கனிபெறவே யானையாய் வந்தவனே
நம்பியுனைச் சரணடைந்தால் நல்லருளைத் தருபவனே
ஞானவி நாயகனே நமக்கருள் செய்திடுவாய்

(சிவசக்தி....)

**வேறு**

அப்பமும் முப்பழமும் அமுதுசெய் கணபதியே!
ஆனை முகத் தவனே அருள்நிதியே!
எப்பொழு தும்உன்னை எண்ணித் துதிப்போர்க்கு
ஏற்ற வரங்கள் தரும் குணநிதியே!

(சிவசக்தி....)

ஆயிரம் கோடிமலர் அழகு திரண்டிருக்கும்
அழகு முகத் தவனே ஐங்கரனே!
தாயினும் அன்புமழை தந்தெமைக் காப்பவனே
தர்ம தயாநிதியே தனிப் பொருளே!

(சிவசக்தி....)

அசுரக் கஜமுகனை அழித்து அமரர்கட்கு
அபயம் அளித்தவனே எமைக் காப்பாய்
அசுரக் குணம்அழித்து அறிவில் தெளிவளித்து
அடியவர் எமைக்காத்து அருள் தருவாய்.

(சிவசக்தி....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## விக்கினங்கள் தீர்ப்பான்

பிள்ளையார் என்று நிதம் சொல்லு – உந்தன்
பிறவிப் பெருந்துயரை வெல்லு

(பிள்ளையார் .....)

அன்னையார் பார் பதியாம்
அப்பன் அவன் சிவனாம்
அருமை மிகு தம்பி
ஆறு முகன் குகனாம்

(பிள்ளையார் .....)

விக்கினங் களைத் தீர்ப்பான்
விநாயகன் அவன் காப்பான்
இக்கண மே அவனை
இதயத்தில் வை மனமே

(பிள்ளையார் .....)

கொடுமை களைக் களைவான்
கொள்ளை இன்பம் தருவான்
தடு மாற்றம் ஏன்மனமே
சகலதும் அவன் வசமே

(பிள்ளையார் .....)

அச்சது பொடியும் செய்தான்
அசுரருக் கழிவும் செய்தான்
இச்சகத் தோருக் கெல்லாம்
இன்பம் அளிக்க நின்றான்

(பிள்ளையார் .....)

போட்டியில் கனியும் பெற்றான்
புதியதோர் அறம் வகுத்தான்
பாட்டிக்குத் தமிழ் கொடுத்தான்
பாட்டினில் முதலில் நின்றான்

(பிள்ளையார் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சரணம் என்றே தொழுவாய்

காற்றி லெல்லாம் கேட் கிறதே
கண பதியின் நாமம் – கருங்
கல்லி லெல்லாம் தெரி கிறதே
கண பதியின் ரூபம்

(காற்றி லெல்லாம் ....)

ஆற்றி லெல்லாம் கேட் கிறதே
ஆனை முகன் நாமம் – சிறு
அணு வினிலும் தெரி கிறதே
ஆனை முகன் ரூபம்

(காற்றி லெல்லாம் ....)

கற் பனையில் தெரிவ தெல்லாம்
கரி முகத்தோன் தோற்றம் – அது
கல் மனத்தைக் கனிய வைக்கும்
என் பதுவே தேற்றம்

(காற்றி லெல்லாம் ....)

அற் புதத்தில் அற் புதமாய்
அவன் பெருமை வருமே – எங்கள்
ஆனை முகன் பெயரைச் சொன்னால்
அனை வருக்கும் சுகமே

(காற்றி லெல்லாம் ....)

சற்று மினித் தாமத மேன்
சன்னி திக்கு வருவாய் – உன்
சங்க டங்கள் தீர்ந்து விடும்
சரணம் என்றே தொழுவாய்

(காற்றி லெல்லாம் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## உன்னையன்றி யாரை

உன்னை யன்றி யாரை இந்த
உலகம் வணங்கும் ஐயா
என்னை யிந்த உலகில் காத்து
ஏற்றந் தருங் கணபதியே

(உன்னை யன்றி .....)

**வேறு**

பொன்னை அள்ளிக் குவித் தாலும்
பூவை அள்ளிச் சொரிந் தாலும்
உன்னை எண்ணும் உள்ளம் வேறு
ஒன்றில் பதிந் திடுமோ

(உன்னை யன்றி .....)

முன்னை செய்த பாவம் போக்கி
முத்தி பெற அருள் புரிவாய்
அன்னை கையில் பிள்ளை போலே
அரவணைத்துச் சுகந் தருவாய்

(உன்னை யன்றி .....)

மண்ணைக் காக்கும் தெய்வம் நீயே
மக்கள் போற்றும் தெய்வம் நீயே
கண்ணைக் காக்கும் இமையாய் நீயே
காக்க வேண்டும் கணபதியே

(உன்னை யன்றி .....)

விண்ண வர்க்கும் தெய்வம் நீயே
வேல வர்க்கு அண்ணன் நீயே
என்ன வர்க்கும் உன்னை விட்டால்
ஏதுகதி காப்பாய் நீயே

(உன்னை யன்றி .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வண்ணமலர்ச் சோலையிலே...

### பல்லவி

வண்ணமலர்ச் சோலையிலே வழிபார்த்துக் காத்திருந்தேன்
எண்ணமெல்லாம் நிறைந்தவனை எண்ணிவிழி பூத்திருந்தேன்
(வண்ணமலர்ச் ......)

### அனுபல்லவி

கண்ணின்மணி யானஅவன் காத்திருக்கச் சொல்லிச் சென்றான்
இன்னுமவன் வரவில்லையே இருளாகப் போகுதையோ
(வண்ணமலர்ச் ......)

### சரணம்

புள்ளிமயில் வரவில்லையோ புதிதாய்ப்போர் தொடங்கியதோ
வள்ளிதெய்வ யானையர்க்கென் வரவுசொல்லிப் பகையாச்சோ
கள்ளமில்லா என்மனத்தில் காதல்ப்பயிர் வளர்த்துவிட்டு
வள்ளல்முரு கேசனென்னை வாடவிட்டு வதைப்பானோ
(வண்ணமலர்ச் ......)

அன்னைசிவ காமிஎன்னை ஆதரிக்க மாட்டாரோ
முன்னைப்பரம் பொருள்சிவனார் முன்னின்று தடுத்தாரோ.
கண்ணையிமை காப்பதுபோல் காப்பேன்என்று கைப்பிடித்தான்
அன்னைதந்தை சொல்கேட்டு அநாதரவாய் விடுவானோ
(வண்ணமலர்ச் ......)

பூச்சூடிப் பொட்டுவைத்தேன் புத்தாடை புனைந்தும்வந்தேன்
காச்சாத பால்குடித்துக் கால்கடுக்க ஓடிவந்தேன்
ஏச்செல்லாம் கேட்கவென்னை இங்குவிட்டு விடுவானோ?
மூச்செல்லாம் போனபின்பு முழுப்பழியை ஏற்பானோ?.
(வண்ணமலர்ச் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கன்னி என்னை ஏன் மறந்தாய்?

கன்னி என்னை ஏன் மறந்தாய்
பன்னி ருகை வடி வேலா
காத்தி ருந்தேன் கோயி லிலே
கை விடுதல் முறை தானா

(கன்னி.....)

எண்ணி எண்ணி ஏங்கி னேனே
எத் தனை நாள் முருகா
எண்ண மின்றித் தூங்கி னேனோ
உண்மை சொல் வாய் முருகா

(கன்னி.....)

கண்ணி னுள்ளே மணி யானாய்
கதிர் வே லா சரியா
காத் திருக்கும் என்னை விட்டுக்
கடந்து செல்லல் முறை தானா

(கன்னி.....)

வண்ண வண்ணக் கோ புரமும்
வார்த் தெடுத்த பொற் சிலையும்
எண்ணத் திலே உறைய வில்லை
என் மனத்தில் நீ உறைந்தாய்

(கன்னி.....)

என்ன செய்ய நினைத் தாயோ
ஏது என்று கேட் காயோ
என்னை விட்டு விடு வாயோ
ஏங்க விட்டு வாழ் வாயோ

(கன்னி.....)

முன்னை உன்னை மனத் தினிலே
முழு தாகப் பதித்து விட்டேன்
பின்னை இனி என்ன செய்வேன்
பேதை என்னை ஆத ரிப்பாய்.

(கன்னி.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## என்னை ஏன் தவிக்கவிட்டாய்

**பல்லவி**

என்னைஏன் தவிக்க விட்டாய் முருகா – உன்னுள்
என்னையே காட்டிவிட்டு ஏங்கவிடல் முறையா

**அனுபல்லவி**

கண்ணையே காப்பதென்றும் இமைகளது கடமையன்றோ
காக்காது விட்டுவிடக் கருதுவது மடமையன்றோ

**சரணம்**

கோவி லிலும் காட்சி தந்தாய்
கோபு ரத்தும் காட்சி தந்தாய்
வாச லிலும் காட்சி தந்தாய்
வாட்டி என்னை வதைத்து விட்டாய்

(என்னை ஏன் .....)

தெரு விலே வந்தவன் நீ
தே ரேறி வந்தவன் நீ
அரு கிலே வீடு தேடி
அழ காக வந்தவன் நீ

உன் அழகில் மயங்கி விட்டேன்
உன் நினைவில் கலங்கி விட்டேன்
என்னை யிரு விழி பார்த்து
என் குறையைப் போக் கிடுவாய்

(என்னை ஏன் .....)

உண் ணாமல் நோன் பிருந்தேன்
உருக் குலைந்தேன் துரும் பானேன்
உன்னை எண்ணி உருகும் என்னை
ஊர் பழிக்க விடு வாயோ

நீ செய்த தவ றுக்காக
நான் வருந்தல் முறை தானோ
நீ என்னை அழைத்துச் செல்வாய்
நித்திய மாய் வாழ வைப்பாய்

(என்னை ஏன் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## உளம் நொந்து ஓடிவந்தேன்....

உளம் நொந்து ஓடிவந்தேன்
உனை எண்ணிப் பாடிவந்தேன்
உளம் இரங்கி நீ வா
ஓ டோடி வா

**வேறு**

அந்தி மாலை காலை எல்லாம்
அன்பு வெள்ளம் பாய நின்றேன்
அன்பன் என்னை ஆதரித்து
வாழ வைப்பாய் முருகா

(உளம் நொந்து....)

**வேறு**

முத்து முத்து நீர்த் துளிகள்
முகஞ் சோர அழுது நின்றேன்
முருகா எந்தன் முன் னோடிவா
மயில் ஏறிவா

துன்பம் என்னும் மாலை என்னைச்
சூழுங் காலம் ஓடி வந்தேன்
இன்பம் தந்து காத்து என்னை
ஆதரிப்பாய் முருகா

(உளம் நொந்து....)

**வேறு**

சூரர் தொகை வெற்றி கொண்டு
தேவர் களைக் காத்து நின்று
வேடர் குல வள்ளி தன்னை
வேண்டி மணஞ் செய்தவனே

ஆரார் என்று பார்த்தி டாமல்
அடியார் களைக் காப் பவனே
அன்பன் என்னைக் காத் தருள்வாய்
ஆறு முகா (உளம் நொந்து....)

இசையமைப்பு: திரு.உமாகாந்தன் (1978)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## இறைவா இது என்ன சோதனையோ

இறைவா இதுஎன்ன சோதனையோ – இது
ஏழைஎன் நெஞ்சிற்கு போதனையோ
முறையோ இதுவென்று முறையிட்டேன் – ஏன்
முருகா படைத்தாய் என்னையிங்கு

(இறைவா .....)

பஞ்சத்தில் நானிங்கு வாடுவதோ – கொடும்
பாவியாய் ஏங்கியே பாடுவதோ
நெஞ்சத்தில் வேதனை ஆடுவதோ – உன்
நினைவுகள் எனைவிட்டு ஓடுவதோ

(இறைவா .....)

வறுமையாம் சூரனைக் கொன்றுவிடு – என்
வாக்கிலே நீவந்து நின்றுவிடு
பொறுமையாய் இனியுமோ காத்திருப்பாய் – மனப்
புண்களை நீயுமோ பாத்திருப்பாய்

(இறைவா .....)

வாட்டிடும் துன்பத்தை அறிந்துவிடு – வேலை
நீட்டியே வினைதனை எறிந்துவிடு
காட்டிடு கால்களை நான்தொழவே – தமிழ்ப்
பாட்டினில் உருகியே நான்அழவே

(இறைவா .....)

(1979)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மயிலாகப் பிறந்தேனில்லை

மயிலாகப் பிறந்தேனில்லை – முருகன்
மலரடி படும் எழில்
மலராகப் பிறந்தேனில்லை

(மயிலாகப் ....)

குயிலாகப் பிறந்தேனில்லை – இந்தக்
குவலயம் புகழ்ந் திடும்
குமரன் புகழ்பாடும்
குயிலாகப் பிறந்தேனில்லை

(மயிலாகப் ....)

கயலாகப் பிறந்தேனில்லை – வள்ளி
கருவிழிக் கிணை யெனக்
கவிஞர்கள் புகழ்ந்திடும்
கயலாகப் பிறந்தேனில்லை

(மயிலாகப் .....)

மானாகப் பிறந்தேனில்லை – வேலன்
மலையடி வா ரத்தில்
மறித்துத் துரத்திடும்
மானாகப் பிறந்தேனில்லை

(மயிலாகப் .....)

நானாகப் பிறந்தேனேதொல்லை – இந்த
நானில மீ தினில்
நாளும் நலிந்திட
நானாகப் பிறந்தேனேதொல்லை

(நானாகப் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தாமரை மலர் கண்ணில்....

தாமரை மலர்கண்ணில் தோன்றினால்
சரவணன் முகமங்கு தோன்றுதே
பூமர எழில்கண்ணில் தோன்றினால்
புனிதன் கழலடி தோன்றுதே

(தாமரை மலர் கண்ணில்)

கோபுர வாசல்கள் தோன்றினால்
குமரன் உருவங்கு தோன்றுதே
நூபுர ஒலியெங்கும் தோன்றினால்
நூலோன் கழலொலி தோன்றுதே

(தாமரை மலர் கண்ணில்)

அன்பென்னும் சொல்லொன்று தோன்றினால்
அழகன் மனமங்கு தோன்றுதே
இன்பம் என்றொன்று தோன்றினால்
இணையடித் தாமரை தோன்றுதே

(தாமரை மலர் கண்ணில்)

நாமங்கள் ஆயிரந் தோன்றினால்
நன்மைகள் ஆயிரந் தோன்றுதே
பாவங்கள் ஆயிரந் தோன்றினால் – முருகன்
பாதங்கள் நெஞ்சினில் தோன்றுமே

(தாமரை மலர் கண்ணில்)

(1978)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கருணைக்கடலே கந்தா....

### பல்லவி

கருணைக் கடலே கந்தா – என்
கவலைகள் தீர வரந்தா

### அனுபல்லவி

பெருமாள் மருகா முருகா – என
உருகும் அடியேன் உளம்வந் தருள்வாய்

### சரணம்

கருவாய் இருக்கும் உயிரிலும் உந்தன்
கருணை மலர்கள் பட வேண்டும்
குருவாய் எழுந்து குவலயம் வாழ
குளிர்வாய் ஞானந் தர வேண்டும்

(கருணைக் கடலே....)

ஞானக் கடலின் பேரலை யாலிந்
நானிலம் நனைந்து நலம் பெறவே
வானக் கடலின் கீழே இறங்கி
வையகம் நோக்கி வர வேண்டும்

(கருணைக் கடலே....)

முருகா முருகா என்றார் மனதில்
முளைவிடும் ஞானப் பயி ராகும்
குமரா குமரா என்றார் மனதில்
குற்றங் குறைகள் போய்த் தீரும்

(கருணைக் கடலே....)

இசையமைப்பு: திரு.உமாகாந்தன் (1978)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## நீ இல்லாத உலகேது

### பல்லவி

நீ இல்லாத உலகேது முருகா
நீ இல்லாமல் உலகேது முருகா

(நீ இல்லாத...)

### அனுபல்லவி

வல்லவன் நீதானே முருகா – இந்த
வைய மும் நீதானே முருகா

(நீ இல்லாத...)

### சரணம்

எல்லையில் லாதவெளி வானமும் நீதானே
ஏழ்கடல் மலைஅருவி இருள்ஒளி நீதானே
கல்லிலும் நீதானே கருவிலும் நீதானே
கலைகளும் நீதானே கவிகளும் நீதானே

(நீ இல்லாத...)

### வேறு

நெருப்பென நீ எரிப்பாய் நீரென நீ குளிர்வாய்
பொருப்பென உயர்ந்து நிற்பாய் பூவென மலர்ந்து நிற்பாய்

கருப்படு முயிர் களுக்கும் கருணை செய் கடவுளும் நீ
விருப்பொடு வழி படுவோர் வினைகளைத் தீர்ப்பவன் நீ

(நீ இல்லாத...)

### (வேறு)

எல்லா மாகி இருப்பவன் நீயே
எங்களைக் காத்திடும் இறைவனும் நீயே
வல்லமை தாராய் வாழ்வினைத் தாராய்
வையகம் வாழ அருள்மழை தாராய்

பொய்யும் புரட்டும் போலிப் பகட்டும்
மெய்யென நம்பும் மேதினி வாழ்வில்
உய்ந்திட உன்னை நம்புவதன்றி
ஓர்வழி வேறு உள்ளதோ சொல்வாய்

(நீ இல்லாத...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஓமெனும் மந்திரத்தில் பாடி....

**பல்லவி**

ஆறு முகங் கண்ட போதில் – மனம்
ஆறும் நிலை கண்டேன் முருகா

(ஆறு முகங் கண்ட.....)

**அனுபல்லவி**

கோடி நினை வினிலே ஆடும் – மனம்
கோல மயி லினிலே மூழ்கும்

(ஆறு முகங் கண்ட.....)

**சரணம்**

நாடி உனது துணை தேடி – எந்த
நாளும் எனது மனம் வாடி
பாடி அருட் கடலில் ஆடி– உன்
பாத மலர் தலையில் சூடி

(ஆறு முகங் கண்ட.....)

கோடி சுகங் களிலே கூடி – அருட்
கோவே உனது எழில் பாடி
ஓடி உன தடியை நாடி – மனம்
ஓமெனும் மந்தி ரத்தில் பாடி

(ஆறு முகங் கண்ட....)

இசையமைப்பு : திரு. உமாகாந்தன் (1978)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## குன்றுதோ றாடிவரும் குமரன்

குன்றுதோ றாடிவரும் குமரன் – எங்கள்
மன்றுதோ றாடிவர வேண்டும்
தென்றலோ டாடிவர வேண்டும் – பேசும்
செந்தமிழோ டாடிவர வேண்டும்

(குன்று தோறாடி ......)

திங்களோ டாடிவிளை யாடி – வீசுந்
தென்றலோ டிமனம் வாடி
எங்களோ டாடிவர வேண்டும் – முருகா
இன்பமோ கோடிதர வேண்டும்

(குன்று தோறாடி ......)

**வேறு**

கார்த்திகைப் பெண்கள் இங்கே
காத்திருக் கின்றா ரையா
வார்த்தையில் மழலைதர வேண்டும் – எங்கள்
வாசலில் தவழவர வேண்டும்

(குன்று தோறாடி ......)

சரவணப் பொய்கை எங்கள்
சந்தண இதயத் தொட்டில்
குருபரன் ஆசிதர வேண்டும் – மலராம்
இருகரம் வீசிவர வேண்டும்

(குன்று தோறாடி ......)

(1979)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## என்னோடு விளையாட எழுந்தோடி வா...

**பல்லவி**

என்னோடு விளையாட எழுந்தோடிவா – மயில்
ஏறியே விளையாடும் எழில்ஞான குமரா

(என்னோடு....)

**அனுபல்லவி**

உன்னோடு விளையாட ஒருகோடி பேருண்டு
என்னோடு விளையாட நீயன்றி யாருண்டு

(என்னோடு....)

**சரணம்**

கிட்டிப் புள்ளும் ஆடலாம் கிளித் தட்டும் மறிக்கலாம்
எட்டிப் பிடித்து ஓடலாம் இழுத்தும் விளை யாடலாம்
கட்டிப் பிடித்து உருளலாம் கண்ணைக் கட்டி ஆடலாம்
எட்டுக் கோடும் ஆடலாம் எழும்பிப் பாய்ந்து குதிக்கலாம்

(என்னோடு....)

ஆறு உருவம் எடுத்துநீ அன்று விளை யாடினாய்
நூறு உருவம் எடுத்துவா நுங்குத் தேரை உருட்டலாம்
ஏறு மயில் ஏறிவா எனக்குமொரு இடத்தைத் தா
ஆறு கடல் மலை கடந்து அதிலே ஏற்றிச் செல்லவா

(என்னோடு....)

அண்ண னையும் அழைத்துவா அம்மா விடம் சொல்லிவா
கண்ண னையும் அழைத்துவா கைகள் கோர்த்து ஆடுவோம்
வண்ண வண்ணப் பூப்பறித்து மாலை கட்டி மகிழலாம்
உண்ண உணவு நான்தருவேன் உல்லா சமாய் ஆடலாம்

(என்னோடு....)

பட்டிப் பசுவில் பால்கறந்து பருக உனக்குத் தருவேனே
கட்டிக் கரும்பும் இளநீரும் கடிக்கக் குடிக்கத் தருவேனே
குட்டிக் கரணம் அடிக்கலாம் குந்தி இருந்து எழும்பலாம்
கெட்டிக் காரன் என்றார்கள் கெந்தி அடிப்போம் வாராயோ

(என்னோடு....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கோலமயில் ஏறிவரும் குமரன்

கோல மயில் ஏறி வரும் குமரன் குடி கொண்ட
ஞால மெல்லாம் புகழும் நல்லூர் - புவி
நாற்றிசையும் புகழ் பரப்பும் நல்லூர் - இந்த
நானிலத்தில் இதற்கு இணை இல்லை. (கோலமயில் .....)

**வேறு**

மாவிட்ட புரந் தன்னை மனம் விட்டுப் பாடினால்
பாவங்கள் விட்டோடுமே - கந்தன்
கால்தொட்டுப் பணிவோர்கள் மேல்தொட்ட வினைஎல்லாம்
வேல் தொட்ட பகை யாகுமே (கோலமயில் .....)

**வேறு**

சன்னி தானத்திலே சந்ததமும் மனமுருகி
சதுராடும் பக்த வெள்ளம் - முருகன்
முன்னி தானத்துடன் முறையோடு வணங்கினால்
முடியாத முடி வெய்தலாம் - செல்லச்
சன்னி தானத்திலே... (கோலமயில் .....)

**வேறு**

கதிர்காம வேலவன் கழலடி இறைஞ்சி இரு
கண்ணீர் வழிய நிற்போம்
எதிர்காலம் நன்மையே எழிலான வாழ்வு வரும்
ஏற்றம் முன்னேற்றம் வரும் (கோலமயில் .....)

**வேறு**

பாலாவிக் கரைதனிலே கோலோச்சும் ஈசனின்
பாதங்கள் நம் சொந்தமே - என்று
பற்றினால் பற்றினைப் பற்றாத பற்றுக்கள்
பறந்தோடும் இது திண்ணமே - திருக்
கேதீச்சர் ஆலயம் கேட்டாலும் பேர் தன்னை
கேடுகள் பறந்தோடுமே - மனம்
கேடில்லா நிலை எய்துமே (கோலமயில் .....)

**வேறு**

கோணேசர் குடிகொண்ட திருமலையில் தலைவைத்து
அருமறைகள் ஓதிவந்தால் - மனம்
ஒருநிலையில் ஈசனை அனுதினமும் எண்ணினால்
அழியாத செல்வம் சேரும் - வாழ்வில்
ஒழியாத மேன்மை யாகும் (கோலமயில் .....)

**இசையமைப்பு: திரு.உமா காந்தன் (1978)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சிவாய நமவென்றே

சிவாய நம ஓம் – சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் – சிவாய நம ஓம்

சிவாய நம வென்றே தெள்ளலைகள் பூசிக்க
சிவபூமி ஆய்த் திகழ்ந்த பூமி – எந்தத்
தெய்வத்திலும் உயர்ந்த தெங்கள் சாமி

(சிவாய .......)

அபாயங் களைப் போக்கும் ஐந்துஈஸ் வரங்களை
அழகாகக் கொண்ட தெங்கள் பூமி – இதன்
அழகென்றும் சொல்ல ஒண்ணாச் சேதி

(சிவாய .......)

உப்புக் கடல் சூழ் ஒளிவீசும் முத்தாக
உலகினில் மிகப் பழைய தீவு – ஈழம்
ஒளிநாடாய்ப் புகழ் பெற்ற தீவு

(சிவாய .......)

**வேறு**

எங்கும் சிவத்தலங்கள் எங்கும் திரு நீற்றின்ஒளி
எங்கும் அரோகரா என்றிசைக்கும் கடல் அலைகள்
எங்கும் சிவன் அடியார் எங்கும் சிவபூசை
எங்கும் சிவ மணமாய்த் திகழ்ந்த திந்தப்பூமி

ஈழத்தின் வடக் கினிலே இருக்கும் மன்னாரினிலே
எழில் மிகும் மாந்தையிலே அமைந்தது மாதோட்டம்
பாலாவிக் கரை யினிலே பரம்பொருளாம் கேதீச்சர்
பார்புகழ வீற் றிருந்து அருளு கின்றார்

கௌரி யம்மை சமேதராக கடவுளாம் சிவபெருமான்
கேதீச்சரர் எனும் பெயரில் கோவில் கொண்டார்
சௌந்தரி யம்பெறலாம் சகல போகமும் பெறலாம்
தாமதம் வேண்டாம் வந்து அருள் பெறுங்கள்

(சிவாய .......)

**இசையமைப்பு : திரு.சிவநாதன் பிரதீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கோணேச்சரம் திருக் கோணேச்சரம்

**பல்லவி**

கோணேச்சரம் – திருக் கோணேச்சரம்
மாதுமை யாளுடன் கோணேசர் குடிகொண்ட
மாபெரும் புகழ் படைத்த கோணேச்சரம்
(கோணேச்சரம்...)

**அனுபல்லவி**

பேதைமை தனை அகற்றிப் பேறுகள் தமை அருளிப்
பேரின்பம் தனை நல்கும் கோணேச்சரம் (கோணேச்சரம் ...)

**சரணம்**

வேழத்தின் வடிவான விநாயகர் தந்தையெனும்
வேதமுத லானவரின் கோணேச்சரம்
ஈழத்தின் கிழக்கினிலே எழில்மிகும் ஒளியுடனே
ஈசன்இருந் தருளுமிடம் கோணேச்சரம் (கோணேச்சரம் ...)

கயிலைச் சிகரத்தைக் காற்றுப் பெயர்த்தெடுத்துக்
கடலிலே போட்டஇடம் கோணேச்சரம்
மயிலை உடையமைந்தன் குமரேசன் தந்தையென்றும்
மகிழ்வுடன் இருக்குமிடம் கோணேச்சரம் (கோணேச்சரம் ...)

திருஞான சம்பந்தர் தீந்தமிழ்ப் பாடலிலே
தேவார மாய்த்தந்த கோணேச்சரம்
பெருஞான வான்கள் புகழ் கோணேச்சரம்
பேரிடர் தீர்க்கும்பதி கோணேச்சரம்

அருண கிரிப்புலவன் அருந்தமிழ்ப் பாடலிலே
அழகாய்ப் புகழ்ந்தளங்கள் கோணேச்சரம்
தருணம் இதேவந்து தரிசனம் செய்திடுங்கள்
தமிழ்பாட அருள்புரிவார் கோணேச்சரர்

இராவணன் வழிபட்டு இன்பமெல் லாம்பெற்று
ஏழுலகும் வென்றபதி கோணேச்சரம்
பிரானெனும் கோணேசர் மாதுமை யாளுடனே
பேறுகள் தரஅமர்ந்த கோணேச்சரம் (கோணேச்சரம் ...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## காணக் கண்கோடி வேண்டும்

**பல்லவி**

காணக் கண் கோடி வேண்டும் – சிவனார்
கற்பனைக் கெட்டாத அற்புதப் பேரழகைக்

(காணக் ......)

பாண பத்திரர்க்கு அருள்புரிந்த பரமர் – திருக்
கோண மலையமர்ந்து கோலோச்சும் அழகினையே

(காணக் ......)

**சரணம்**

மாதுமை யாள்சமேதர் மன்றினில் நடமிடுவார்
மான்மழு ஏந்தியவர் மகாதேவராம் சிவனார்
மாதொரு பாகராக மலையினில் எழுந்தருளி
மாநிலங் காத்தருளும் மாபெரும் பேரழகைக்

(காணக் ......)

காலைக் கதிர்வந்து காலைத் தழுவிடவே
கடலருகே மலையில் களிப்போடு வீற்றிருப்பார்.
வேலைக் கரத்தேந்தும் வேலவனின் தந்தை
வேண்டும் வரந்தரவே வீற்றிருக்கும் அழகைக்

(காணக் ......)

திருஞான சம்பந்தர் தீந்தமிழ் பாடிடவே
திருமலையில் அமர்ந்த தீந்தமிழ்ப் பெருங்கடவுள்.
குருஞான வான்களுக்கும் கும்பிடும் அடியவர்க்கும்
அருளான மழைபொழிந்து அமர்ந்திருக்கும் அழகைக்

(காணக் ......)

அருண கிரிப்புலவன் அன்போடு பாடிடவே
ஆறுகோ புரந்தன்னில் அழகாகக் காட்சிதந்து
கருணை புரிந்தசிவன் காலாதி காலமாக
திருமலையில் இருக்கும் தீராத பேரழகைக்

(காணக் ......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சுத்தானந்த நடராசர்

**பல்லவி**

ஆடிக்கொண் டிருக்கின்றார் நடராசர் – வவுனியா
சுத்தானந்த இந்துஇளைஞர்சங்க நடராசர் மண்டபத்தில்
(ஆடிக்கொண்டிருக்கின்றார் ....)

**அனுபல்லவி**

ஓடிக்கொண் டிருக்கின்ற கங்கையும் ஆட
ஒளிர்ந்துகொண் டிருக்கின்ற திங்களும் ஆட
(ஆடிக்கொண்டிருக்கின்றார் ....)

**சரணம்**

தூக்கிய திருவடியும் துலங்கும்வெண் ணீற்றொளியும்
துடியேந்து திருக்கரமும் தோளும் மழுமானும்
பாக்கியம் பெற்றபுலித் தோலும் பாம்பும்ஆட
பாரும் திசையும் தன்கை வீசிஅழகுடனே
(ஆடிக்கொண்டிருக்கின்றார் ....)

வியாக்கிர பாதரில்லை பதஞ்சலி முனிவரில்லை
விண்ணவர் எவருமில்லை பண்ணவர் யாருமில்லை
வியாபித் தெரியும்நெருப் பேந்தியே ஆடுகின்றார்
வினைதீர்க்கும் அம்பிகையும் அடியவருங் காண
(ஆடிக்கொண்டிருக்கின்றார் ....)

முயலகன் தனைமிதித்து முகத்தினில் அருள்குவித்து
முத்திரை வகைபிடித்து முப்புரி நூல்தரித்து
இயலிசை நூல்தழுவி இசைக்கும்மத் தளஒலிக்கு
இடைவிடா திங்குநின்று தடைபடாத் திருநடனம்
(ஆடிக்கொண்டிருக்கின்றார் ....)

பிட்டுக்கு மண்சுமந்த பெருஞ்சடை முடிஆட
பிரம்படி பட்டதிரு மேனியும் ஆட
எட்டுத் திசைகளும் எல்லாமுமே ஆட
இதழ்கொன்றை மாலைஆட இமையவரும் ஆட
(ஆடிக்கொண்டிருக்கின்றார் ....)

கணங்களும் ஆட ககனமும் ஆட
காலமும் ஆட காலனும் ஆட
வணங்கும்மெய் யடியார்கள் வாழ்த்தொலி பாட
வவுனியா நகரினில் மகிழ்ச்சியோ டெழுந்து
(ஆடிக்கொண்டிருக்கின்றார் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# செட்டிகுளம் வௌவாலை சிவன்கோவில்

செட்டிகுளம் தெற்கினிலே செறிவான காட்டினிலே
கட்டிடச் சிதைவுக்குள்ளே கற்கோவில் – அது
கண்ணுதலார் வௌவாலைச் சிவன் கோவில்

(செட்டிகுளம் ....)

வௌவாலின் வடிவினிலே கேணியங்கு அமைந்ததனால்
வௌவாலை எனும்பெயர்கொள் பதியினிலே – இருக்கும்
வௌவாலை சிவன்கோவில் பழங் கோவில்

(செட்டிகுளம் ....)

சந்திரசேகர ஈச்சரமாய் சரித்திரப் புகழ்பெற்று
இந்திரரும் வணங்கவந்த எழிற்கோவில் – அன்று
சுந்தரமாய் நிமிர்ந்துநின்ற பெருங் கோவில்

(செட்டிகுளம் ....)

லிங்கவழி பாடுசெய்த தமிழ்ச்சைவர் வணங்கியதால்
இன்றும்வழி பாடுசெய்வார் தமிழ்ச்சைவர் – கேணி
இன்றுஞ் சிதையாதிருக்கும் புகழ் சொல்வார்

(செட்டிகுளம் ....)

கதம்பநதி தெற்கிலுள்ள காட்டினிலே பாய்ந்தோட
விதம்விதமாய் மரஞ்செடிகள் செழித்திருக்க – அங்கே
சிதம்பரநட ராசரென்னும் சிவபெருமான் கோவில்கொண்டார்

(செட்டிகுளம் ....)

**வேறு**

சோழ மன்னர் வழிபட்ட சுந்தரப் பெருங் கோவிலிலே
ஊழி நடம் புரிகின்ற உத்தமனார் கோவில் கொண்டார் – அவர்
வாழி டத்தில் சென்றுஅந்த வள்ளலை நாம் வழிபடுவோம்

(செட்டிகுளம் ....)

**வேறு**

பழம் பெருமை பெற்ற கோவில் பார்புகழ்ந்த பெருங்கோவில்
நல மிழந்து கிடக்கிறதே நம்மிதயம் துடிக்கிறதே – அதனைப்
புதுப் பிக்க வாருங்கள் புதுப் பொலிவு காணுங்கள்

(செட்டிகுளம் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# முன்னேஸ்வரம்

### பல்லவி

சிலா பத்திலே ஒரு சிவன் கோவில் – அது
செஞ்சடைக் கடவுளது பெருங் கோவில்

(சிலா பத்திலே .....)

### அனுபல்லவி

நிலா வினைச் சடையில் சூடியவர் – என்றும்
நித்தியப் பரம் பொருளர் வாழுமிடம்

(சிலா பத்திலே .....)

### சரணம்

முன்னை நாதரெனும் சிவ பெருமான் – இருக்கும்
மூத்த ஈஸ்வரமாய் அமைந்த இடம்
முன்னேஸ் வரமென்று பெயர் பெற்ற – பெரும்
முக்கியத் துவம்பெற்ற சிவன் கோவில்

(சிலா பத்திலே .....)

புத்தளம் பகுதியிலே அமைந்த தொரு – நல்ல
புனிதம் நிறைந்த நகர் சிலாபத்திலே
எத்திசையும் இருந்து பக்தர் வந்து – வணங்க
எல்லோர்க்கும் அருள்புரிவார் முன்னை நாதர்

(சிலா பத்திலே .....)

### வேறு

அன்னை எனநின்று அடியார் களைக்காக்கும்
முன்னை நாதர் பாதம் போற்றிடுவோம்
முன்னை வினையகலும் முத்தியும் வாய்த்திடுமே
முன்னேஸ் வரம் வந்து வணங்கிடுவோம்

(சிலா பத்திலே .....)

வடிவாம் பிகைசமேத முன்னைநாதப் பெருமான்
வற்றாத அருளோடு கோவில் கொண்டார்
கொடிய வினைஅகல கோவிலுக்கு வந்து
கும்பிட்டு அருள் பெறுவோம் வாருங்கள்

(சிலா பத்திலே .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கீரிமலை நகுலேஸ்வரம்

நகுல முனிவரது நகுலமுகம் மாறி அருள்
நலமெல்லாம் பெற்ற இடம் நகுலேஸ்வரம்
நகுல மலையிருக்கும் நகுலேஸ் வரர்பாதம்
நாம் பணிந்தால் நலம்பெறலாம் வாருங்கள்

(நகுல முனிவரது ....)

மாருதப் புரவல்லி குதிரை முகம் மாறிடவே
மகிழ்ந்துவழி பட்ட இடம் நகுலேஸ்வரம்
குதிரைமுகம் மாறியது குன்மநோயும் மாறியது
அதிசயமாய் உக்கிரசிங்கன் மணம் முடித்தான்.

(நகுல முனிவரது ....)

சோழ இளவரசி மாருதப் புர வல்லி
சுந்தரம் மிகப் பெற்றாள் தீர்த்தமாடி
ஈழ வளநாட்டில் மாவிட்ட புரப் பதியில்
இருக்குது கீரிமலை நகுலத் தீர்த்தம்

(நகுல முனிவரது ....)

**வேறு**

பிதிர்க் கடன் ஆற்றுபவர் தினம்தினம் வருகின்றார்
பெருமமைதி பெற்று வழி படுகின்றார்
கீரி மலைக் கடலினிலே மூழ்கிக் குளித்தெழுந்து
கிட்டாத நலமெல்லாம் பெறு கின்றார்

(நகுல முனிவரது ....)

எத்த னையோ முனிவர்களின் சமாதிக் கோயில்கள்
இங்கிருந்த தென்று சொல்லிப் புகழ்கின்றார்
அத்த னைபேர் அருளாசி அனைத்தும் பெறலாமே
அன்போடு கீரி மலைக்கு வாருங்கள்

(நகுல முனிவரது ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஆடுகின்றார் காரை சுந்தரேசர்

### பல்லவி

ஆடுகின்றார் காரை சுந்தரேசர் – காரை
அழகிய ஈழத்துச் சிதம்பரந் தன்னிலே

(ஆடுகின்றார்....)

### அனுபல்லவி

சௌந்தராம் பிகை காண சௌந்தரி யம்பெருக
சுந்தரமாய்த் தனது ஐந்தொழில் களைச் செய்து

(ஆடுகின்றார்....)

### சரணம்

பதஞ்சலி முனிவ ரோடு வியாக்கிர பாதர் காண
பக்கத்திலே நின்று சௌந்தராம் பிகை காண
நாததுந் துபி முழங்க நாரதர் வீணை மீட்ட
நலம்பெறவே வாணி நல்லிசை மெரு கூட்ட

(ஆடுகின்றார்....)

கற்றைச் சடை அசைய கங்கை நதி அசைய
ஒற்றைச் சிறு கீற்றுநிலா ஒளிர்ந்தொளிர்ந் தேயசைய
சுற்றிய விஷப் பாம்பும் தூக்கிய திருத் தாளும்
பற்றிய கலை மானும் பாதணி களும் அசைய

(ஆடுகின்றார்....)

உடுக்கினைக் கையில் ஏந்தி ஒருகையில் தீ ஏந்தி
வரிப்புலி உடை தாங்கி மழுவெனும் படை தாங்கி
துடுக்கினை அடக்கிக் காலால் முயலகன் தனை மிதித்து
தூக்கிய திரு அடியால் தொண்டர்கள் துயர் தீர்த்து

(ஆடுகின்றார்....)

### வேறு

பொடியணி திருமேனிப் புனிதரெம் பெருமானார்
முடியணி கொன்றை மாலை சூடியவர் காரையிலே
அடியவர் குறைதீர்க்க ஆடுகின்றார் ஆடுகின்றார்
கொடியவெவ் வினை தீரும் கும்பிடுவோம் வாருங்களே

(ஆடுகின்றார்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஒட்டிசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர்

தான் தோன்றி ஈஸ் வரரே – ஒட்டிசுட்டான்
தான் தோன்றி ஈஸ்வரரே

(தான் தோன்றி .....)

பட்டிப் பசு பால் பொழிய
பயிர்க ளெல்லாம் செழித்து நிற்கும்
ஒட்டி சுட்டான் பதி யமர்ந்து
உலகை எல்லாம் காத்து நிற்கும்

(தான் தோன்றி .....)

கட்டித் தயிர் பிசைந்து பெண்கள்
கணவ னுக்குச் சோறு ஊட்டும்
ஒட்டி சுட்டான் பதி யமர்ந்து
உலகை எல்லாம் காத்து நிற்கும்

(தான் தோன்றி .....)

கொட்டிக் கொட்டி நெல் லளந்து
குறைவில் லாமல் படி யளக்கும்
ஒட்டி சுட்டான் பதி யமர்ந்து
உலகை எல்லாம் காத்து நிற்கும்

(தான் தோன்றி .....)

வட்டி வரி கேட்ட வரை
வாள் கொண்டு விரட்டி யவன்
பட்டி தொட்டி எங்கும் வீரப்
பண்பு தனை வளர்த்த மன்னன்

கெட்டித் தனம் காட்ட வந்தோர்
கிலி பிடித்து ஓடச் செய்து
கொட்டி முர சறைந்து வெற்றி
கொண் டாடி வன்னி காத்த

பண் டார வன்னி யனார்
பண் போடு ஆண்ட பூமி
வந் தாரை வாழ வைக்கும்
வன்னி யிலே அமைந்த எங்கள்

(தான் தோன்றி .....)

அரிவி வெட்டி அடிக் கட்டையாய்
அங்கி ருந்த ஒட்டு சுட
அரிய லிங்க வடிவில் வந்த
அநாதி யான ஈஸ் வரரே

(தான் தோன்றி .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கொக்கட்டிச் சோலை தான்தோன்றி ஈஸ்வரர்

வான்தோன்று முன்தோன்றும் வள்ளலாம் சிவபெருமான்
தான்தோன்றி ஈஸ்வரராய் உருவானார் – எங்கள்
கொக்கட்டிச் சோலையிலோர் புதிரானார்.

ஊன்தோன்ற அருள்புரிந்து உலகோர்க்கு நன்மைசெய்யும்
தேன்போன்ற சிவபெருமான் மட்டுநகர் – பதியில்
தான்தோன்றி ஈஸ்வரராய் உருவானார்

(வான்தோன்று ....)

**வேறு**

பாரம் பரியம் மிக்க கோயிலிலே – சிவனாம்
பரம்பொருளை நாடியிங்கே வாருங்கள்
தேருந் திருவிழாவுங் காணுங்கள் – வந்து
சிவனார் திருவடியைச் சேருங்கள்

(வான்தோன்று ....)

கொக்கட்டிச் சோலைவாழும் சிவபெருமான் – இந்தத்
திக்கெட்டும் அருள்பரப்பி மகிழுகின்றார்
இக்கட்டில் வாழும்மக்கள் துன்பத்தைப் – போக்கி
இன்பவாழ்வை யாவருக்கும் அருளுகின்றார்

சொற்கட்டிப் பாடிவரும் புலவருக்கு – என்றும்
சுகமளிப்பார் ஈஸ்வரனார் பாடுங்கள்
கற்கண்டுச் சொல்லெடுத்துப் பாடுங்கள் – சிவனார்
கால்பணிந்து பெருவாழ்வு வாழுங்கள்

(வான்தோன்று ....)

**வேறு**

கொக்கட்டி மரங்கள்சூழ்ந்த சோலையிலே குடியிருந்த
தான்தோன்றி ஈஸ்வரனார் கோயிலிலே – என்றும்
நாம்வந்து வழிபடுவோம் வாருங்கள் – மாறா
நல்லருளைப் பெறலாமே வாருங்கள்

அடியவரைக் காக்கவந்து அமர்ந்தவராம் சிவபெருமான்
கொடியவினை அழித்தொழிப்பார் வாருங்கள் – வந்து
கும்பிட்டு அருள்பெற்று வாழுவோம் – என்றும்
குன்றாத மகிழ்ச்சியுடன் வாழுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சுதுமலை விஸ்வநாதர்

வில்வ மரம் மகிழ மரம் விருட்சமாக அரசு,ஆல்
நல்ல வேம்பு மருத மரம் நாகலிங்க மரஞ்சூழ
விஸ்வ நாதர் கோயில் கொண்டார் சுது மலையில் - அன்னை
விசா லாட்சி அமர்ந்து கொண்டார் அவ ரருகில்

(வில்வ மரம் ......)

**வேறு**

வடக்கில் புவ னேஸ்வரி அம்மன் கோயில் - உலகு
மறக்காத சுதுமலையில் அம்மன் கோவில்
தெற்கு முருக மூர்த்தி கோயில் கொள்ள - வட
கிழக்கு சிறுகுளங்கள் மேற்கில் மனை

கிழக்கில் வைரவரின் சிறு கோயில் சூழ - இங்கு
வந்து அமர்ந்து கொண்டார் விஸ்வ நாதர்
விசா லாட்சி சமேதராக விஸ்வ நாதர் - வந்து
அரு ளாட்சி புரிகின்றார் வாருங்கள்

(வில்வ மரம் ......)

**வேறு**

யாழ்ப் பாணப் பூமியிலே
கற்றோர்கள் நிறைந் திருக்கும்
வாய்ப்பான சுதுமலைக்கு வாருங்கள் - காசி
விஸ்வநாதர் பாதங்களை வணங்குங்கள்

இயற்கைச் சூழ லிலே
இளந் தென்றல் பாட்டிசைக்க
ஈசனார் குடிகொண்டார் வாருங்கள் - வந்து
நேசமாய் அவரடியைச் சூடுங்கள்.

கங்கைக் கரையினிலே இருப்பவராம்
காசி விஸ்வ நாதரவர்
மங்கை விசாலாட்சி சமேதராக - வந்து
இங்குள்ளார் இன்றேவந்து வணங்குங்கள்.

(வில்வ மரம் ......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## இரணை இலுப்பைக்குளத்து ஈஸ்வரா

**பல்லவி**

இரணை இலுப்பைக் குளத்து ஈஸ்வரா! – எங்கள்
இதயத்தில் இருக்கும் பர மேஸ்வரா!

(இரணை....)

**அனுபல்லவி**

கருணை மனங் கொண்ட ஈஸ்வரா! – எம்மைக்
காக்கும் கடவுள் நீயே ஈஸ்வரா!

(இரணை....)

**சரணம்**

மருத மரம்எரித்துச் சுண்ணாம் பெடுத்து – காட்டு
மரத்தின் பொந்துகளில் தேன் எடுத்து
குழைத்துக் கட்டியதோர் கோயி லிலே – அன்று
குடியிருந்து அருள் புரிந்த ஈஸ்வரா

வானில் இருக்கும் தேவ கூட்டத்தார் – வந்து
வணங்க அருள் சுரந்த ஈஸ்வரா
தேனாய் இனிக்கும் பர மேஸ்வரா – எங்கள்
தேவைகளை நிறை வேற்றும் ஈஸ்வரா

(இரணை....)

வயல் நிலங்கள் குளங்காடு மாடுகள் – நிறைந்த
வளங் கொளிக்கும் வன்னிமண்ணின் காவலா
குயில் கூவும் மயில்ஆடும் வண்டுகள் – தேன்
குடித்து இசை பாடிடவே மகிழ்ந்தவா

மந்தி களும் மான்மரையும் நிறைந்திருக்க – சின்ன
முயல்க் கூட்டம் முற்றத்திலே விளையாடவரும்
நந்த மிழர் வீரமண்ணில் குடியிருக்கும் – ஈசர்
நமைக் காப்பார் வழிபடுவோம் வாருங்கள்

(இரணை....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிவபுர சுந்தரேஸ்வரர்

### பல்லவி

சிவபுர சுந்தர ஈஸ்வரரே – மாலைச்
செக்கர் நிறத்திரு மேனியரே

(சிவபுர சுந்தர ......)

### அனுபல்லவி

சிவபுர சுந்தர ஈஸ்வரியைத் – தன்
செம்பாதி யாகவே கொண்டவரே

(சிவபுர சுந்தர ......)

### சரணம்

தவமுறை வழிபடும் முனிவர் கட்கும் – அருள்
தந்திடும் முழுமுதற் தனிச்சுடரே
அவமெனப் பிறவியைத் துறந்த வர்க்கும் – என்றும்
அருள்தரும் பேரின்பப் பெருங்கடலே

(சிவபுர சுந்தர ......)

சாத்திரி கூழாங் குளத் தமர்ந்து – மக்கள்
சங்கடம் யாவையும் தீர்ப்பவரே
சாத்திர நெறிமுறை விளக்கி நின்று – **கனக
சபை**தனில் நடமிடும் கூத்தரசே

(சிவபுர சுந்தர ......)

பண்டார வன்னியன் வழிபட்ட தாய் – கதை
பல்லோரும் கூறும்நல் லிங்கமாகி
வந்தோரை வாழ்விக்கும் வன்னி யிலே – இன்று
வளமாய்ச் சிவபுரத்தில் அமர்ந்தவரே

(சிவபுர சுந்தர ......)

இலிங்க வடிவிலே வந் தமர்ந்து – முத்தி
இன்பத்தை வழங்கிடும் இன்னமுதே
செங்கண்ணன் நான்முகன் தேடி டவும் – வந்து
இங்கெழுந் தருளிய இன்னுயிரே

(சிவபுர சுந்தர ......)

மாடுகள் வயல்கள் குளம் பொருந்த – மனை
வீடுகள் தெருக்கள் சூழ்ந்திருக்க
ஏடுகள் யாவுமே புகழ்ந் துரைக்க – வந்து
எங்கள் கிராமத்திலே அமர்ந்தவரே

(சிவபுர சுந்தர ......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## அகிலாண்ட ஈஸ்வரரே!

### பல்லவி

அகிலாண் டேஸ் வரியின் அரு கிருந்தே அருளும்
அகிலாண் டேஸ் வரரே! – அன்னை
(அகிலாண் டேஸ்வரியின் ....)

### அனுபல்லவி

வன்னி வள நகரின் வளம் சேர் பதி யாகி
எண்ணமெல் லாம் நிறையும் கோவிற் குளம் அதனில்
(அகிலாண் டேஸ்வரியின் ....)

### சரணம்

என்னு யிர் உடலாகி எழிலுரு முத லாகி
இன்னல் களைப் போக்கும் எம்பெரு மான் நீயே
பன்னிரு கரத்து மைந்தன் பானை வயிற்று மைந்தன்
கண்ணிரு மணி யாகக் காக்கும் கடவுள் நீயே
(அகிலாண் டேஸ்வரியின் ....)

கண்ணி னில் ஒளிநீயே கருத்தினில் நிறை வாயே
உண்ணஅ ரிய பெரும் உத்தம மா மருந்தே
பண்ணி னில் உனைப்பாட பதமெனக் கருள் வாயே
வண்ணநி லவசையும் வளர் சடைப் பெருமானே
(அகிலாண் டேஸ்வரியின் ....)

பன்னிரு திரு முறையில் பரவும்மெய் யடி யார்கள்
உன்னிரு திரு வடியை உருகி நினைந் தனரே
மின்னல் சடை யசைய மிளிர்கொன்றைப் பூ வசைய
கன்னல் இதழ் அசைய களிநடம் இடும் இறையே
(அகிலாண் டேஸ்வரியின் ....)

இசை அமைப்பு : கலாபூஷணம் திருமதி விமலலோஜினி கனகேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மாமாங்க ஈஸ்வரரே

### பல்லவி

மாமாங்க ஈஸ்வரரே – அமிர்தகழி
மாமாங்க ஈஸ்வரரே

(மாமாங்க ......)

### அனுபல்லவி

மீன்பாடும் தேன்நாடாம் மட்டுநகர் தன்னிலே
சான்றோர்கள் போற்றுகின்ற அமிர்தகழி ஊரிலுறை

(மாமாங்க ......)

### சரணம்

நிறைந்த மணற் பரப்பில் நிழல் மரங்கள் சூழ்ந்திருக்க
முறையாகக் கோயில் கொண்ட முழுமுதற் கடவுள் நீயே
குறையென வருபவர்க்கு குறை தீர்த்து அருள் புரியும்
இறைவன்நீ எங்கள் மண்ணின் எழில்மிகு கட வுளும்நீ

(மாமாங்க ......)

கிழக்கின் ஒளி விளக்காய்த் திகழும் மட்டு மாநகரின்
வடக்கில் எழுந் தருளி வழி காட்டும் ஈஸ்வரரே!
வழக்கு முறை தவறாப் பூசைகள் தினம் நிகழ
வண்ணக்கர் தொண்டு செய்ய வளர்ந்த அருட் தருவே

(மாமாங்க ......)

ஆடிஅமா வாசை யன்று தீர்த்தக் குளத்தில் மூழ்கி
நீராடி பிதிர்க் கடனைத் தீர்க்கும் அடி யவர்கள்
வாடி மனம் உருகி வழிபட அருள்பு ரிந்து
கோடி புண்ணி யங் கொடுக்கும் கோவிலில் வீற்றிருக்கும்

(மாமாங்க ......)

அடியவர் நேர்த்தி வைத்தால் அவருக்கு அருள் சுரந்து
கொடியவல் வினை யகற்றிக் குறைவின்றி வாழ வைப்பாய்.
நெடியவர் திரு மாலும் நீள்மலர்ப் பிரம் மாவும்
அடிமுடி தேடி டவும் அறியப் படா திருந்த

(மாமாங்க ......)

மாமாங்கப் பிள்ளை யாராய் மாமாங்க ஈஸ் வரராய்
மாற்று வடிவங் கொள்ளும் மாமாங்க ஈஸ் வரரே!
தேமா பலா வாழை திகட்டாத கனி வகைகள்
அபிஷேகம் செய்ய என்றும் அருள்மழை பொழி பவரே

(மாமாங்க ......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஈஸ்வரா பரமேஸ்வரா

ஈஸ்வரா! – பரமேஸ்வரா! – அருள்
நீ தராய்.

கல்வி கலை சிறந்த
யாழ் மண்ணிலே அமைந்த
பல்கலைக் கழகத்திலே
பார்போற்ற அமர்ந்துகொண்ட

(ஈஸ்வரா .....)

**வேறு**

பரமேஸ்வரா என்னும் பழைய கல்லூரியிலே
பரம்பொருளாக வைத்து பரவினர் மாணவர்கள்
பல்கலைக் கழகமாகிப் பலர்கற்க வளர்ந்தபின்னும்
எல்லையில்லா அருளை எல்லோர்க்கும் வழங்குகின்ற

(ஈஸ்வரா .....)

திருநெல் வேலியிலே பல்கலைக் கழகத்திலே
திங்கள்பிறை சூடியஎம் சிவபிரான் அமர்ந்துகொண்டார்
திருமுறை ஓதிக் கொண்டு திருநீறு பூசிக்கொண்டு
தினம்தினம் வழிபடவே அருள்தரும் சிவபிரானே

(ஈஸ்வரா .....)

**வேறு**

திக்குக் குலுங்க நடம் செய்யும் கடவுளும் நீ
திங்களும் கங்கையும் சேர் செஞ்சடைக் கடவுளும் நீ
செக்கச் செவே லென்று செஞ்சடை அசைந் தாட
தீயேந்தி ஆடு கின்ற செந்நிறக் கடவுளும் நீ

தில்லையில் நடம் புரியும் கூத்தனும் நீ தானே
தீராத வினைக ளெல்லாம் தீர்ப்பவனும் நீ தானே
எல்லை யில்லாப் பொருளே எங்கள் சிவ பிரானே
எம்மை யெல்லாம் காக்கும் எங்கள் பரம் பொருளே

உமை ஒரு பாகமாகி உலகுக்கு அறம் உரைத்தாய்
உளம் மகிழ்ந் திடவேஇரு புதல்வர் களைப் பெற்றாய்
இமை யவர் குறைதீர்க்க எடுத்துநீ விஷம் குடித்தாய்
எமை யெல்லாம் காத்திடவே இங்கெழுந் தருளு கின்றாய்

(ஈஸ்வரா .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## திருநாவற் குளம் காசிவிசுவநாதர்

திரு நாவற்  குளத் தினிலே
திண்ண மாய் எழுந் தருளி
அருள் தரும் சிவ முதலே
ஆதிப் பரம் பொருளே

(திரு நாவற்.....)

காசி விஸ்வ நாத ரெனக்
கை  கூப்பி வழி படவே
ஆசி தந்து அருள் வழங்கும்
அருள் மழையே அரு உருவே

(திரு நாவற்.....)

விசா லாட்சி சமேத ராக
வீற்றி  ருந்து அருள் வழங்கும்
விண்ண  வர்க்கும் விண்ண வரே
வேத முதற் பரம் பொருளே

(திரு நாவற்.....)

நேர்த்தி வைத்துக் கடன் தீர்க்க
நித்தம் வரும் அடிய வரைப்
பார்த்தி ருந்து அருள் வழங்கும்
பரம தயா நிதி  நீயே

(திரு நாவற்.....)

அன்ன தானப் பூசை செய்தால்
அடிய வர்கள் மனம் மகிழ
என்ன வரம் வேண்டி னாலும்
எளிதில் தரும் எம் சிவனே

(திரு நாவற்.....)

காசி யிலே கங்கைக் கரை
வாசி என வாழ் பவரே
பேசி மகிழ் பெரும் பொருளே
பேர ருள்பெய் பெரு முகிலே

(திரு நாவற்.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கூமாங்குளம் சிவன்கோவில்

**பல்லவி**

கூமாங் குளத்தி லொரு சிவன் கோவில் – நம்மைக்
கூப்பிட் டழைக் கிறது வாருங்கள்

(கூமாங்குளத்தில் .....)

**அனுபல்லவி**

காமாந்த காரத்திலே வீழாமல் – அன்று
காமனை எரித்த சிவன் அழைக் கின்றார்.

(கூமாங்குளத்தில் .....)

**சரணம்**

மீனாட்சி அம்ம னொடு சுந்தரேசர் எழுந் தருளி
மீளாத துயர் போக்க அழைக் கின்றார் – வந்து
காணாத காட்சி கண்டு களிப்போடு வழி பட்டு
கவலைகள் துன்ப மெல்லாம் போக்குங்கள்

(கூமாங்குளத்தில் .....)

**வேறு**

வவுனி யாவின் மேற்கினிலே வளம் நிறைந்த பூமியிலே
புவியி னையே படைத் தளிக்கும் பிரா னமர்ந்தார் – அந்தப்
புண்ணி யனை வழி படுவோம் வாருங்கள் – எங்கள்
போன ஜென்மப் பாவம் நீங்கும் வாருங்கள்

(கூமாங்குளத்தில் .....)

**வேறு**

அடி முடி தேடியன்று அரிபிர மாவும் நொந்து
வடி வினைக் காணவென்று வருந்துகையில் – லிங்கமாய்
வடிவு கொண் டருளியவர் வந்தமர்ந்தார் – அவரை
வணங்கிடப் பேறு பெற்றோம் வாருங்கள்

(கூமாங்குளத்தில் .....)

ஆல காலம் உண்டவரை ஆனை உரி போர்த்தவரை
சூல பாணி யானஅந்தச் சுந்தரனை – நாங்கள்
சுற்றி வந்தால் சுகங்களெல்லாம் சுற்றிவரும் – அதனால்
சுக மடையக் கோவிலுக்கு வாருங்கள்

(கூமாங்குளத்தில் .....)

தாயு மாய்க் காத்தவரை தந்தை யுமாய் நின்றவரை
காயு மெரி கையிலேந்தும் கண்ணியனை – மனம்
ஓயு முன்னே கண்டுதொழ வாருங்கள் – மூச்சு
வாயு நின்று போகும்முன்னே வாழ்த்துங்கள்

(கூமாங்குளத்தில் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தோணிக்கல் ஆதி சிவன்

கங்கையைத் தலையில் தரித்த பிரான்
காமனைத் தீயில் எரித்த பிரான்
திங்களைச் சடையில் வரித்த பிரான்
தீயதோர் கரியை உரித்த பிரான் (கங்கையைத் ....)

**வேறு**

விசாலாட்சி அம்பிகையார் இடது புறமமர
விசுவநாதர் கோயில் கொண்டார் தோணிக்கல்லில்
அகலாது அவரடியை அங்குவந்து வழிபட்டால்
ஆனந்தம் பெருக் கெடுக்கும் வாருங்கள்

**வேறு**

வழி படும் அடியவர்தம் வல்வினையைப் போக்கி வைப்பார்
வற்றாத அருள் வழங்கி வழிவழி வாழ வைப்பார்
அழி வுறாப் பாவவினை அழித்தெம்மை வாழ வைப்பார்
ஐங்க ரனின் தந்தைஆதி சிவனாரை நாம் பணிவோம்

குறு முனிக் குபதேசம் செய்ததொரு பெரு முனியாய்
குமார னிடம் உபதேசம் பெற்றதொரு சீட னுமாய்
கரு முகில் வண்ண ரைத்தன் வாகனமாய் ஆக்கியவர்
காமாட்சி மீனாட்சி பார்வ தியைப் பாகங் கொண்டார்

(கங்கையைத் ....)

**வேறு**

வவுனியா மேற்கினிலே தோணிக்கல் பதியினிலே
வந்தமர்ந்த சிவனாரே வாழவைக்கும் பெருந்தெய்வம்
அவுணர் குலமழித்த ஆறுமுகன் தந்தையான
ஐம்முகச் சிவபெருமான் எம்முகம் பார்த்தருள்வார்

பாடிடும் அடியவர்க்குப் படிஎடுத்தும் கொடுப்பார்
பாட விரும்புவோர்க்கு அடிஎடுத்தும் கொடுப்பார்
ஆடிடும் கூத்தரவர் அசைவினில் உலகியங்கும்
ஆடாது நிறுத்திவிட்டால் அனைத்துமே நின்றுவிடும்

முத்தமிழ்ச் சங்கத்திலே மூத்த தலைவரவர்
மூப்பினை அறியாத முத்திதரும் கடவுளவர்
எத்தனையோ தமிழ்ப்புலவர் எவ்வளவோ பாடிவிட்டார்
அத்தனை புகழ்மொழிக்கும் அப்பாலும் பெருமைகொண்டார்

(கங்கையைத் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## நாகதம்பிரானே புதூர் நாகதம்பிரானே

நாக தம்பிரானே - புதூர்
நாக தம்பிரானே

வரலாற்றுப் பெருமை மிக்க நாக தம்பிரானே
வவுனியாவின் பெரும் சொத்தே நாக தம்பிரானே

(நாக தம்பிரானே .....)

**வேறு**

பாலை மரத்திலே பாம்பு இருக்குது
பார்த்த வர்கள் அறிவார் - அந்தப்
பாம்பு இறங்கி வந்து பாலைக் குடிப்பதை
பாரிலுள் ளோர் அறிவார்

மண்ணும் மருந்தாக விஷத்தை முறித்திடும்
மர்மம் எங்கே உண்டு சொல்லு - எங்கள்
கண்ணும் கருத்துமாய் இருக்கும் புதூரிலே
காலங் காலமாய் உண்டு

யாழ்ப்பாண வீதியின் மேற்கே அமைந்துள்ள
காட்டு வயல் வெளியில் - எங்கள்
காப்பான தெய்வமாய் நாக தம்பிரான்
கருணை மழைபொழி கின்றார்

முட்டையும் கோழியும் நேர்த்தியாய் வைத்திடில்
முழுதாய் நிறைவேறும் எல்லாம் - அங்கு
வெட்டை வெளியினில் காடு வயல்சூழ
வீற்றிருப்பார் நாக தம்பிரான்

பொங்கலைப் பொங்குவார் காவடி தூக்குவார்
எங்களைக் காத்திடு வென்று - மனம்
பொங்கிய மகிழ்ச்சியில் லட்சமாய்க் கூடுவார்
புதூர்நாக தம்பிரான் என்று

(நாக தம்பிரானே .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## திருநாவற்குளம் நாகதம்பிரான்

திரு நாவற் குளத் தினிலே
திரு வருள் பொழிந் திடவே
அரு வுரு வடிவங் கொண்ட
ஆதி சிவ முழு முதலே

(திரு நாவற் .....)

நாகம் பூசை செய்த தனால்
நாக தம்பி ரான் எனவே
நாமெல் லோரும் வழி படவே
நல்ல ருளைப் பொழி பவரே

(திரு நாவற் .....)

சிறிய குளக் கட்டில் நின்ற
சிறிய நாவல் மரத் தினாலே
சிறு நாவற் குள மெனவே
சிறப்புப் பெயர் பெற்று இன்று

திரு நாவற் குளம் எனவே
திகழும் எங்கள் கிரா மத்திலே
தீராத வினைகள் எல் லாம்
தீர்த் தருள வந்த மர்ந்து

நாகம் சுற்றிக் குடை பிடிக்க
நாக லிங் கேஸ் வரராகி
மேக மென அருள் மழைபெய்
நாக தம்பி ரான் சிவனே

(திரு நாவற் .....)

**கோவிந் த**ரின் பூசை யிலே
குளிர்ந்தி ருந்து வாழ்ந்த வரே
நாமிந் தநாள் வழி படவே
நல மருள்வாய் நாக லிங்கா

(திரு நாவற் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## திருக்கேதீச் சரத்திலே....

பூம்புனல் அலைகளே பாடுங்கள் – எங்கள்
புண்ணியன் கழலடி கூடுங்கள்
தீந்தமிழ் ஒலிகளே சூழுங்கள் – ஈசன்
திருமுறைப் பாடலில் வாழுங்கள்

(பூம்புனல் அலைகளே....)

திங்களை முடியில் சூடினான் – தன்
தேவியைப் பாதியில் கூடினான்
கங்கையைச் சடையில் சேர்த்தினான் – வந்த
கரியினை உரித்துப் போர்த்தினான்

(பூம்புனல் அலைகளே....)

வண்டுகள் பாடும் தலத்திலே – நல்ல
வாசமலர் தரும் மணத்திலே
திண்ணமாய் ஈசன் உறைகின்றான் – எங்கள்
திருக்கேதீச் சரத்திலே நிறைகின்றான்

(பூம்புனல் அலைகளே....)

மாதோட்டம் இந்த மானிலம் – நல்ல
மணமலர் மனிதர்கள் நாங்களே
மாதோட்டம் சென்று சேருவோம் – ஈசன்
மன்றினில் மலர்களாய் ஆகுவோம்

(பூம்புனல் அலைகளே....)

நாயன்மார் பாடிய தலத்திலே – ஈசன்
நல்லருள் பொழிந்திடும் நிலத்திலே
நாயகனாம் எங்கள் ஈஸ்வரர் – நமக்கு
நல்லருள் பொழிகுவார் வாருங்கள்

(பூம்புனல் அலைகளே....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பாரோரும் பணிகின்ற கேதீச்சரா

பாலாவி மேலெழுந் துன்
பாதங் களைப் பூசைசெய்ய
பாரோரும் பணிகின்ற பரமேஸ்வரா ! – உன்
பால் ஆவி உருகுகின்ற
பக்தன் இவன் பாடுகின்ற
பாடல்களைக் கேட்டருள்வாய் கேதீச்சரா!

(பாலாவி....)

மாலாகி உல காசை
மனதாள வாடு கின்றேன்
மாதோட்ட நகருறையும் கேதீச்சரா! – விழி
சேலாகி உலவு கின்ற
தேவியொடு காட்சி தந்து
சிறியேனை ஆட்கொள்ள வேணுமையா

(பாலாவி....)

கேதுவென்னும் கிரகம் உன்னைக்
கேடு எல்லாம் நீங்கும்படி
கேட்டுவழி பட்டனனே கேதீச்சரா – மனம்
மோதுமாசை மோக மெல்லாம்
ஓடவேண்டும் என்னை ஆண்டு
மோனநிலை தந்திடுவாய் கேதீச்சரா!

(பாலாவி....)

மண்டோ தரி உன்னை
மன மொன்றிப் பூசைசெய்ய
மனம்மகிழ்ந்து அருள்செய்த கேதீச்சரா – எமக்கு
உண்டோஇனி வேறு தெய்வம்
உன்னை யல்லால் வழியில்லை
உலகத்தைநீ காத்திடுவாய் கேதீச்சரா

(பாலாவி....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## திருக்கேதீச்சரம் ஒரு தேன் பொந்து

**பல்லவி**

திருக்கே தீச்சரம் ஒரு தேன்பொந்து – சிவத்
தேனை அருந்துதற்கு நீமுந்து

(திருக்கே ......)

**அனுபல்லவி**

நாவலர் காட்டிய வழியாகும் – அது
நம்சைவ மக்களுக்கு விழியாகும்

(திருக்கே ......)

**சரணம்**

சம்பந்தர் பாடியதோ ஒரு பதிகம் – அதில்
சரித்திரப் பெருமைகளோ மிக அதிகம்
சுந்தரர் பாடியதும் ஒரு பதிகம் – அது
சுந்தர மானதொரு திருப் பதிகம்

(திருக்கே ......)

வண்டோ தரிஎன்றே மணி வாசகர் – தன்
வாயாரப் பாடும் அந்த மண்டோதரி
கண்டிடக் குழந்தைவடி வான கடவுள் – இங்கு
கருணை பொழியவந்து காட்சி தருவார்.

(திருக்கே ......)

நாவுக்கரசர் ஒரு பாடல் இசைத்தார் – அதனால்
நால்வரும் பாடிய தோர் திருத்தலமாய்
வாவிக் கருகில் உள்ள கேதீச்சரம் – தொழ
(பா லாவிக் கருகிலுள்ள கேதீச்சரம் – தொழ
பக்தர்களே வாருங்கள் சுகம் பெறலாம்)
வாரும் அடியவரே சுகம் பெறலாம்

(திருக்கே ......)

நித்திய மணவாளர் கௌரி நாதர் – மிக
நீண்டிடும் புகழ்பெற்ற நாக நாதர்
சத்திய மாய்அருள் கேது நாதர் – என்றோ
சுயம்பு வாய் உருவானார் அக்கரையில்

(திருக்கே ......)

இசையமைப்பு : திரு.சிவநாதன் பிரதீபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கேடுகள் அகற்றும்பதி கேதீச்சரம்

கேதீச்சரம் – கேதீச்சரம் – திருக் கேதீச்சரம்

கேடுகள் அகற்றும்பதி கேதீச்சரம் – மனக்
கேவலங்கள் போக்கும்பதி கேதீச்சரம்
பாடுகின்ற அலையினொலி கேதீச்சரம் – எங்கள்
பாலாவி எழுப்புமிசை கேதீச்சரம்

(கேடுகள் அகற்றும்பதி....)

மாதோட்டம் எனும்நகரில் கேதீச்சரம் – இந்த
மாநிலத்தின் காவலதாய்க் கேதீச்சரம்
மாதோடு பாகமதாய் கேதீச்சரர் – என்றும்
மனம்மகிழ்ந்து காட்சிதரும் கேதீச்சரம்

மண்டோ தரிக்குஅருள் கேதீச்சரம் – புகழ்
மண்டிக் கிடக்கும்பதி கேதீச்சரம்
கொண்டே கௌரியம்மை இடப்பாகமாய் – இருக்கக்
கோலோச்சி அரசாளும் கேதீச்சரம்

(கேடுகள் அகற்றும்பதி....)

**வேறு**

சுந்தரத் தமிழெடுத்துச் சுந்தரர் பாடிநின்ற
சுந்தரம் நிறைந்தபதி கேதீச்சரம்
சம்பந்தர் பக்தியிலே சந்ததமும் வணங்கிநின்ற
சம்பந்தம் பெற்றபதி கேதீச்சரம்

(கேடுகள் அகற்றும்பதி....)

அப்பரும் சேக்கிழாரும் அன்போடு வணங்கிநின்ற
அற்புதம் நிறைந்தபதி கேதீச்சரம்
எப்பொழுது யாவர்சென்று ஏத்திவழி பட்டிடினும்
இன்பமுற வாழவைக்கும் கேதீச்சரம்

(கேடுகள் அகற்றும்பதி....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## திருக்கேதீச் சரத்தினிலே

திருக்கேதீச் சரத்தினிலே இருக்கின்றார் – என்றும்
திங்கள்பிறை சூடியநம் ஈசனார்
விருப்போடு கௌரியம்மை அருகிலே – சேர
வீற்றிருந்து அருளுகின்றார் ஈசனார்.

(திருக்கேதீச்.....)

**வேறு**

பாவ வினை தீர்ந்து விடும்
பலப் பலவாய் இன்பம் வரும்
பாலாவித் தீர்த்தத்திலே ஆடுவோம் – மகிழ்ந்து
பக்கத்திலே ஈஸ்வரனை நாடுவோம்

(திருக்கேதீச்.....)

**வேறு**

திரு நீற்றின் ஒளி திகழ வாருங்கள் – நல்ல
தேவார ஒலி முழங்க வாருங்கள்
தெரு வீதி எங்கும் அருள் நிரம்பிட – அடியார்
செல்லுகின்ற பாதை யிலே செல்லுங்கள்

(திருக்கேதீச்.....)

கந்தன் முரு கேசனுக்குத் தந்தை யாம் – தொந்திக்
கண பதிக்கும் அவர்தானே தந்தையாம்
எந்த வினை ஆனாலும் தீர்ந் திடும் – இங்கே
வந்தொருகால் ஈச னாரைப் பாருங்கள்

(திருக்கேதீச்.....)

தேவார முதலி களும் பாடி னார் – தெய்வச்
சேக்கி ழாரும் சிவன்பெருமை பாடினார்
நாவாரக் கேதீச் சரர் நாமத்தை – சொன்னால்
நன்மை யெல்லாம் ஓடிவரும் வாருங்கள்.

(திருக்கேதீச்.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கேதீச்சரர் அழைக்கின்றார்

அழைக்கின்றார் வாருங்கள்
அழைக்கின்றார் வாருங்கள்
அலைக்கரம் நீட்டி இங்கே
அழைக்கின்றார் வாருங்கள் – பாலாவி
அலைக்கரம் நீட்டி இங்கே
அழைக்கின்றார் வாருங்கள்

பாலாவிக் கரையிருந்து
பாவங்களைப் போக்குகின்ற
கேதீச்சர நாதர் கேடுகள் நீக்கிடவே
அழைக்கின்றார் வாருங்கள் – பாலாவி
அலைக்கரம் நீட்டி இங்கே
அழைக்கின்றார் வாருங்கள்

**வேறு**

கௌரியம்மை சமேத கேதீச்சர நாதர்
காலமெல்லாம் நம்மைக் காத்தருளும் நேசர்
மன்னார் மாந்தையிலே மாதோட்ட நகரினிலே
மக்களெல்லாம் வாழ மகிழ்வோடு வீற்றிருந்து

(அழைக்கின்றார் ......)

ஈழத்தின் பழங்கோவில் எனும்கேதீச் சரத்தினிலே
எழுந்தருளி இருக்கும் ஈசன் எம்மையெல்லாம்
பாவத்தில் இருந்துமீள பலவித சுகங்கள்பெற
ஆபத்தில் காப்பாற்றி அன்போடு அரவணைக்க

(அழைக்கின்றார் ......)

கேதுவழி பட்டதனால் கிரகநிலை அடைந்திட்டான்
இராமன்வழி பட்டதனால் தோஷம்நீங்கிச் சுகப்பட்டான்
கிரகதோஷம் போக்கிடவும் பிதிர்க்கடனைத் தீர்த்திடவும்
கேதீச்சரர் எழுந்தருளி காத்தருள மனம்விரும்பி

(அழைக்கின்றார் ......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஈழத்தின் வடக்கினிலே

### பல்லவி

ஈழத்தின் வடக்கினிலே இருக்கிறது கேதீச்சரம்
எல்லையில்லாப் பெருமைகொண்ட எங்கள்திருக் கேதீச்சரம்

(ஈழத்தின் ......)

### அனுபல்லவி

வாழவைக்கும் தெய்வமான வள்ளல்அருள் புரிகின்றார்
வாருங்கள் வழிபடுவோம் வளமாக வாழ்ந்திடலாம்

(ஈழத்தின் ......)

### சரணம்

பாலாவித் தீர்த்தத்திலே பாவங்களைக் கழுவலாம்
பால்ச்செம் பெடுத்துச்சென்று அபிஷேகம் செய்யலாம்
மேலான முத்திதரும் மேருமலை வாசனாராம்
மேன்மைதரும் ஈசனாரை மெய்யன்போடு வணங்கலாம்

(ஈழத்தின் ......)

சிவபூமி எனப்புகழும் ஈழத்திலே கோயில்கொண்ட
சிவனாரின் மூத்ததிருத் தலமான கேதீச்சரம்
தவபூமி யாய்விளங்கும் திருக்கேதீச் சரத்தினிலே
தங்கமென ஜொலித்திருக்கும் சிவனாரைப் பாருங்கள்

(ஈழத்தின் ......)

சம்பந்தரும் சுந்தரரும் தேவாரம் பாடியதால்
சம்பந்தம் பெற்றபதி சரித்திரத்தில் நிலைத்தபதி
நம்புமடி யார்கள்குறை யாவையுமே தீர்த்தருளி
நல்லசுக வாழ்வுதரும் நாயகரை வணங்குங்கள்

(ஈழத்தின் ......)

வந்தாரை வாழவைக்கும் வன்னியிலே வாழ்ந்திருக்கும்
வள்ளலடி தேடிஇங்கே வந்து வழிபடுங்கள்
நொந்தாரை ஆதரிப்பார் நோயின்றி வாழவைப்பார்
நூறுநூறு ஜென்மப்பாவம் போக்கி அருள்புரிவார்.

(ஈழத்தின் ......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## எண்ண எண்ண இனிக்கிறார்

எண்ண எண்ண இனிக்கின்றார் எங்கள் திருக் கேதீச்சரர்
எண்ண மெல்லாம் நிறைகின்றார் எங்கள் திருக் கேதீச்சரர்
வண்ண வண்ணக் கோபுரமாய் வடி வழகுக் கோவிலிலே
உண்ண உண்ணத் திகட்டாத ஒரு மருந்தாய் உறைகின்றார்

(எண்ண.....)

காலாதி கால மாகக் காக்கும் சிவ பெருமானார்
ஆலால முண்ட கண்டர் அடியவரைக் காக்கும் தொண்டர்
பாலாவிக் கரை யினிலே பார்வதியாம் கௌரி யோடு
பல்லாண்டு வாழு கின்றார் பாரையெல்லாம் ஆளு கின்றார்

(எண்ண.....)

செருவேற்று முப் புரங்கள் சிதற வழி செய்திட்டவர்
வருமேற்றை வாக னமாய் வாகாய் ஏறி அமர்ந்திட்டவர்
திருநீற்றின் ஒளி விளங்க சிவசைவ நெறி துலங்க
திருக்கேதீச் சரத் தினிலே சிவ பெருமான் வாழுகின்றார்

(எண்ண.....)

**வேறு**

இராவணனும் வழிபட்டான். இராமனுமே வழிபட்டான்.
இங்குவந்து வழிபட்ட விஜயனுக்கும் அருள்புரிந்தார்.
இராஜேந்திர சோழன் திருப்பணிகள் செய்திட்டான்.
இன்னும் பலர் வழிபட்டார். ஏற்றமெல்லாம் பெற்றிட்டார்.

**வேறு**

மாதோட்ட நன்நகரில் மாந்தை என்னும் பிரிவினிலே
தேரோட்டம் செய்யும்திருக் கேசரை - நாடித்
தேடியே தேவரெல்லாம் வருகின்றார்

நாமோட்ட மாகச்சென்று நமக்கருள் செய்க வென்று
வாதாட்ட மாகக் கேட்டு வணங்குவோம் - என்றும்
வற்றாத திருவருளைத் தேடுவோம்

(எண்ண.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மயில் நடமாடும்...

மயில் நட மாடும் மான் விளை யாடும்
மா மலர்ச் சோலையில் குயில் நிதம் பாடும்
கயல் கரை யேறும் கட வுளை நாடும்
கேதீச் சரனருள் கேடின்றிக் கூடும்

(மயில் .....)

துறை முக நகராய் இருந் ததோர் காலம்
தொழு தனர் சம் பந்தர் சுந்தரர் தானும்
அறை கழல் ஒலிக்கும் அரோ கரா ஒலிக்கும்
அடியவர் பொடியணி மேனி ஜொலிக்கும்

(மயில் .....)

**வேறு**

மன்னாரில் இருக்கிறது மாதோட்டம் – அங்கே
மகாதேவர் கோயில் கொண்டார் வாருங்கள்
இன்னார் இனியாரின்றி யாவர்க்கும் – அருள்
ஈசர் வழங்குகின்றார் வாருங்கள்

(மயில் .....)

பாலாவித் தீர்த்தத்திலே மூழ்குங்கள் – ஈசர்
பாலாவி உருகிடவே சேருங்கள்
மேலாகி நிலைபெற்ற திருநீற்றை – நீங்கள்
மேனியிலே பூசிவந்து வணங்குங்கள்

(மயில் .....)

கேதீச் சரத்தானைக் காணுங்கள் – உங்கள்
கேடுகள் நீங்கிவிடும் வாருங்கள்
பாதி கௌரியம்மை பாகராய் – ஈசர்
பாராளும் நேர்த்தியினைப் பாருங்கள்

(மயில் .....)

ஆதிப் பரம்பொருளாம் ஈசனார் – இங்கே
அமர்ந்து அருளுகிறார் லிங்கமாய்
கேதீச் சரநாதர் பாதங்கள் – பணிந்தால்
கீர்த்தி மகிமையோடு வாழலாம்

(மயில் .....)

குறிப்பு – பாலாவி – பால் + ஆவி (சிலேடை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பாவங்களைக் கழுவும் பாலாவி

**பல்லவி**

பாவங் களைக் கழுவும் பாலாவி – செய்த
பாவ வினை களையும் பாலாவி

(பாவங் களைக் .....)

**அனுபல்லவி**

தேவர் களும் விரும்பும் பாலாவி – நல்ல
திருப் பெருந் துறைசேர் பாலாவி

(பாவங் களைக் .....)

**சரணம்**

மாதோட்ட நகரினிலே கௌரி அம்மை
மாதுடன் கேதீச்சரர் அமர்ந் திருக்க
மாதுயர் போக்கும் கௌரி தீர்த்தமென
மாநிலத்தில் புகழ் பெற்ற பாலாவி

(பாவங் களைக் .....)

பிதிர்க்கடன் ஆற்றுபவர் மூழ்கி எழ
பேரருள் செய்வ திந்தப் பாலாவி
நதிக்கரை ஆகிப் பால் நிறத்தினிலே
நறும்புனல் நுரை கொண்ட பாலாவி

(பாவங் களைக் .....)

பாலாவிக் கரையினிலே உயிர் பிரிந்தால்
பரம சிவன்வந்து அருள் புரிவார்
காலா காலமெல்லாம் சிவன் அருளைக்
கண்டுஉயிர் பேரின்ப முத்தி பெறும்

(பாவங் களைக் .....)

**இசையமைப்பு :** திரு. ஜெகதீஸ்அருணா, திரு.சிவநாதன் பிரதீபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## நாவொன்று போதாது தாயே

**பல்லவி**

நாவொன்று போதாது தாயே – உந்தன்
நலம் யாவும் நான் சொல்லிப்
பலன் யாவும் பெற வேண்டில்

(நாவொன்று....)

**அனுபல்லவி**

பா வென்றும் இசை யென்றும்
பல வாறு இசைத் தாலும்
கா வென்றும் கூ வென்றும்
கதறி நான் அழு தாலும்

(நாவொன்று....)

**சரணம்**

தாயாகி உலகீன்று தனியாகித் துணையாகி
மாகாளி எனநின்ற மாதேவி உனைப்பாட

(நாவொன்று....)

தீயாகி நீராகி தென்றல்மண் ஆகாயம்
நீயாகி நிற்கின்ற நிர்மலீ உனைப்பாட

(நாவொன்று....)

**வேறு**

வேப்பிலைக் காரியென்றும் வெற்றிபெறு சூரியென்றும்
காப்புநீ தேவியென்றும் கருமாரி என்றும்பாட

(நாவொன்று....)

நாரணனின் தங்கையென்றும் நம்முருகன் அன்னையென்றும்
பூரணனின் தேவியென்றும் புகழ்ந்துநான் கவிபாட

(நாவொன்று....)

வவுனியாவின் காளியம்மா வளமெல்லாம் தாநீயம்மா
அவனியெல்லாம் அருள்பெருக்கும் அன்னை எங்கள் காளியம்மா

(நாவொன்று....)

குருமன் காட்டிருந்து கோலோச்சும் காளியம்மா
உருவங் காட்டாயெனக்கு உன்னழகைப் பாடுதற்கு

(நாவொன்று....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## குருமன்காட்டில் குடிகொண்ட காளியம்மா

அம்மா - அம்மா - காளியம்மா
அருள்வெள்ளம் பாயுதம்மா காளியம்மா - மனதில்
அன்புவெள்ளம் தோயுதம்மா காளியம்மா
இருள்போக்கும் இன்பஒளி நீயல்லவோ - எந்தன்
இருதயத்தின் சுவாசவளி நீயல்லவோ

(அருள்வெள்ளம்....)

பெருமைமிகு வவுனியாவின் மேற்கினிலே - நல்ல
பேரழகு விளங்கும்மன்னார் வீதியிலே
குருமன்காட்டில் குடிகொண்ட காளியம்மா - எமக்குக்
**கிருபை** செய்யும் தாய்நீயே காளியம்மா

(அருள்வெள்ளம்....)

பூந்தென்றல் போலவரும் காளியம்மா - நீயே
புயலாகி வந்ததுண்டு காளியம்மா
சேர்ந்தொன்றாய் அழைக்கின்றோம் காளியம்மா - எங்கள்
தேசத்தினைக் காத்திடுவாய் காளியம்மா

(அருள்வெள்ளம்....)

காலத்திற்கும் காலமென நிற்பவளே - உந்தன்
சூலத்திற்கு வேலையுண்டு காளியம்மா
ஞாலத்திற்குத் தலைவியென நிற்பவளே - நடக்கும்
ஞாயஅநி யாயங்களைப் பார்த்திடம்மா

(அருள்வெள்ளம்....)

அசுரர்களை அழித்தவளே காளியம்மா - இன்னும்
அசுரர்குலம் அழியவில்லை காளியம்மா
பசுமைதரும் பரம்பொருளே காளியம்மா - மனப்
பயம்போக்கி அருள்தருவாய் காளியம்மா

(அருள்வெள்ளம்....)

தரணியிலே பிறந்துவிட்டோம் காளியம்மா - இங்கு
தமிழராகித் தவித்துவிட்டோம் காளியம்மா
அரண்நீயே சரணடைந்தோம் காளியம்மா - எங்கள்
அவலங்களைப் போக்கிடுவாய் காளியம்மா

(அருள்வெள்ளம்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வற்றாப்பழை கண்ணகை அம்மா

கண்ணகை அம்மா – எங்கள்
கண்ணகை அம்மா
வற்றாப் பழை உறையும்
கண்ணகை அம்மா

(கண்ணகை...)

எண்ணமெல்லாம் நிறைந்திருக்கும் கண்ணகை அம்மா
எங்கள்குலம் வாழவைக்கும் கண்ணகை அம்மா

(கண்ணகை...)

வற்றாத அருள்பொழியும் கண்ணகை அம்மா
வாழ்வோடு இணைந்தவளே கண்ணகை அம்மா

(கண்ணகை...)

பெத்தாச்சி என்றழைத்தோம் கண்ணகை அம்மா
பெற்றவளே எமைக்காப்பாய் கண்ணகை அம்மா

(கண்ணகை...)

நீரில் விளக்கெரிய நீஅருள் செய்தாய்
நீசர்களைக் காயெறிந்து (பனிச்சங்) நீகலைத் திட்டாய்

(கண்ணகை...)

வைகாசிப் பொங்கலுக்கு வழிபட வந்தோம்
வந்தோரை வாழவைப்பாய் கண்ணகை அம்மா

(கண்ணகை...)

பொங்கலிட்ட அடியவர்கள் வாழ்வு பொங்கிட
பொன்னோடு புகழோடு வாழ்ந்திடச் செய்வாய்

(கண்ணகை...)

நோய்நொடிகள் இல்லாமல் வாழ்ந்திடச் செய்வாய்
நூறாயிரம் ஆண்டு நீயும் வாழுவாய்

(கண்ணகை...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அரசர்பதி கண்ணகை அம்மன்

கண்ணகை அம்மா எங்கள் கண்ணகை அம்மா
கற்பரசி நீதானே கண்ணகை அம்மா

(கண்ணகை .....)

அரசர்பதி தனில்வாழும் கண்ணகை அம்மா - வரும்
அடியவர்கள் குறைதீர்க்கும் கண்ணகை அம்மா

(கண்ணகை .....)

அரசநீதி காத்தவளே கண்ணகை அம்மா - எங்கள்
அரசர்பதி கோவில்கொண்ட கண்ணகை அம்மா

(கண்ணகை .....)

கொடுமைகளை எதிர்த்தவளே கண்ணகை அம்மா - மதுரையைக்
கோபங்கொண்டு எரித்தவளே கண்ணகை அம்மா

(கண்ணகை .....)

பொற்கோவில் தனில்வாழும் கண்ணகை அம்மா - நாங்கள்
போற்றியுன்னை வணங்குகின்றோம் கண்ணகை அம்மா

(கண்ணகை .....)

வவுனியாவின் பெருஞ்சொத்தே கண்ணகை அம்மா - உழைக்கும்
வயலுழவர் வாழ்வுகாக்கும் கண்ணகை அம்மா

(கண்ணகை .....)

காடுவயல் சூழ்பதியில் கண்ணகை அம்மா - உனக்கு
கண்குளிரப் பொற்கோவில் அமைந்ததே அம்மா

(கண்ணகை .....)

வந்தாரை வாழவைக்கும் வன்னி மண்ணிலே - எம்மை
வாழவைக்கும் தெய்வம்நீயே கண்ணகை அம்மா

(கண்ணகை .....)

வற்றாத வளம்நிறைந்த வவுனியா மண்ணில் - எங்கள்
வாழ்வுக்கு ஒளிநீயே கண்ணகை அம்மா

(கண்ணகை .....)

பொங்கல் வைத்துப் படையலிட்டோம் சந்நிதியிலே - வாழ்வு
பொங்கவேண்டும் எங்கள்தாயே கண்ணகை அம்மா

(கண்ணகை .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கிடாய்ச்சூரி கண்ணகை அம்மா

ஊரெல்லாம் இடம்பெயர்ந்த காலத்திலே - எங்கள்
ஊர்காத்த உத்தமியே கண்ணகையம்மா
கார்பார்த்த வேளாளர் வாழும்பதியாம் - நல்ல
கிடாய்ச்சூரி வாழ்நிதியே கண்ணகையம்மா

(ஊரெல்லாம் .....)

யுத்தத்தினால் துன்பப்பட்டு வந்தவருக்கு - வாழ்வு
தந்தஊராய் இருக்கும்கிடாய்ச் சூரிமண்ணிலே
யுத்தஅழி வின்றிவாழச் செய்தவளே - என்றும்
முத்துமாரி அம்மனோடு வாழ்பவளே

(ஊரெல்லாம் .....)

வேள்விசெய்யும் கோவிலிலே அமர்ந்திருந்தாய் - இன்று
விண்ணுயர்ந்த கோபுரத்துள் வாழுகின்றாய்
கேள்விகேட்டு மதுரையையே எரித்தவளே - எங்கள்
கிடாய்ச்சூரி எரியாமற் காத்தவளே

(ஊரெல்லாம் .....)

குளக்கட்டின் அருகினிலே கோவில்கொண்டாய் - மக்கள்
குறைதீர்க்க எந்நாளும் ஆவல்கொண்டாய்
வளங்காட்டி ஊரையெல்லாம் வாழவும்வைத்தாய் - யாவர்க்கும்
வழிகாட்டி துன்பங்களைப் போகவும்வைத்தாய்

(ஊரெல்லாம் .....)

நோய்நொடிகள் தீர்த்துவைத்து அருள்புரிவாய் - அடியார்
நூறுகோடி வந்தாலும் உணவிடுவாய்
காய்கனிகள் இயற்கைவளம் நிறைந்திருக்க - ஊரைக்
காத்தருளும் தெய்வம்நீயே கண்ணகையம்மா

(ஊரெல்லாம் .....)

வசந்தவாழ்வைத் தந்தருளும் கண்ணகையம்மா - உனக்கு
வசந்தன்சிந்து பாடினாரோர் அடியவரம்மா
கசந்தவாழ்வைக் கரும்பாக மாற்றியருளுவாய் - எங்கள்
கண்மணியே அற்புதமே கண்ணகையம்மா

(ஊரெல்லாம் .....)

மாடுமனை செழிக்கவைப்பாய் கண்ணகையம்மா - வீட்டில்
மங்கலங்கள் பொலியவைப்பாய் கண்ணகையம்மா
நாடுதேசம் வாழவைப்பாய் கண்ணகையம்மா - மக்கள்
நாளும்வாழ உனைத்தொழுதோம் கண்ணகையம்மா

(ஊரெல்லாம் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பண்டாரிகுளம் முத்துமாரி அம்மன்

**பல்லவி**

கண்டார் கசிந்துருக முத்துமாரி அம்மனாக
பண்டாரி குளத்தினிலே பார்வதியார் கோவில் கொண்டார்

(கண்டார் ....)

**அனுபல்லவி**

வந்தாரை வாழவைக்கும் வவுனியா நகரினிலே
வந்துவழி பாடுசெய்தால் வரமருளி வாழ வைப்பார்.

**சரணம்**

விளக்கினில் ஒளியெனவே விளங்கும்முத்து மாரியம்மன்
உழைத்திடும் மக்களுக்காய் ஊர்நடுவே கோவில்கொண்டார்
கிழக்கினில் வயல்வெளியாய் சுற்றிவர ஊர்மனையாய்
இருக்கும் இடத்தினிலே இனிதாக அமர்ந்துகொண்டார்.

(கண்டார் ....)

பழைமை மிக்கதான பண்டாரிகுளம் அம்மனைநாம்
இளமைக் கோலத்திலே இப்போதும் தரிசிக்கலாம்
வழமைகள் ஊரறியும் வருடந்தோறும் வேள்விசெய்ய
உளமகிழ்ந் தம்மன்இந்த ஊரெல்லாம் வாழவைத்தார்

(கண்டார் ....)

நோய் நொடியைத் தீர்த்து வைப்பார்
நொந்த வரை வாழ வைப்பார்
தாய் எனும் படியாய் எம்மைத்
தன் மடியில் அமர வைப்பார்

(கண்டார் ....)

தூரத்து ஊரவரும் நேர்த்திவைக்கக் குறைதீர்த்து
தூங்காமல் விழித்திருக்கும் தூயவடி வானஅம்மன்
பாரத்தைத் தான்சுமந்து பக்தர்களை வாழவைப்பார்
பண்டாரி குளத்திலுள்ள பழையமுத்து மாரிஅம்மன்

(கண்டார் ....)

பூசை திருவிழாக்கள் புதுக்கோயில் உற்சவங்கள்
ஆசையாய் அபிஷேகம் அரியகும்ப அபிஷேகம்
நேசமொடு அடியவர்கள் நிறைவேற்ற அருள்புரிந்து
பாசமொடு தாயாக பண்டாரி குளத்தமர்ந்தார்

(கண்டார் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தெல்லிப்பழை துர்க்கை அம்மன்

தெல்லிப்பழை தன்னில் வாழும் துர்க்கையம்மா – இந்தத்
தேசமெல்லாம் புகழுகின்ற துர்க்கையம்மா
அள்ளியள்ளி அருள் வழங்கும் துர்க்கையம்மா – இந்த
அகிலத்துக்கே நீதானே அன்னையம்மா

(தெல்லிப்பழை......)

தீர்த்தக்குளமுங் கோபுரமுந் தேருமாய்க் கொண்டு – பார்க்கத்
திகட்டாத அழகு தரும் கோவிலிலே
வார்த்தைகளுக் கெட்டாத வடி வழகில் – இருக்கும்
வற்றாத பே ரழகே துர்க்கையம்மா

(தெல்லிப்பழை......)

ஏழுசெவ்வாய் விரதத்தோடு பூசைகள் செய்தால் – எவர்க்கும்
ஏழுசெவ்வாய் எட்டுச்செவ்வாய் தோஷங்கள் நீங்கும்
பாழுந்துன்பம் பிள்ளையின்றிப் பரி தவித்தாலும் – பொங்கிப்
படையலிட்டால் பிள்ளைவரந் தந்திடுந் தாயே

(தெல்லிப்பழை......)

**வேறு**

யாழ்ப்பாணம் வடக்கினிலே தெல்லிப்பழை ஊரினிலே
காப்பாக அமர்ந்திருக்கும் துர்க்கையம்மா – எம்மைக்
காக்கவேண்டும் கனியமுதே துர்க்கையம்மா

அறநெறிகள் தழைக்கவேண்டும் அன்புநெறி சிறக்கவேண்டும்
கறவையினம் உயிரினங்கள் துன்பமின்றி – எந்தக்
காலத்திலும் வாழவேண்டும் துர்க்கையம்மா

எல்லோரும் வாழவேண்டும் ஏற்றத்தாழ்வு நீங்கவேண்டும்
நல்லோர்கள் பெருகவேண்டும் துர்க்கையம்மா – இந்த
நானிலமே செழிக்கவேண்டும் துர்க்கையம்மா

(தெல்லிப்பழை......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## திருகோணமலை நகரக் காளியம்மா

நகரக் காளி கோயிலென்றே நாடுபோற்றுங் கோயிலிலே
அகம் மகிழ அமர்ந்திருக்குங் காளியம்மா – எங்கள்
ஆருயிரே நீதானே காளியம்மா

(நகரக் .....)

கௌரி விரதம் இருக்கும்பெண்கள் கையேந்தி வேண்டிடவே
கருணை செய்யும் திருமலையின் காளியம்மா – எங்கள்
கஷ்டமெல்லாந் தீர்த்திடுவாய் காளியம்மா

(நகரக் .....)

**வேறு**

திருமலையின் நகரத்திலே இருக்குந் தாயே
தீராத வினைகளெல்லாந் தீர்ப்பாய் நீயே
அருமருந்தே ஆதிபரா சக்தி தாயே
ஆதாரம் உயிர்களுக்கு நீயே தாயே

பெருகியெங்கும் அருள்வெள்ளம் பாய்ந்திடச் செய்வாய்
பெருவாழ்வை அடியவர்கள் பெற்றிடச் செய்வாய்
உருகியுன்னை வணங்கிநிற்கும் அடிய வர்களின்
உள்ளமெல்லாம் குளிர்ந்திடவே கண்கள் திறப்பாய்

(நகரக் .....)

**வேறு**

கருவளர அருள்புரிவாய் கல்யாணம் முடித்துவைப்பாய்
கணவனோடு வாழவைப்பாய் காளி அம்மா – எங்கள்
கண்கண்ட தெய்வம்நீயே காளி அம்மா

கலைமகளும் அலைமகளும் கணபதியும் அருகிருக்க
கருணையோடு கோயிலிலே இருக்குந் தாயே – எங்கள்
கர்மவினை போக்கிடம்மா காளித் தாயே

(நகரக் .....)

கோணேசர் மலையிருந்து கோலோச்சுந் திருமலையில்
கோயில்கொண்டு எழுந்தருளுங் காளி அம்மா – எங்கள்
குற்றங்குறை தீர்த்திடம்மா காளி அம்மா

ஊனோடு உயிருருக உன்னைவலம் வந்தோம்
உலகுபோற்ற வாழவைப்பாய் காளி அம்மா – இந்த
ஊருலகைக் காத்திடம்மா காளி அம்மா

(நகரக் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மாத்தளையில் மகிழ்ந்திருக்கும்....

மாத் தளையில் மகிழ்ந்திருக்கும் முத்துமாரி அம்மா – எங்கள்
மாடுமனை வாழவேண்டும் முத்துமாரி அம்மா
காத் தளிக்கும் தாய்நீயே முத்துமாரி அம்மா – எங்கள்
கவலையெல்லாம் போக்கிடுவாய் முத்துமாரி அம்மா
(மாத் தளையில் ....)

தேர்த் திருவி ழாவினிலே தேடிவருந் தாயே – எங்கள்
தேவைகளைப் பூர்த்திசெய்வாய் தெய்வமெனும் நீயே
மாத் துயரில் வாடுகின்ற தமிழர்களைப் பாராய் – ஒரு
மார்க்கமின்றி அல்லலுறும் எமதுதுயர் தீராய்.
(மாத் தளையில் ....)

வார்த்தை இல்லை துயரைச்சொல்ல முத்துமாரி அம்மா – எங்கள்
வருங்காலம் உனதுகையில் முத்துமாரி அம்மா
பார்த் திடுவாய் கண்திறந்து முத்துமாரி அம்மா – எங்கள்
பாவங்களைப் போக்கிடுவாய் முத்துமாரி அம்மா
(மாத் தளையில் ....)

வீதி ஓரம் கோயில்கொண்ட முத்துமாரி அம்மா – எம்மை
வீதியிலேன் அலையவிட்டாய் முத்துமாரி அம்மா
ஆதி மூல மானவளே முத்துமாரி அம்மா – எங்கள்
அவலங்களைப் போக்கிடுவாய் முத்துமாரி அம்மா
(மாத் தளையில் ....)

நீதி முறை நீகேட்பாய் முத்துமாரி அம்மா – எங்கள்
நெஞ்சக்கனல்த் தீயணைப்பாய் முத்துமாரி அம்மா
நாதி அற்ற தமிழரானோம் முத்துமாரி அம்மா – நமக்கு
நல்லவழி காட்டிடுவாய் முத்துமாரி அம்மா
(மாத் தளையில் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## அழகினுக்கு அழகு சேர்க்கும் நயினைத் தாய்

கடல் நடுவே கோவில் கொண்ட
நாக பூஷணி அம்மா - எம்மைக்
காத்தருள வேண்டு மம்மா
நாக பூஷணி அம்மா

நயினை என்னும் தீவில் வாழும்
நாக பூஷணி அம்மா - என்றும்
நம் வினைகள் தீர்த்தருள்வாய்
நாக பூஷணி அம்மா

(கடல் நடுவே .....)

அள்ளி அள்ளி அமுது வழங்கும்
அன்ன பூரணித் தாயே - என்றும்
ஆதரவாய் எமைக் காக்கும்
அன்னை தெய்வம் நீயே

(கடல் நடுவே .....)

**வேறு**

பூக் கொணர்ந்து நாகம்பூசை செய்ததனால் - நாக
பூஷணியாய்ப் புகழ் பெற்றாய் நாகபூஷணி அம்மா
பாக் கொணர்ந்து உனைப்பாடும் அடியவர்க்கும் - பெரும்
பாவ வினை தீர்த் தருள்வாய் நாகபூஷணி அம்மா

(கடல் நடுவே .....)

**வேறு**

கடல் அலைகள் தாலாட்ட கண் துயில்வாய்
காலைக் கதிர் ஒளிபடவே கண் மலர்வாய்
உடல் பொருளோ டாவி யெல்லாம் உனக்கெனவே
உருகி நிற்கும் அடியவர்க்காய் உளம் மகிழ்வாய்

(கடல் நடுவே .....)

**வேறு**

அழகான கோபுரமும் கோயிலுமாய்
அகிலம் போற்றும் தேரோடு பூசையுமாய்
அழகாக வீற்றிருக்கும் அன்னை தாயே
அழகினுக்கு அழகுசேர்க்கும் நயினைத் தாயே.

(கடல் நடுவே .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## யாழ் - எழில் வண்ணைக் காமாட்சி

**பல்லவி**

வரம் அருள்வாய் அன்னை மீனாட்சி – செல்வ
வளம் அருள்வாய் வண்ணை காமாட்சி

(வரம் அருள்வாய் ....)

**அனுபல்லவி**

உன்னை நிதம் பாடி உருகுதற்கே எனக்கு
வரம் அருள்வாய் வண்ணை காமாட்சி

(வரம் அருள்வாய் ....)

**சரணம்**

ஊனுரு குந்தமிழில் உளமுரு கப்பாடி
நானுருகி நிற்றல் நாயகி காணாயோ
தேனுரு குந்தமிழில் தேவியுன் புகழ்பாட
ஏனரு கில்வாராய் எழில்வண்ணைக் காமாட்சி

(வரம் அருள்வாய் ....)

பாலோடு பழமுமல்ல பைந்தமிழும் நான்தருவேன்
நீயோடி வந்தெனக்கு நின்னருளைத் தந்திடம்மா
சேலோடும் விழியாலே சிறியவன் எனைப்பாராய்
நூலோடும் இடையாளே நின்பாதம் சரணம்அம்மா

(வரம் அருள்வாய் ....)

செந்தமிழ் மொழியாலே உன்னருட் பெருமைகளை
சந்ததமும் பாடும் சக்திநான் வேண்டுகின்றேன்
அந்தமில் உன்னுருவை அவனியில் யாரறிவார்
அம்பிகையே என்னை ஆதரித்தே அருள்வாய்

(வரம் அருள்வாய் ....)

**வேறு**

வையகம் உன்கையில் அர சாட்சி
வானமெல்லாம் உந்தன் பெருங் காட்சி
மெய்யிது இன்னும்மேன் ஆ ராட்சி – யாழ்
வண்ணையிலே வாழும் கா மாட்சி

(வரம் அருள்வாய் ....)

**இசையமைப்பு : திரு.உமாகாந்தன் (20.04.1978)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## காரை நகர் மணற் காட்டு முத்துமாரி அம்மன்

**பல்லவி**

காரை நகர் மணற் காட்டுக் கும்ப நாயகி அம்மா – என்றும்
காவ லாகி எமைக் காக்கும் முத்து மாரி அம்மா

(காரை நகர் .....)

**அனுபல்லவி**

ஊரை அம்மை நோய் பிடிக்க நீக்கி வைத்த தாயே – அன்று
உத்த மமாய்க் கும்பத் திலே எழுந்து வந்தாய் நீயே

(காரை நகர் .....)

**சரணம்**

பாரை ஆளும் அறிவு பெற்ற பலர் வாழ்ந்த ஊரில் – நீ
பக்கு வமாய் வந்த மர்ந்தாய் முத்து மாரித் தாயே
வேரை விட்டு உலக மெல்லாம் வியா பித்த மக்கள் – உனக்கு
விண்ணு யரக் கோபு ரத்துக் கோயில் தந்தார் அம்மா

(காரை நகர் .....)

தேரைச் செய்தார் வலம் வரவே தீர்த்தக் குளமும் தந்தார் – நல்ல
திரு விளங்கும் கோபு ரங்கள் நாற் புறமும் அமைத்தார்
திரு முறை முற் றோதல் திருவா சகப் படிப்பு – மிகச்
சிறப் புடனே நடை பெறுமே தேச மெல்லாம் வாழ

(காரை நகர் .....)

தை அமா வாசை தொட்டு மாசி அமா வாசை வரை – என்றுந்
தைய லுந்தன் கோயி லிலே திரு முறைகள் படிப்பார்
மை விழி உன் கோயிலிலே அமா வாசை நாளினிலே – ஊரார்
மண் செழிக்கத் திரு வாசகம் மனம் ஒன்றிப் படிப்பார்

(காரை நகர் .....)

கல்வி கலை செல்வ மெல்லாம் கணக் கின்றி வளரும் – எங்கள்
காரை நகர்ப் பூ மியிலே கால் கொண்ட தாயே
வல்லி கும்ப நாய கியே முத்து மாரி அம்மா – உலகம்
வாழ வழி பட்டு நின் றோம் வானுயர வைப்பாய்

(காரை நகர் .....)

உன்ன ருளைப் பெற்று நாங்கள் உல காள வேண்டும் – எங்கள்
உத்த மியே பத்தி னியே முத்து மாரி அம்மா
கன்னற் சுவைக் கனி அமுதே காத்த வராயன் தாயே – உந்தன்
கால் பணிந்து தெண்ட னிட்டோம் காத் திடுவாய் நீயே

(காரை நகர் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தோணிக்கல் நாகபூஷணி அம்மா

**பல்லவி**

தோணிக்கல்லில் வீற்றிருக்கும் நாகபூஷணி அம்மா – நயினை
நாகபூஷணி அம்மா – உனக்குக்
காணிக்கையாய்ப் பூசைசெய்தோம் காக்கவேண்டும் அம்மா
(தோணிக்கல்லில் ....)

**அனுபல்லவி**

ஏணிப்படி நீயல்லவோ ஏற்றிவைத்தல் கடனல்லவோ – எங்கள்
எண்ணப்படி நாம்வாழ வைப்பாய் – என்றும்
ஏற்றமெல் லாம்பெறவே காப்பாய்
(தோணிக்கல்லில் ....)

**சரணம்**

வவுனியாவின் தென்மேற்கே வந்தமர்ந்து கொண்டாய் – நாங்கள்
வழிபடவே அருள்புரிந்து வாழ்வில்வளம் தந்தாய்
செவிகுளிரப் பாடுகின்றோம் தேசத்தினைக் காப்பாய் – எங்கள்
சிந்தையிலே குடியிருந்து செந்தமிழைக் காப்பாய்.
(தோணிக்கல்லில் ....)

ஊர்மனைக்கு நடுவினிலே உத்தமமாய் அமர்ந்தாய் – எங்கள்
உள்ளத்திலே குடியிருந்து நித்தமெமைக் காப்பாய்
பார்புகழும் நயினைத்தாயின் வடிவெனவே மலர்ந்தாய் – எங்கள்
பாக்கியமே புண்ணியமே பார்புகழ வைப்பாய்
(தோணிக்கல்லில் ....)

பக்திகொண்ட அடியவர்க்கு பழவினைகள் தீர்ப்பாய் – என்றும்
பாவவினை பற்றாமல் பாதுகாத்து அருள்வாய்
சக்தியெல்லாந் தந்தருளும் சர்வலோக நாயகியே – உன்னைச்
சரணடைந்தோம் யாவருக்கும் சந்தோசத்தைத் தருவாய்
(தோணிக்கல்லில் ....)

அன்னைஉமா தேவியும் நீ அரிமாலின் துணைவியும் நீ – என்றும்
உன்னைமற வாதிருக்கும் ஒருவரத்தைத் தருவாய் நீ
கன்னல்ச்சுவைக் கனியமுதே கலை மகளும் நீயே – எங்கள்
இன்னல்களைப் போக்கும்நாக பூஷணியும் நீயே
(தோணிக்கல்லில் ....)

கல்விசெல்வம் தொழில்தருவாய் காவலாகி நோய்தீர்ப்பாய் – எந்தக்
கஷ்டத்திலும் கைகொடுத்து கருணையோடு எமைக்காப்பாய்
சொல்லிலுன்னைப் பாடுவோர்க்குச் சுகத்தைத்தரும் சுந்தரியே – மனச்
சோர்வின்றியே நாம்வாழத் துணைபுரிவாய் தாயே
(தோணிக்கல்லில் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## குட்ஸ்செட்வீதி கருமாரி அம்மன்

வவுனியா புகையிரத நிலையத்திற்கு மேற்கினிலே
குட்ஸ்செட்வீதி அருகிருக்கும் கருமாரி அம்மா!
கவனம்வைத்து அடியவரைக் காத்தருளும் தாயே!
கருமாரி அம்மனென கோவில்கொண்டாய் நீயே!

(வவுனியா ......)

தமிழர்களின் நிறத்தினிலே தங்கமென ஜொலிப்பவளே!
தமிழ்மொழிபோல் இனிதாக தரணியெல்லாம் செழிப்பவளே!
அமிழ்தெனவே அருளையெல்லாம் அள்ளியள்ளித் தெளிப்பவளே!
அடியவர்கள் பாவவினை அடியோடு அழிப்பவளே

(வவுனியா ......)

அடியவரைக் காத்திடவே அன்புபொங்கக் கோவில்கொண்டாய்
அளவான கோயிலிலே அழகாக இனிதமர்ந்தாய்
கொடியவரை அழித்திடவே கோபங்கொள்ளும் துர்க்கையும்நீ
கோபமின்றி அருள்சுரக்கும் கோதைஅபி ராமியும்நீ

(வவுனியா ......)

காசிவிசா லாட்சியும்நீ காளிமக மாயியும்நீ
கௌரிஉமை பார்பதிநீ கல்வித்தெய்வம் கலைமகள்நீ
வீசிவிழி நடம்புரிந்த வீரமா காளியும்நீ
விண்ணதிரப் போர்புரிந்த வீரபத்ர காளியும்நீ

(வவுனியா ......)

காவியத்தில் போற்றுகின்ற கண்ணகியும் நீதானே
கண்ணன்திரு மாலின்செல்வ லக்ஷ்சுமியும் நீதானே
ஓவியத்தில் எழுதரிய உத்தமியே கருமாரி
ஓங்கார மந்திரத்தின் உட்பொருளே நீதானே

(வவுனியா ......)

அன்னையென வழிபட்டோர் அவலந்தீர்க்கும் கருமாரி
ஆகாத தொன்றுமில்லை அனைவரையும் காத்தருள்நீ
உன்னைநம்பி வழிபட்டோர் உள்ளமெல்லாம் குளிரவேண்டும்
ஊரெல்லாம் செழிக்கவேண்டும் உத்தமியே காத்திடம்மா

(வவுனியா ......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## இறம்பைக்குளம் கருமாரி நாகபூஷணி அம்மன்

வவுனியாவின் கிழக்கினிலே இறம்பைக்குளம் பதியினிலே
கருணைபொங்க வீற்றிருக்கும்
கருமாரி நாகபூஷணி அம்மா – ஸ்ரீ
கருமாரி நாகபூஷணி அம்மா

(வவுனியாவின் .......)

நாகதோஷம் கிரகதோஷம் தீர்த்துவைக்கும் அம்மனாக
நமக்கெல்லாம் வாழ்வுதரும் அம்மா – ஸ்ரீ
கருமாரி நாகபூஷணி அம்மா – இறம்பைக்குளம்
கருமாரி நாகபூஷணி அம்மா – வவுனியா இறம்பைக்குளம்
கருமாரி நாகபூஷணி அம்மா

(வவுனியாவின் .......)

நறு விலி மரமிருக்கும் நாகத்திற்குப் பால்வார்த்தால்
கரு வினில் பிள்ளைவரும் என்று – பெண்கள்
நம்பித்தொழ அருள்வழங்கும் அம்மா

திரு மண தோஷம்நீங்க செவ்வாய்தோஷம் விலகிப்போக
ஒரு மன தோடுபெண்கள் வழிபட – அவர்க்கு
திருமணம் நடத்திவைக்கும் அம்மா

(வவுனியாவின் .......)

வெள்ளை நாகம் பூசைசெய்யும்
விருட்சம் உள்ளே அமைந்திருக்கும்
கள்ளமில்லா அன்பு கொண்ட அடியவர்க்கு – என்றும்
கருணைசெய்யும் கருமாரி நாகபூஷணி அம்மா

நேர்த்தி வைப்பார் தீக் குளிப்பார்
நெஞ்சில் உன்னை நினைத் திருப்பார்
பூர்த்தி செய்வார் விரதத்தை அடியவர்கள் – அவர்க்குப்
பூரணமாய் வரமருளும் நாகபூஷணி அம்மா

(வவுனியாவின் .......)

**வேறு**

தொட்டில் கட்டி வரம் கேட்பார்
தொடர்ந்து செவ்வாய் விளக்குவைப்பார்
அன்னதானப் பூசைசெய்வார் அடியவர்கள் – அவர்க்கு
கருணை செய்யும் கருமாரிஅம்மா – இறம்பைக்குளம்
கருமாரி நாகபூஷணி அம்மா – வவுனியா இறம்பைக்குளம்
கருமாரி நாகபூஷணி அம்மா

(வவுனியாவின் .......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## குருக்கள் புதுக்குளத்து மீனாட்சி அம்மன்

குருக்கள் புதுக்குளத்து மீனாட்சி அம்மன் – எங்கள்
குறைகளெல்லாம் தீர்த்துவைக்கும் மீனாட்சி அம்மன்.
அருமை பெருமைமிக்க மீனாட்சி அம்மன் – இந்த
அகிலத்தைக் காத்தருளும் மீனாட்சி அம்மன்

(குருக்கள் .....)

மதுரை நகரில்வாழும் மீனாட்சி அம்மன் – எங்கள்
மனதில் குடியிருக்கும் மீனாட்சி அம்மன்
உதிரும் பிட்டுஉண்ட சொக் கேசர் – மகிழ
உலகீன்ற அன்னையே மீனாட்சி அம்மன்

(குருக்கள் .....)

பிட்டுக்கு மண் சுமந்த சொக்கேசர் – கூலி
பெறாமலே அடிபட்டு நொந்து நின்றார்
மட்டுக்கு அடங்காத கருணை கொண்டே – கண்ணால்
மண்ணெல்லாம் அமுதூட்டும் மீனாட்சி அம்மன்

(குருக்கள் .....)

குமர குருபரரின் பிள்ளைத் தமிழும் – நல்ல
குற மென்னும் பாட்டினையும் சூடிக்கொண்டே
குபேர செல்வந்தர அடியவர்க் காய் – வந்து
குருக்கள் புதுக்குளத்தில் அமர்ந்த அம்மன்

(குருக்கள் .....)

வேப்ப மரத்தோடு பனை மரமும் – நல்ல
விளாவும் பூவரசும் வயல் வெளியும்
சூழ அமர்ந்திருக்கும் மீனாட்சி அம்மன் – எங்கள்
சுற்றங்களை வாழவைக்கும் மீனாட்சி அம்மன்

(குருக்கள் .....)

இயற் கையின் அரவணைப்பில் இருப்பவளே – நல்ல
இளந் தென்றல் பாட்டிசைக்க மகிழ்பவளே
கயற்கண் மீனாட்சி கருணை செய்வாய் – இரு
கண்ணால் எமைக்காப்பாய் அடிபணிந்தோம்

(குருக்கள் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## புளியங்குளம் முத்துமாரி அம்மன்

புளியங் குளத்தில் கோவில்கொண்ட முத்துமாரி அம்மா – இந்தப்
பூவுலகைக் காத்திடுவாய் முத்துமாரி அம்மா
வழிபடுவோர் குறைகள் தீர்ப்பாய் முத்துமாரி அம்மா – கண்டி
வழியருகே அமர்ந்திருக்கும் முத்துமாரி அம்மா
(புளியங் குளத்தில் ....)

மாத் தளையில் இருந்துவந்த முத்துமாரி அம்மா – எங்கள்
மாத்துயரைப் போக்கிடுவாய் முத்துமாரி அம்மா
காத் திடுவாய் உலகையெல்லாம் முத்துமாரி அம்மா – எங்கள்
கண்மணியே கதிரொளியே முத்துமாரி அம்மா
(புளியங் குளத்தில் ....)

காத்த வரா யரின்தாயே முத்துமாரி அம்மா – எம்மைக்
காத்துஅருள் தந்திடுவாய் முத்துமாரி அம்மா
நாத்து நட்டோம் பயிர்வளர்த்தோம் முத்துமாரி அம்மா - நமக்கு
நல்லபலன் தந்திடுவாய் முத்துமாரி அம்மா
(புளியங் குளத்தில் ....)

சக்தி தரும் தெய்வமும்நீ முத்துமாரி அம்மா – நல்ல
புத்திதரும் தெய்வமும்நீ முத்துமாரி அம்மா
சொத்து சுகம் பெருகவேண்டும் முத்துமாரி அம்மா – உலகம்
சோகமின்றி வாழவேண்டும் முத்துமாரி அம்மா
(புளியங் குளத்தில் ....)

நோய் நொடிகள் நீங்கவேண்டும் முத்துமாரி அம்மா – புதிதாய்
நோய்வராமற் காக்கவேண்டும் முத்துமாரி அம்மா
தாய் மடியாய் எமைக்காப்பாய் முத்துமாரி அம்மா – எல்லாத்
தர்மத்தையும் வாழவைப்பாய் முத்துமாரி அம்மா
(புளியங் குளத்தில் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கோவில்க்குஞ்சுக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன்

முத்துத் தெண்டிப் பொங்கல் பொங்கும்
முத் துமாரி அம்மா - குஞ்சுக்குளம்
முத்து மாரி அம்மா
கோவில்க் குஞ்சுக்குளம் - ஸ்ரீ
முத்து மாரி அம்மா

(முத்துத் தெண்டி .....)

**வேறு**

அறுபத்தி நான்கு ஊர்களுக்கு அம்மன் எழுந் தருளி - அங்கு
அடிய வர்க்கு அருளளித்து அரிசி பொருட்கள் தெண்டி
பொங்கல் வைத்துப் பூசை செய்யும் பெருமை மிக்க தாயே - எங்கள்
பேரருளே பெரும் பொருளே முத்து மாரித் தாயே

(முத்துத் தெண்டி .....)

**வேறு**

கரகாட்டக் காரரோடு வந்தமர்ந்தாய் அம்மா - இங்கு
காத்தவ ராயரோடு காலூன்றி நின்றாய்
வரம்வேண்டி தவம் கிடக்கும் அடியவர்க்கு - எல்லா
வளங்களையும் தருபவளே முத்துமாரி அம்மா

**வேறு**

மாடுகண்டு மக்கள் மனை வாழ வைப்பாய் அம்மா
மழை பொழிந்து மண்ணையெல்லாம் குளிர வைப்பாய் அம்மா
காடுகரம்பை வயல்க ளெல்லாம் செழிக்க வைப்பாய் அம்மா
கல்வி கலை சிறப்புறவே கருணை செய்வாய் அம்மா

(முத்துத் தெண்டி .....)

பொய்களவு புரட்டு இன்றி வாழ வைப்பாய் அம்மா
பூமி யையே சொர்க்க மென ஆக்கிடுவாய் அம்மா
மெய் வருத்தம் நோயின்றி வாழவைப்பாய் அம்மா
மேன்மை யெல்லாம் நாம் பெறவே அருள்புரிவாய் அம்மா

(முத்துத் தெண்டி .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கற்குழியில் குடியிருக்கும் முத்துமாரி அம்மன்

கற்குழியில் குடியிருக்கும் முத்துமாரி அம்மா! – மக்கள்
கவலையெல்லாம் போக்கிடுவாய் முத்துமாரி அம்மா!
உற்றதுணை நீதானே முத்துமாரி அம்மா! – இந்த
உலகமெல்லாம் வாழவேண்டும் முத்துமாரி அம்மா!.

(கற்குழியில் .....)

கற்பனைக்கும் எட்டாத கருணைத்தெய்வம் நீயே – உந்தன்
கால்பணிந்தோம் காத்தருள்வாய் முத்துமாரி அம்மா!
அற்பசிறு புழுப்போல்நாம் அல்லலுறல் சரியா? - உன்
அடியவர்க்கு அவலநிலை ஏற்படலும் விதியா?

(கற்குழியில் .....)

வவுனியாவின் நகரருகே வளமாய்வந் தமர்ந்தாய் - நல்ல
வடிவான கோவில்கட்டி ஆதரித்தோம் நாங்கள்
கவனியாமல் நீயிருந்தால் காப்பதுயார் தாயே! – எங்கள்
கவலையெல்லாம் போக்கிடுவாய் முத்துமாரித் தாயே!

(கற்குழியில் .....)

நோயென்றும் வறுமையென்றும் நொந்து நாங்கள்வாட – நீ
நோக்காது இருந்துவிட்டால் யாரை நாங்கள்நோக
தாயென்றும் பேர்கொண்டு பார்த்திருத்தல் நன்றோ – அருள்
தந்திடம்மா வாழ்வெமக்கு முத்துமாரி அம்மா

(கற்குழியில் .....)

பூசையெல்லாம் செய்கின்றோம் புதுமலரைத் தூவி – எங்கள்
பூசைகளை ஏற்றிடம்மா புதுவாழ்வு காட்டி
ஆசைகொண்ட வாழ்வினைநாம் அடையவேண்டும் தாயே – இந்த
அகிலத்தையே ஆட்டிவைக்கும் முத்துமாரித் தாயே

(கற்குழியில் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஓமந்தை நாவற்குளம் வீரசக்தி அம்மன்

**பல்லவி**

நாவற் குளம் வீரசக்தி அம்மனே – என்றும்
நம்ம வர்க்கு நல்லகுல தெய்வமே

(நாவற்குளம் .....)

**அனுபல்லவி**

காவற் தெய்வம் ஐயனாரும் காமாட்சி – தாயும்
கருணை செய்ய வீற்றிருக்கும் தெய்வமே

(நாவற்குளம் .....)

**சரணம்**

பாவக் கடல் கடக்கவந்தோம் நாங்களே – நாங்கள்
பட்ட துன்பம் கொஞ்சமல்ல கேளுமே
ஏவல் பில்லி சூனியங்கண் ணூறுகள் – எம்மை
எய்தி டாமல் காக்கவேண்டும் அம்மனே

(நாவற்குளம் .....)

ஓமந் தையாம் நகரத்துக்கு கிழக்கிலே – மிக
உன்ன தமாய் அமர்ந்துகொண்ட அம்மனே
நாமத் தையே வீரசக்தி யாய்க்கொண்டு – என்றும்
நல்ல ருளைத் தந்துவரும் தெய்வமே

(நாவற்குளம் .....)

சாபத் தையும் பாபத்தையும் போக்கிடும் – பெருஞ்
சக்தி மிக்க வீரசக்தி அம்மனே
கோபத் தையும் மோகத்தையும் காமத்தையும் – வென்று
குடும்ப மெல்லாம் வாழவழி காட்டுவாயே.

(நாவற்குளம் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வேப்பங்குளத்துக் காளியம்மா

வேப்பங் குளத்துக் காளி யம்மா!
வேண்டும் வரம் தாநீ யம்மா
காப்பு நீயே காளி யம்மா
கருணை மழை பெய்வா யம்மா

(வேப்பங் ....)

பத்திர காளி நீ யெனவே
பக்தர் போற்றும் காளி யம்மா
பவித் திரமாய் வேப்பங் குளத்தில்
பலரும் வணங்கும் காளி யம்மா

(வேப்பங் ....)

**வேறு**

மன்னார் வீதி வடக் கினிலே
வீதி யோரக் கோயி லிலே
என்னா ளும்வரும் அடிய வர்க்கு
இனிய அருளைத் தரு பவளே

**சாமி யம்மா** பூசை செய்ய
சந்தோ சமாய் ஏற்ப வளே
பாவி யாகிப் போய் விடாமல்
பலரைக் காத்து அருள் பவளே

**அன்ப கத்**தின் அரு கினிலே
அழகாய் அமர்ந்து கொண்ட வளே
என்ப கத்து உயி ரினிலே
என்றும் கலந்து இருப்ப வளே

ஆத ரவு அற்ற வர்க்கு
ஆத ரவு வழங்கி யே
அனைத்து அடி யவர் களுக்கும்
அருள் வழங்கிக் காப்ப வளே

தக்கன் வேள்வி அழித்த வளே
தர்மம் வாழக் காத்த வளே
எக்க ணத்தும் அடிய வர்க்கு
எல்லா வரமும் தருப வளே

(வேப்பங் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சூசைப்பிள்ளையார்குளம் முத்துமாரி அம்மன்

சூசைப் பிள்ளையார் குளத்தில் இருக்கும்
முத்து மாரி அம்மா – உன்னை
ஆசை யோடு கும்பிட வந்தோம்
அருள் தருவாய் அம்மா

(சூசைப் ......)

குடி மனைக்கு நடு வினிலே
கோயில் கொண்ட அம்மா – உன்னைக்
கும் பிடவே பேறு பெற்றோம்
குதூ கலத்தைத் தருவாய்.

(சூசைப் ......)

கிழக் கினிலே மயானம் அமைய
மேற்குக் குடி இருப்பாய் – நல்ல
வடக் கினிலே இறம்பைக் குளம்
தெற்குக் குடி இருப்பாய்

வவுனி யாவின் நகருக் குள்ளே
வந்த மர்ந்த தாயே – எம்மைக்
கவனி யாமல் விடு வாயோ
காத் தருள்வாய் நீயே

(சூசைப் ......)

ஏழை மக்கள் தொழி லாளர்
இருக்கும் இடந் தேடி – அவர்
வாழ்வை வளம் ஆக்க வந்தாய்
வணங்கு கின்றோம் தாயே

(சூசைப் ......)

குறைகள் எல்லாம் தீர்த் திடுவாய்
குடும்ப மெல்லாம் காப்பாய் – கல்வி
குறை வில்லாமல் தந் திடுவாய்
குபேர செல்வம் தருவாய்

(சூசைப் ......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## புன்னைச்சோலைக் காளியம்மா...

புன்னைச் சோலைக் காளி யம்மா
புதுமை மிகுந்த காளி யம்மா
கண்ணைப் போல எம்மைக் காக்கும்
கருணைத் தெய்வம் நீயே அம்மா

(புன்னைச் சோலை....)

எண்ணத் திலே உறை பவளே
எங்கு மாகி நிறை பவளே
கண்ணைத் திறந்து பாரு மம்மா
கவலை களைத் தீரு மம்மா

(புன்னைச் சோலை....)

அன்னை உன்னைச் சரண் அடைந்தோம்
ஆத ரிக்க வேண்டும் அம்மா
புன்னைச் சோலை அமர்ந்திருக்கும்
புனிதத் தாயே காளி யம்மா

(புன்னைச் சோலை....)

யாது மாகி நின்ற வளே
யாவை யுமே வென்ற வளே
ஏது குறை என்று கேட்டு
எங்கள் குறை தீரு மம்மா

(புன்னைச் சோலை....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# டென்மார்க் பிராண்டா அபிராமி அம்மன்

**பல்லவி**

அபிராமி கோவிலிலே கூடுவோம் – நாங்கள்
அழகாகக் கரகாட்டம் ஆடுவோம்
(அபிராமி....)

**அனுபல்லவி**

செவியாரத் தமிழ்ப்பாட்டுப் பாடுவோம்– இந்தத்
தேசமெல்லாம் செழிக்கவென்று ஆடுவோம்
(அபிராமி....)

**சரணம்**

டென்மார்க்கின் பிராண்டாவிலே இருப்பவள் – எங்கள்
தென்னாட்டின் கடவூரில் வாழ்பவள்
தெல்லிப்பழைத் துர்க்கைத்தாயும் அவளாகும்– இலங்கைத்
திருமலையும் வவுனியாவும் ஊராகும்
(அபிராமி....)

வேப்பிலையில் குடியிருக்கும் வீரத்தாய் – என்றும்
வேண்டுவோர்க்கு அருள்புரியும் வேலன்தாய்
காப்பவளே கரகஒலிக் கனகத்தாய் – உடுக்கின்
கானத்திலே மகிழும்கரு மாரித்தாய்
(அபிராமி....)

அபிராமி உபாசகியாம் அன்னையை – என்றும்
அருகிருத்தி அருள்பெருக்கும் அன்னையாம்
தவிராது வணங்குங்கள் அன்னையை – இந்தத்
தரணியிலே உயர்வடைவீர் உண்மையே
(அபிராமி....)

இசையமைப்பு : திரு.எல்.ஷிவனேஷ் (தமிழ்நாடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மாகாளியே திரிசூலியே

மா காளியே திரி சூலியே
மங்கலத்துக் குங்குமத்தில் மகிழ்ந் திருப்பவளே

அண்ட மெல்லாம் நிறைந்தவளே அன்னை தாயே
அகிலாண்ட ஈஸ்வரியும் அம்மா நீயே
கொண்ட துயர் வினைகளெல்லாம் தீர்ப்பாய் நீயே
கோடானு கோடியுயிர்க் குயிராம் தாயே

(மா காளியே....)

சண்டன் முண்டன் உயிர்குடித்த சாமுண் டியே
சங்கார உருத்திரனின் பாதியும் நீயே
சண்டை செய்து தக்கன்யாகம் அழித்தவள் நீயே
சர்வசக்தி பத்ரகாளித் தெய்வமும் நீயே

(மா காளியே....)

**வேறு**

பைர வரின் தாயான காளியம்மா, வீர
பத்திரரின் துணையான காளி யம்மா
இரத்த பீஜன் உயிர்குடித்த காளி யம்மா
இரங்கிடுவாய் எங்களுக்குக் காளி யம்மா

(மா காளியே....)

புன்னைச் சோலை தன்னில் வாழும் காளியம்மா
பூமகளே நாமகளே காளி யம்மா
என்னைப் பாட வைத்தவளே காளி யம்மா
எல்லோர்க்கும் அருள்செய்வாய் காளி யம்மா

(மா காளியே....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## காளியம்மா எங்கள் காளியம்மா

காளியம்மா எங்கள் காளியம்மா
காளியம்மா எங்கள் காளியம்மா

புன்னைச் சோலை தன்னில் வாழும் காளியம்மா – எங்கள்
புண்ணியமே நீதானே காளியம்மா
உன்னை நம்பி நாம் இருக்கோம் காளியம்மா – எங்கள்
ஊருலகு வாழவேண்டும் காளியம்மா

(புன்னைச் சோலை....)

அன்னை என நம்பி வந்தோம் காளியம்மா – எங்கள்
அல்லல்களைப் போக்கிடுவாய் காளியம்மா
கண்ணை இமை காப்பது போல் எங்களைநீ – என்றும்
காக்கவேண்டும் கருணைமிகு காளியம்மா

(புன்னைச் சோலை....)

கருணை மழை பொழிந் திடுவாய் காளியம்மா – எங்களைக்
காத்தருள வந்திடுவாய் காளியம்மா
இருளை வெல்லும் ஒளி நீயே காளியம்மா – துன்ப
இருள்நீக்கி அருள்தருவாய் காளியம்மா

(புன்னைச் சோலை....)

வேப் பிலையில் குடி யிருக்கும் காளியம்மா – நாங்கள்
வேண்டும்வரம் தந்திடுவாய் காளியம்மா
காப்பு என்று உன்னைச் சேர்ந்தோம் காளியம்மா – எங்கள்
கவலையெல்லாம் போக்கிடுவாய் காளியம்மா

(புன்னைச் சோலை....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## அபிராமியே பிராண்டா

அபிராமியே பிராண்டா அன்ன பூரணியே
ஆனந்த மாரிமுத்தே தாயே

(அபிராமியே....)

முக்கண்ணியே யார்க்கும் மூலமாய் நிற்பவளே
மூத்தவளே எங்கள் ஆத்தா

(அபிராமியே....)

மங்கல விநோதினியே மந்திர நிரந்தரியே
மனோன்மணியே எங்கள் தாயே

(அபிராமியே....)

சங்கரியே சண்டி சாமுண்டியே சர்வ
காரணியே பரி பூரணியே

(அபிராமியே....)

ஆதார சக்தியே ஆயி மகமாயியே
அபிராமி எனுமெங்கள் தாயே

(அபிராமியே....)

சத்தியப் பரம்பொருளே நித்தியப் பெரும்பொருளே
சங்கரன் தேவிஉமா தாயே

(அபிராமியே....)

நாரணன் ஆனவளே நான்முகன் ஆனவளே
நாகபூஷ ணித்தாயே வாராய்

(அபிராமியே....)

இசையமைப்பு : திரு.எல்.ஷிவனேஷ் (தமிழ்நாடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சிந்தாமணி விநாயகர்

### பல்லவி

விநா யகனைத் தொழு வோம் – சிந்தாமணி
விநா யகனைத் தொழு வோம்

### அனுபல்லவி

வெளி வட்ட வீதி தன்னில்
எழில் சொட்ட வீற் றிருக்கும்

(விநாயகனைத்....)

### சரணம்

வளம் மிக்க வவுனி யாவில்
உளம் மிக்க மகிழ் வுடனே
வீற் றிருக்கும் அவ னைப்
போற் றிப் புகழ்ந்து அன்பாய்

(விநாயகனைத்....)

கலை களை அவன் கொடுப்பான்
கவ லையை அவன் தடுப்பான்
நிலை யான வாழ்வு தந்து
நித் தியம் வாழ வைப்பான்

(விநாயகனைத்....)

அலை பாயும் மனத் தினையே
அடக்கி நல் அமைதி பொங்கும்
தலை யான இன்பந் தந்து
தர ணியில் ஓங்கச் செய்வான்

(விநாயகனைத்....)

துன்பங் களைக் களை வான்
துயரங் களைக் களை வான்
இன்பங் களைத் தந்து எங்கள்
இத யத்தில் குடி இருக்கும்

(விநாயகனைத்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## குடியிருப்பு சித்திவிநாயகர்

**பல்லவி**

குடியிருப்புக் குளக் கரையில் குடியிருக்கும் நாயகனே
கும்பிடுவோர் குறைகள் தீர்த்துக் கொலுவிருக்கும் விநாயகனே

(குடியிருப்புக்....)

**அனுபல்லவி**

சித்தி யெல்லாம் தந்தருளும் சித்திவிநா யகனாகி
வந் தாரை வாழ வைக்கும் வவுனியாவில் வாழ்வு கொண்டு

(குடியிருப்புக்....)

**சரணம்**

அடி பரவும் பக்தர் களை
அர வணைக்கும் கண பதியே
அழ குடனே குடி யிருப்பில்
அருள் பொழியும் தயா நிதியே

(குடியிருப்புக்....)

பால் தயிரும் பசு நெய்யும்
பழ வகையும் தேன் தொடையும்
நால் திசையும் நெல் விளையும்
நம் வன்னிக் கண பதியே

(குடியிருப்புக்....)

தா மரையும் அல்லி களும்
தவ மிருக்கும் குளத் தருகே
பூ மரங்கள் பூசை செய்ய
பொலி வுடனே இருப் பவனே

(குடியிருப்புக்....)

மயி லினமும் மா னினமும்
வண்டு களும் கலை பயில
குயி லினங்கள் குர லிசைக்கக்
கோயில் கொண்டாய் குளக் கரையில்

காலைக் கதிர் கால் பரவ
கண் விழித்து அருள் பவனே
மேலை வினை போக்கி எமை
மேல் நிலைக்கு ஏற் றிடுவாய்

(குடியிருப்பு....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஊற்றங்கரைப் பிள்ளையார்

ஊற்றங் கரையிலே கேணி யருகிலே
ஓங்கார ரூபனைக் காணலாம் - வயற்
காற்றின் குளிர்ச்சியில் கற்பனை பெருகிடக்
கரிமுகக் கடவுளைப் பாடலாம்.

(ஊற்றங்.....)

மருத மரச்சூழல் வாய்த்ததென் றமர்ந்திட்ட
மன்னனை வந்திங்கு காணலாம் - வயல்
உழுத விவசாயி ஒருகுறை இல்லாமல்
ஓங்கி உயர்வதைக் காணலாம்

(ஊற்றங்.....)

வற்றாத ஊற்றாக நீரூற்றுப் பெருகிடும்
வளத்தினை வந்திங்கு காணலாம் - அயல்
உற்றார் உறவினர் வந்திங்கு நீராடும்
உன்னதக் கேணியைக் காணலாம்

(ஊற்றங்.....)

தண்ணீர் ஊற்றென்று ஊருக்குப் பெயர்வரத்
தந்தநீர் ஊற்றினால் வாழ்ந்திடும் - வயல்
மண்ணை உழுது பயிரிடும் மக்களின்
மனத்தில் மகிழ்ச்சியைக் காணலாம்

(ஊற்றங்.....)

துன்பந் துயரங்கள் தோல்விகள் நீங்கிடத்
தொழுதிடலாம் இங்கு வாருங்கள் - கொஞ்சந்
தங்கி யிருந்து இயற்கையை இரசித்தாலே
தீராத நோயெல்லாம் தீர்ந்திடும்.

(ஊற்றங்.....)

வன்னியின் முல்லையில் தண்ணீர் ஊற்றிலே
வற்றாத அருளோடு இருந்திடும் - திங்கள்
கண்ணியாய்ச் சூடிய கண்ணுதல் குமாரனாம்
கணபதியை வந்து காணுங்கள்

(ஊற்றங்.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## காட்டு விநாயகர்

**பல்லவி**

காட்டு விநாயகரின் கால்கள் பணிந்தால் நல்ல
பாட்டுத் திறன் வருமே - முள்ளியவளை (காட்டு .......)

**அனுபல்லவி**

கோட்டுத் திருக் கொம்பால் குலப்போர் எழுதியருள்
கூட்டும் விநாயகரின் குளிர்ப்பெருங் கடல்படிந்து (காட்டு .......)

**சரணம்**

எனவன் கந்தனைக் காட்டா தருள் புரிந்து
என்றும் எவர்க்கும் துன்பம் காட்டா தருள்புரியும்
வனவில் வேடர் மகள் வள்ளியை முருகனுக்கு
மணஞ்செய்து வைக்க யானை வடிவில் வந்தளங்கள் (காட்டு .......)

காண்டா மணிவாங்கிக் கொடுக்க அதன் ஒலியில்
காட்டியே எனவன்கந்தன் எனுமொலி எழுப்பி நிற்கும்
தூண்டா மணிவிளக்காய் துயர் போக்கும் ஒளிவிளக்காய்
தூங்கா திருந்துமக்கள் துயர் துடைத் தருளுகின்ற (காட்டு .......)

கூப்பிட்டால் வந்து நிற்பார் கும்பிட்டால் அருள்சுரப்பார்
காப்பிட்டுப் பாடிவைத்தால் காவியம் காத்து நிற்பார்
சாப்பிட்டு நம்பி உயிர் காத்து அருள்புரிந்து
சர்வலோ கங்களையும் தனக்குள் இருக்கக் காட்டும் (காட்டு .......)

வற்றாப் பளையம்மன் கோவிலில் விளக் கேற்ற
வந்திங்கு பூசைசெய்து எடுக்கும் கடல் நீரை
பற்றி எரியச் செய்து பாரெல்லாம் வியக்கவைத்து
பக்தர்களுக் கருளும் பருத்த சரீரங் கொண்ட (காட்டு .......)

யானைப் பெருவடிவோ ஞானத் திரு உருவோ
காணக் கிடைக்காத கணபதி என்றழைக்கும்
மோனப் பரம்பொருளின் மூத்த குமார னென்னும்
மோதகப் பிரியனான போதக வடிவங்கொண்ட (காட்டு .......)

கற்றவர் கருமம் முற்ற கைகூப்பி முதல்வணங்கும்
கணபதி என்னும் எங்கள் கற்பகப் பெருமலையாய்
குற்றங் குறைகள் தீர்த்து சுற்றமும் செழிக்கவைத்து
குடியிருந்தே அருளும் குமாரக் கடவுள் அண்ணன் (காட்டு .......)

போதகம் - யானைக் குட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## விநாயகனைத் தொழுதால் வெற்றிவரும்

**பல்லவி**

விநாயகனைத் தொழுதால் வெற்றிவரும் – வித்யா
விநாயகனைத் தொழுதால் வெற்றிவரும்

**அனுபல்லவி**

வவுனியா தமிழ்மத்ய மகாவித்தி யாலயத்தில்
மகிழ்ந்திருந்தே யருளும் மகாகண பதியாகும்

(விநாயகனைத்....)

**சரணம்**

பொன் னரசி வலது புறம்
பூ வரசி இடதுபுறம்
உன்னரசில் குறை வருமோ **உலகநாதா** – எங்கள்
கண்ணருகில் எழுந்தருளும் கரி முகவா

(விநாயகனைத்....)

வித் தைக்கு நீ கடவுள்
விண் ணுக்கும் நீ கடவுள்
பக்தி வலைக்குள் படும் பராபரனே – எங்கள்
சித்தத் திலேயுறையும் சிற் பரனே

(விநாயகனைத்....)

ஞானம் அளிப் பவன் நீ
ஞாலம் அளிப் பவன் நீ
கானப் பிரியனென்னும் கண பதியே – உன்னைக்
காணப் பிரியம் வைத்தோம் குண நிதியே

(விநாயகனைத்....)

நாவல் தல விருட் சம்
நமக் குண்டு அருட் கடாட்சம்
ஆனை முகமுடைய அழ கரசே – உந்தன்
ஆணை எமக்குரிய அருள் நிதியே

(விநாயகனைத்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## விநாயகனே! ஸ்ரீ விநாயகனே!

### பல்லவி

விநாயகனே! ஸ்ரீவிநாயகனே! – எங்கள்
விக்கினங்கள் தீர்த்தருளும் விநாயகனே – ஸ்ரீ விநாயகனே!

### அனுபல்லவி

வவுனியா குருமன்காடாம் வளம்மிகு பதியிலுறை
வள்ளலே! நாயகனே! வணங்குகின்றோம் உனையே
(விநாயகனே....)

### சரணம்

எல்லையில் லாதபரம் பொருளெனவே வீற்றிருக்கும்
எங்கள்சிவ பெருமானின் ஏற்றமிகு பாலகனே!
தொல்லைவினை யகன்றிடவே துணைசெய்யும் நாயகனே!
தொண்டர்களைக் காத்தருளும் தூயஸ்ரீ விநாயகனே
(விநாயகனே....)

அப்பமும் முப்பழமும் அமுதெனக் கொள்பவனே!
ஆலமுண்ட நீலகண்டன் அன்புப் பெருமகனே!
இப்பொழுதும் எப்பொழுதும் எங்களின் துணைநீயே!
ஈழவள நாட்டுவன்னி இருக்கும் ஸ்ரீவிநா யகனே!
(விநாயகனே....)

மோதகம் எள்ளுருண்டை முதலாந்தின் பண்டங்களை
ஆதர வாய்ப்படைத்தால் அவர்களைக் காப்பவனே!
பாதகஞ்செய் யசுரக்கஜ முகனுன்னைக் கொல்லவென்று
மூசிகம் ஆகிவர முதுகினில் அமர்ந்தவனே!
(விநாயகனே....)

குற்றங்குறை போக்கிடுவாய் குஞ்சரவா கெஞ்சுகின்றோம்
குருமன்கா டெனும்பதியில் கோலோச்சும் யானைமுகா!
கற்றவரும் மற்றவரும் கருதும்ஸ்ரீ விநாயகனே!
கருதுபவை நிறைவேற்றிக் காலமெல்லாம் காத்தருள்வாய்.
(விநாயகனே....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஆதி விநாயகரே

**பல்லவி**

ஆதி விநா யகரே – என்றும்
அருள் தரும் நா யகரே (ஆதி விநா யகரே....)

**அனுபல்லவி**

சோதிச் சுட ரொளியே – விளங்கும்
சுந்தரப் பெரு வடிவே
(ஆதி விநா யகரே....)

**சரணம்**

வீதியின் ஓரத்திலே அமர்ந் திருந்து
வினைகளைத் தீர்த்தருளும் கண பதியே
ஆதிப் பரம்பொருளே அருள் வடிவே
ஆனை முகமமைந்த அருள் நிதியே
(ஆதி விநா யகரே....)

மருத மரநிழலில் அமர்ந் திருந்தாய்
மருந்தென அடியவர்க்கு அருள் புரிந்தாய்
கருத அரியபெருங் கரி முகனே
காத்து அருள்புரிவாய் அரன் மகனே
(ஆதி விநா யகரே....)

அழகிய கோயில்கட்டி அமர வைத்தார்
அடியவர் மனம்மகிழ அருள் புரிந்தாய்
இளகிய மனம் படைத்த ஏரம்பனே
எங்களைக் காத்தருளும் இறை மைந்தனே
(ஆதி விநா யகரே....)

வயிரவ புளியங் குளம் வானருகே
புகையிரத நிலைய வீதி யிலே
உயிரெனவே அடியார் வணங் கிடவே
உளமகிழ்ந்தே அருளைப் பொழி பவரே
(ஆதி விநா யகரே....)

முதல்வழி பாட்டினுக்கு உரிய வரே
மூத்தவராய் இருக்கும் சிவ மைந்தனே
நிதியென அடியவர்க்கு வாய்த்த வரே
நித்தியப் பரம்பொருளாய்ப் பூத்த வரே
(ஆதி விநா யகரே....)

சித்திரைப் புத்தாண்டில் தேரில் வருவாய்
செஞ்சுடர் அநேகமென பிர கசிப்பாய்
இத்தரை மாந்தரெல்லாம் நலம் பெறவே
எழுந்தருளும் எங்கள் ஏ ரம்பனே
(ஆதி விநா யகரே....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வைகாழி கூழாங்குளம் பிள்ளையார்

பிள்ளை யாருக்கு பெரிய வயிறு
பிள்ளை யாருக்கு பெரிய மனது
பிள்ளை யாரைக் கும்பிட்டால் பிணிதீரும்?
பிள்ளை யாரைக் கும்பிட்டால் பிணிதீரும்.

(பிள்ளை யாருக்கு ....)

கையில் இருக்கும் மோ தகம்
கனிந்த முப் பழங்கள் பால்
எள்ளு ருண்டை அப்ப மும்
இனிதாய் என்றும் உண்ணுவார்

(பிள்ளை யாருக்கு ....)

யானை முகம் கொண்ட வர்
ஞான மாகி நின்ற வர்
வான மளந்த வல்ல வர்
வாழ்வு தரும் நல்ல வர்

(பிள்ளை யாருக்கு ....)

பார தத்தைக் கொம்பி னால்
பதித்து எழுதி வைத்த வர்
பா ரதத்தில் ஏற்றி னோர்
பாரில் நிலைக்கச் செய்ப வர்

(பிள்ளை யாருக்கு ....)

வைகாழி கூழாங் குளத்தி லே
வந்த மர்ந்து கொண்ட வர்
கையால் மலர் தூவி யே
கால் பணிந்து வணங்கு வோம்.

(பிள்ளை யாருக்கு ....)

துன்பங் களைப் போக்கு வார்.
இன்பங் களைத் தேக்கு வார்.
அன்ப ருக்கு அருளு வார்
அனைத்தும் தரும் வள்ள லாம்.

(பிள்ளை யாருக்கு ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# புளியடி விநாயகர்

### பல்லவி

புளி யடி விநா யகரே – வவுனியாப்
புண் ணியப் பரம் பொருளே

(புளியடி.....)

### அனுபல்லவி

வழி படும் அடி யவர்
வளம் பெற அருள் தரும்
சித்தி விநா யகரே!

(புளியடி.....)

### சரணம்

எங்கள் வவுனி யா நகரில்
எளி மையாய் அமர்ந் திருந்து
எல் லோரையும் காத்தருளும்
எழில் மிகு கண பதியே

(புளியடி.....)

பிள்ளை யார் புராணம் பாடும்
பெரி யவர் புகழ்ந்து ரைக்க
எல்லை யிலா மகிழ்ச்சி கொண்டு
எழுந் தருளும் **நாதன்** நீயே

(புளியடி.....)

யோக நிலை கொண் டிருப்பாய்
போக நிலை தந் திடுவாய்
மேக மெனக் கருணை மழை
மிகப் பொழிந்து அருள் சுரப்பாய்

(புளியடி.....)

தர்ம நிலை வாழ வைப்பாய்
தயா பரனே தனிச் சுடரே
கர்ம வினை போக் கிடுவாய்
கண பதியே போற்று கின்றோம்

(புளியடி.....)

அடி யவர் தொழுது நின்றால்
அள்ளி அள்ளிக் கொடுப் பவரே
கொடி யவர் பகைத்து வந்தால்
குடும்பத் தினைக் காப் பவரே

(புளியடி.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## உக்குளாங்குளம் பிள்ளையார்

உக்குளாங் குளத்தினிலே ஊர்மனைக்கு நடுவினிலே
உத்தமனாய்க் கோவில்கொண்ட பிள்ளையார் – இந்த
உலகுக்கெல்லாம் படியளக்கும் பிள்ளையார்

(உக்குளாங் ....)

முக்கனிதேன் அப்பமொடு மோதகம் எட்பொரியும்
சர்க்கரை பருப்புமுண்ணும் பிள்ளையார் – எங்கள்
சங்கடங்கள் தீர்க்கும்நல்ல பிள்ளையார்

(உக்குளாங் ....)

பச்சரிசி பிட்டு வெள்ளரிப்பழம் பயறமுது
மிக்கவிருப் புடனேயுண்ணும் பிள்ளையார் – எங்கள்
வேதனைகள் தீர்த்தருளும் பிள்ளையார்

(உக்குளாங் ....)

கரும்பிளநீர் அவல்துவரை கடலைகொழுக் கட்டையெல்லாம்
கருத்துடனே விரும்பியுண்ணும் பிள்ளையார் – எங்கள்
காவலென நாம்வணங்கும் பிள்ளையார்

(உக்குளாங் ....)

தம்பிக்கு மணம்முடிக்கத் தனியானை வடிவில்வந்து
தும்பிக்கை நீட்டியருள் பிள்ளையார் – எங்கள்
துயரெல்லாம் போக்கியருள் பிள்ளையார்

(உக்குளாங் ....)

கற்றவரும் மற்றவரும் கருமங்களைச் செய்யுமுன்பு
சுற்றிவந்து அடிபரவும் பிள்ளையார் – நினைத்த
கருமங்களை முடித்துவைக்கும் பிள்ளையார்

(உக்குளாங் ....)

பூசைகளால் மகிழ்ந்திடுவார் பூமியெல்லாம் காத்திடுவார்
ஆசைகளை நிறைவேற்றும் பிள்ளையார் – என்றும்
அடியவரைக் காத்தருளும் பிள்ளையார்

(உக்குளாங் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வேப்பங்குளத்துப் பிள்ளையார்

வேப்பங் குளத்துப் பிள்ளையார் வீதி யோரப் பிள்ளையார்
காப்ப ரணாய் அடியவர்க்குக் கருணை செய்யும் பிள்ளையார்

வவுனி யாவின் மேற்கிலே மன்னார் வீதி வடக்கிலே
அவனி போற்ற அமர்ந்திருக்கும் அருமை யான பிள்ளையார்
(வேப்பங் குளத்துப் ....)

கஜ முகனை அழித்தவர் கடவுள் தேரை முறித்தவர்
வயல் குளத்தின் காவலாய் வன்னி யெங்கும் இருப்பவர்

மோத கத்தை விரும்புவார் முப் பழமும் விரும்புவார்
பாத கத்தைத் தடுப்பவர் பலரும் போற்றும் பிள்ளையார்
(வேப்பங் குளத்துப் ....)

அவ்வைப் பாட்டி கேட்கவே அரிய தமிழ் கொடுத்தவர்
அம்மை அப்பர் உலகமென்ற அரிய நெறி வகுத்தவர்

கொவ்வை இதழ் வள்ளியைக் குமரன் மணக்கச் செய்தவர்
கொடுமைகளை அழிப்பவர் குடும்பமெல்லாம் காப்பவர்
(வேப்பங் குளத்துப் ....)

பார தத்தை மலையிலே பாதிக் கொம்பால் எழுதினார்
ஊர வர்க்குத் துணையென ஒழுங்கை தோறும் அமருவார்

பானை வயிறு கொண்டவர் பருத்த மேனி கொண்டவர்
யானை யாக வந்தவர் ஞான வடிவாய் நின்றவர்
(வேப்பங் குளத்துப் ....)

காக வடிவில் வந்தவர் கமண்ட லத்தைக் கவிழ்த்தவர்
தாகம் தீர்க்கும் காவிரியாய் தண்ணீர் ஓடச் செய்தவர்

வேப்பங் குளத்துப் பிள்ளையாரை விருப்பத் தோடு வணங்குவோம்
காப்பு நீயே என்றுசொல்லி கையால் குட்டி வணங்குவோம்
(வேப்பங் குளத்துப் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஓமந்தை வீரகத்திப் பிள்ளையார்

**பல்லவி**

ஓமந்தைப் பதிவாழும் பிள்ளையார் – எங்கள்
ஓங்கார வடிவான பிள்ளையார்

(ஓமந்தை .....)

**அனுபல்லவி**

நாமெந்த வேளையிலே கேட்டாலும் – நமக்கு
நல்லருளைப் பொழிகின்ற பிள்ளையார்

(ஓமந்தை .....)

**சரணம்**

கிராமீய மணங்கமழும் பிள்ளையார் – ஔவையார்
கேட்டவுடன் தமிழ்கொடுத்த பிள்ளையார்
புராதனப் பெருமைவாய்ந்த பிள்ளையார் – ஊரார்
புண்ணியமாய் வந்துவாய்த்த பிள்ளையார்

(ஓமந்தை .....)

பழம்பெருமை பெற்றளங்கள் பிள்ளையார் – அருகில்
பாடசாலை சந்திகொண்ட பிள்ளையார்
வழிப்போக்கர் குறைதீர்க்கும் பிள்ளையார் – என்றும்
வற்றாது அருள்சுரக்கும் பிள்ளையார்

(ஓமந்தை .....)

**வேறு**

வவுனியாவின் வடக்கினிலே யாழ்வீதி அருகினிலே
அவனிபோற்ற எழுந்தருளும் பிள்ளையார் – எங்கள்
அவலம்போக்கும் வீரகத்திப் பிள்ளையார்

(ஓமந்தை .....)

ஓமைஅந்தாதி என்றபெயரில் சிலம்புநாத பிள்ளையினால்
அந்தாதி பாடப்பெற்ற பிள்ளையார் – இன்றும்
அடியார்கள் பாடுகின்ற பிள்ளையார்

(ஓமந்தை .....)

வழிப்போக்கர் வர்த்தகர்கள் வழிபடவே அருள்புரிந்து
களிப்போடு வாழவைக்கும் பிள்ளையார் – உழவர்
காலமெல்லாம் போற்றுகின்ற பிள்ளையார்

(ஓமந்தை .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நொச்சிமோட்டைப் பிள்ளையார்

யாழ் வீதி கிழக் கினிலே கருங்காலி மரத் தடியை
வாழ் விடமாய்க் கோயில் கொண்ட பிள்ளையார் – எமக்கு
வர மருளும் கருங்காலி யடிப் பிள்ளையார்

(யாழ் வீதி .....)

ஊர் மனை பள்ளிக் கூடம் உழைக் கின்ற வேளாளர்கள்
சேர்ந் தொன்றாய் இருக்கும் நொச்சி மோட்டையிலே – வினை
தீர்க்க வந்து அருள் புரியும் பிள்ளையார்

(யாழ் வீதி .....)

முப் புரம் எரிக்கச் சென்ற முக்கண்ண னார் தேரின்
அச் சதனை முறித்த எங்கள் பிள்ளையார் – வவுனியா
நொச்சி மோட்டைப் பதியில் வந்து அமர்ந்துள்ளார்

(யாழ் வீதி .....)

நா ரதர் கொண்டு வந்த நற் கனியைப் பெற்றிடவே
தாய் தந்தை உலகம் என்ற பிள்ளையார் – சுற்றி
தானே கனியைப் பெற்ற எங்கள் பிள்ளையார்

(யாழ் வீதி .....)

கஜ முகன் எனும் அசுரன் கணக்கினையே முடித்து வைக்க
கஜ முகத் தோடு வந்த பிள்ளையார் – அடியார்
செயல் களுக்கு முன்னே நிற்கும் பிள்ளையார்

(யாழ் வீதி .....)

மோ தகம் அப்பம் உண்பார் மூஷிகம் தன்னை ஊர்வார்
தா மதம் ஏனோ இங்கு வாருங்கள் – உங்கள்
பா தகம் தீர்த்து வைப்பார் கூறுங்கள்

(யாழ் வீதி .....)

தம் பிக்கு மணம் முடிக்கத் தனி ஆளாய் கானகத்தில்
தும் பிக்கை யானை யான பிள்ளையார் – வாழ்வில்
நம் பிக்கை தரும் ஞானப் பிள்ளையார்

(யாழ் வீதி .....)

அவ் வைக்குத் தமிழ் தந்தார் அருணகிரியைப் பாட வைத்தார்
அகத் தியர்க்கும் அருள் செய்த பிள்ளையார் – உலகில்
அச்ச மின்றி வாழ வைக்கும் பிள்ளையார்

(யாழ் வீதி .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## முறிகண்டிப் பிள்ளையார்

யாழ்ப்பாண வீதியிலே முறிகண்டி ஊரினிலே
காப்பான பாலைமர நிழலினிலே – பிள்ளையார்
வாய்ப்பாக அமர்ந்து கொண்டார் பாருங்கள் – செல்லும்
வழிப்போக்கர் துயர் தீர்ப்பார் வாருங்கள்

(யாழ்ப்பாண .....)

மூன்று பக்கம் கடைகள் சூழ
முறி கண்டி என்னும் ஊரில்
தோன்றி அருள் சுரந்தருளும் பிள்ளையார் – எங்கள்
தொல்லை வினை தீர்த்தருளும் பிள்ளையார்

(யாழ்ப்பாண .....)

கை கால்கள் முகம் கழுவி
கர்ப் பூரம் தனைக் கொளுத்தி
கை கூப்பி வழிபடுவார் அடியவர் – அவர்க்கு
கை கொடுத்து அருள்புரிவார் பிள்ளையார்

(யாழ்ப்பாண .....)

திரு நீறு பூசிக் கொண்டு
சிந் தனையில் பக்தி கொண்டு
ஒரு முறையா வதுகோவில் சுற்றிவந்தால் – பயணம்
ஒரு குறையும் இல்லாமல் வெற்றிபெறும்

(யாழ்ப்பாண .....)

சந் தனக் கட்டை யினைத்
தண்ணீர் தொட் டரைத் தெடுத்து
நெற்றி யிலே பொட்டுவைக்கும் பக்தருக்கு – துன்பம்
நே ராது காத்தருளும் பிள்ளையார்

(யாழ்ப்பாண .....)

பொங்கல் வைத்துப் படைய லிட்டு
பூர்த்தி செய்வார் நேர்த்தி யினை
அங்க வர்க்கு அருள்புரிவார் பிள்ளையார் – எங்கள்
அர னாரின் பிள்ளையான பிள்ளையார்

(யாழ்ப்பாண .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## நெளுக்குளத்துப் பிள்ளையார்

நெளுக் குளத்துப் பிள்ளையார்
நிறைந்த வயிற்றுப் பிள்ளையார்
நீண்ட நெடிய பெருமை பெற்று
நிலைத் திருக்கும் பிள்ளையார்

(நெளுக் குளத்துப்.....)

பாரம் பரியப் பெருமைமிக்க
பழமை யான பிள்ளையார்
பக்தர் களைக் காத் தருளும்
பரிவு மிக்க பிள்ளையார்

(நெளுக் குளத்துப்.....)

மன்னார் வீதி வடக்கிலே
மகிழ்ந் திருக்கும் பிள்ளையார்
இன்னார் இனியார் என்னா மல்
எவர்க்கும் அருளும் பிள்ளையார்

(நெளுக் குளத்துப்.....)

தம்பி முருகன் தெற்கிலே
தழைத் தோங்கிச் செழித்திருக்க
நம்பி வரும் அடிய வர்க்கு
நன்மை செய்யும் பிள்ளையார்

(நெளுக் குளத்துப்.....)

பனை மரங்கள் குடியிருப்பு
வயல்கள் சூழ எழுந்தருளி
மனைகள் வாழ அருள் சுரக்கும்
மகா தந்தப் பிள்ளையார்

(நெளுக் குளத்துப்.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சாம்பல்த் தோட்டப் பிள்ளையார்

மன் னார் வீதி யிலே
சாம்பல்த் தோட்டக் குளத் தருகே
மங்கலமாய் வீற்றி ருக்கும் பிள்ளையார் - அடியார்
மனக் குறைகள் தீர்த்தருளும் பிள்ளையார்

(மன் னார்.....)

சாலை யோரப் பாலையின் கீழ்
சந்தோ சமாய் அமர்ந் திருந்தார்
சாம்பல்த் தோட்டப் பிள்ளையாராய்ப் புகழ்பெற்றார் - அடியார்
சகலருக்கும் அருள் புரிந்து காத்திட்டார்

(மன் னார்.....)

பாலை மர நிழ லிலே
பல காலம் அமர்ந் திருந்து
காலங்கால மாய்ச் செல்வோர் வழிபட - அவரைக்
காத்து அருள் சுரந்திட்ட பிள்ளையார்

(மன் னார்.....)

குளத் தென்றல் குளிர்ந்து வர
கும்பி டுவோர் மகிழ்ந்து வர
குறைக ளெல்லாம் தீர்த்தருளும் பிள்ளையார் - சைவக்
குலத் தோர்க்கு முதல்வராகும் பிள்ளையார்

(மன் னார்.....)

ஆல யத்தைக் கட்டி வைத்தார்
அங்கி ருத்தி அழகு பார்த்தார்
அடியவர்கள் ஒன்றுசேர்ந்து பூசைசெய்ய - அவர்க்கு
அருள்மழையைப் பொழியும் எங்கள் பிள்ளையார்

(மன் னார்.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பம்பைமடுச் சந்திப் பிள்ளையார்

பம்பை மடுச் சந்தி யிலே
பார் போற்ற எழுந் தருளி
பக்தர்களைக் காத்தருளும் கண பதியே – உன்னைப்
பணிந்தோம் அருள்தருவாய் குண நிதியே

(பம்பைமடு ......)

அம்மை அப்பன் உலகம் என
அறி வூட்டி வழி காட்டி
எம்மையெல்லாம் வாழவைக்கும் ஏ ரம்பா – எங்கள்
எண்ணமெல்லாம் நீயல்லால் வே றுண்டா

(பம்பைமடு ......)

பம்பை மடு வடக்கி னிலே
செக்கடிப் புலவு தெற் கினிலே
பல்கலைக் கழகமோ மேற் கினிலே – அமைய
பார்த்திருப்பாய் வவுனியாவைப் பரு வயிறா

(பம்பைமடு ......)

சந்தி ஒரு காலத் திலே
சரித் திரமாய்த் திகழ்ந் ததுவே
வந்தசண்டை அழிவுகளால் சீ ரழிய – இன்று
வளர்ச்சிபெற அருள்தருவாய் வல்ல வனே

(பம்பைமடு ......)

முன்னை நிலை அடைய வேண்டும்
மூத்த வனே அருள் தருவாய்
உன்னை நினைந் துருகுகிறோம் உளங்குளிர்வாய் – இந்த
உலகாளும் கணபதியே எமைக் காப்பாய்

(பம்பைமடு ......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தவசிகுளம் பால விநாயகர்

வவுனியாவின் தென்மேற்கே வளமான இடத்தினிலே
அவனியெல்லாம் புகழுகின்ற ஐங்கரனார் கோவில்கொண்டார்.
பவவினைகள் தீர்த்தருளும் பாலவிநா யகரெனவே
தவறாது வழிபடவே தண்ணருளைப் பொழிகின்றார்
(வவுனியாவின் .....)

குடிமனைகள் சூழவுள்ள கிராமத்திலே குடியிருந்து
கும்பிடுவோர் குறைகள்தீர்க்கும் தும்பிக்கை நாயகனாய்
அடிபரவும் அடியவர்க்கு அழியாத வாழ்வுதந்து
முடிவில்லா முத்தியையும் முழுதருளும் முழுமுதலாய்
(வவுனியாவின் .....)

பாலவிநா யகனாகிப் பக்தர்தவப் பயனாகி
காலமெல்லாம் வழிபடவே கருணைசெய்யும் கடலாகி
ஆலமரத் தடியமரும் அழகர்திருக் கோவிலிலே
அழகாக எழுந்தருளி அடியவர்க்கு அருள்சுரப்பார்
(வவுனியாவின் .....)

குளங்களைக் காப்பவரே! குடும்பங்களைக் காப்பவரே!
வளங்களை அருள்பவரே! வரங்களைத் தருபவரே!
களங்கமில் லாவடிவே! கரிமுகத் தினியவரே!
உளங்கொளப் பாடுமன்பர் உள்ளத்திலே உறைபவரே!

குருட்டு அடியவர்க்குக் கூவென்று குரல்கொடுத்தாய்
இருட்டிலும் வழிகாட்டும் ஏரம்ப கணபதியே!
உருட்டுப் பிரட்டுநிறை உலகத்தில் நாம்வாழும்
பொருட்டாய் அருள்சுரக்கும் புண்ணியரே போற்றுகின்றோம்
(வவுனியாவின் .....)

ஆதரவு ஏதுமில்லா அடியவர்க்கு அருள்புரியும்
ஆனைமுகப் பெருமானே அம்மையுமை பாலகரே!
நீதுணையில் லாதுவிடில் நீதிநெறி உலகிலில்லை
பாலவிநா யகப்பொருளே பக்தர்களைக் காத்தருளே!.
(வவுனியாவின் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கூமாங்குளம் சித்தி விநாயகர்

**பல்லவி**

கூமாங் குளத்தில் வாழும் குஞ் சரனே ஐங்கரனே
கூவிநாம் அழைக் கின்றோம் குறைக ளெல்லாம் தீர்த்திடுவாய்
(கூமாங் குளத்தில் ......)

**அனுபல்லவி**

மாமாங்கம் பல கடந்தும் வாழுகின்ற வடிவழகே
மக்கள்துயர் பாராயோ மனக் குறையைத் தீராயோ
(கூமாங் குளத்தில் ......)

**சரணம்**

ஆலமரம் தலவிருட்சம் அதனருகே பள்ளிக் கூடம்
ஆனைமுகன் கோவிலுக்கு அருகினிலே மை தானம்
சூலபாணி திருமகனாம் சுந்தரனே ஐங் கரனே
சித்திபுத்தி காதலனே சிந்தூர முகத் தழகே
(கூமாங் குளத்தில் ......)

குடிமனைகள் சூழ்ந் திருக்கக் கொலுவிருக்கும் விநாயகனே
குலந்தழைக்க அருள் புரியும் குஞ்சரத்து நாயகனே
அடிபணியும் தொண்ட ருக்கு அருள்புரியும் ஆனைமுகா
அன்புபொங்க நாம ழைத்தோம் அருகிருந்து அருளுமையா
(கூமாங் குளத்தில் ......)

கந்தனுக்கு மூத்த வனே காவியத்தின் முன்னவனே
கணபதியாய்ப் பதவி பெற்ற கார்முகிலே கரிமுகனே
நந்தமிழர் துயர் தீர்த்து நலமருள்வாய் நாயகனே
நாம்வணங்கும் எங்கள் சித்தி விநாயகனே அருள்தருவாய்
(கூமாங் குளத்தில் ......)

சக்தியுமை பால கனே சங்கரனார் திருமகனே
சர்வசித்தி விநாயகனே சங்கடங்கள் தீர்த் தருள்வாய்
பக்திமிகும் அடியவர்கள் பாதந்தொழ அருள் பவனே
பார்செழிக்க வளந் தருவாய் பாராளும் கணபதியே
(கூமாங் குளத்தில் ......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வெளிக்குளம் சித்தி விநாயகர்

வவுனியா வெளிக்குளத்தில் வயல்நோக்கி வீற்றிருக்கும்
சிவனார் திருமகனே! சித்திவிநா யகப்பொருளே!
பவவினை தீர்த்தருளி பக்தருக்கு வாழ்வளிக்கும்
தவமாய் வந்தமர்ந்த தனிக்கொம்பு விநாயகரே!

(வவுனியா .....)

பாரதத்தை மலைமேலே பாதிக்கொம்பால் பொறித்தருளும்
வாரண முகத்துவள்ளல் வடிவழகே விநாயகரே!
காரதிர மழைபொழியும் களனியெல்லாம் நெல்விளையும்
ஊரதிர பொங்கல்வைக்க உவந்தருளும் விநாயகரே!

(வவுனியா .....)

தேரோடும் கோயிலொன்று சிறப்பாகக் கட்டிவைத்தோம்
ஊரோடு வயல்கிராமம் உயரவைக்கும் பெருமானே!
யாரோடு குறைசொல்வோம் யார்பாதம் பணிந்திடுவோம்
வேரோடு வினைகளைந்து விண்ணுலகில் வாழவைப்பாய்

(வவுனியா .....)

நோய்நொடி போக்கவேண்டும் நொந்தவரைக் காக்கவேண்டும்
காய்கனி வகைகளெல்லாம் கணக்கின்றிப் பெருகவேண்டும்
தாய்மடி போலஎம்மைத் தவறாது காக்கவேண்டும்
சேய்என வணங்குகின்றோம் சித்திவிநா யகப்பொருளே

(வவுனியா .....)

தம்பிக்கு மணம்முடிக்கத் தனியானை வடிவெடுத்தாய்
நம்பிக்கை கொண்டவர்க்குத் தனியான துணைவருவாய்
கம்பிக்குள் விலங்காகக் காடெல்லாம் எரிந்துவிட்டால்
தும்பிக்கை அல்லால்வேறு துணையுண்டோ பெருமானே

(வவுனியா .....)

சிவசக்தி பாலகனே! திருமுருகன் சகோதரனே!
பவவினை போக்கிஎம்மைப் பாலிக்கும் நாயகனே!
தவநிலை நாமறியோம் தலைதாழ்த்தி வணங்குகின்றோம்
அவலங்கள் போக்கிஎம்மை ஆண்டருள வேண்டுமையா.

(வவுனியா .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## புதுக்குளம் சித்திவிநாயகர்

புதுக்குளத்தில் பூத்திருக்கும் பூரணனே! வாரணனே!
பூமியெல்லாம் காத்தருளும் புனித சித்தி விநாயகரே
செதுக்கியகற் சிலையினிலே சேர்ந்திருந்து அருள்பொழியும்
சித்திபுத்தி கணபதியே சித்திவிநா யகப்பொருளே

(புதுக்குளத்தில் ....)

குளக்கரையில் குளிர்காற்று குதூகலத்தைத் தந்தருள
கூடியுள்ள பக்தரெல்லாம் கும்பிட்டு மனமுருக
வளக்குறைவில் லாதிருக்கும் வயல்நிறைந்த பூமியிலே
வந்தமர்ந்த கணபதியே வாழும்சித்தி விநாயகரே

(புதுக்குளத்தில் ....)

பாடுபட்ட ஏழையிந்தப் பாராள வேண்டுமையா
பாலரெல்லாம் கல்விகற்று பார்போற்ற வேண்டுமையா
காடுவெட்டி நெல்விதைத்து கஷ்டப்பட்டே வாழ்ந்துவிட்டோம்
காத்துஎம்மை வாழவைப்பாய் கணபதியே வேண்டுகின்றோம்

(புதுக்குளத்தில் ....)

நோயில்லா வாழ்வுதந்து நொந்தவரை வாழவைப்பாய்
நூறாண்டு மேலாக வாழ்ந்துவரும் கணபதியே
தாயில்லாப் பிள்ளைகளாய்த் தவிக்கவிட்டு விடுவாயோ
தனிப்பரம் பொருள்தந்த தங்கநிறக் கணபதியே

(புதுக்குளத்தில் ....)

குளத்தோடு குடிமனைகள் கொலுவிருக்கும் புதுக்குளத்தில்
கோலோச்சும் விநாயகரே குமரேசன் சகோதரரே
பழத்தோடு பண்டமெல்லாம் படைத்துவைத்து வழிபட்டோம்
பார்த்தருள வேண்டுமையா பார்போற்றும் கணபதியே

(புதுக்குளத்தில் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சமளங்குளம் கல்லுமலைப் பிள்ளையார்

கல்லு மலைப் பிள்ளையார்
கருணை மிக்க பிள்ளையார்
சமளங் குளத்தில் வீற்றிருக்கும்
சரித்தி ரமாம் பிள்ளையார்

(கல்லு......)

நெல்லு வயல் தோட்டங்கள்
நிறைந்தி ருக்கும் வவுனியாவில்
கல்லு மலையில் வீற்றிருந்து
கருணை செய்யும் பிள்ளையார்

(கல்லு......)

தெரு வோரக் கோவிலாக
தென் கிழக்கு வவுனியாவின்
அரு கிருக்கும் பிள்ளையார்
அருள் சுரக்கும் பிள்ளையார்

(கல்லு......)

பொங்கல் பூசை படையலிட்டால்
பூரிப்பால் மகிழ்ந் திருப்பார்
எங்கள் குறைகள் தீர்த்துவைத்து
எல்லோ ரையும் வாழவைப்பார்

(கல்லு......)

மகிழ்ச்சி யோடு மக்கள்வாழ
மலை யினிலே இருப்பவர்
குளிர்ச்சி யான காற்றுவீச
குதூ கலமாய் இருக்கிறார்

(கல்லு......)

கல்லு மலைக்கு வாருங்கள்
கண பதியைப் பாருங்கள்
சொல்லி உங்கள் குறைகள்தீர்த்துச்
சுகம் பெறலாம் வாருங்கள்

(கல்லு......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## முதிரைத் தோட்டம் தேடிவந்த பிள்ளையார்

தேடி வந்தார் ஒரு பிள்ளையார் – வவுனியா
திருநகர் மத்தியில் அமர்ந்து கொண்டார்
கோடி செல்வம் கொடுக்கும் பிள்ளையார் – இங்கு
கோவில் கொண்டார் நல்ல அருள்சுரந்தார்

(தேடி வந்தார் ......)

சைவப் பிரகாச வித்தியாலயத்தின் அருகில் – நல்ல
சாயி சமித் திக்கும் அருகினிலே
சிவசக்தி குமாரனார் அமர்ந்து கொண்டார் – எதிலும்
சித்தி தரும்வண்ணம் கோயில் கொண்டார்

(தேடி வந்தார் ......)

**வேறு**

கதிரை மலைக் கந்தனுக்கும்
கருணை செய்த பிள்ளையார்
முதிரை மரத் தோட்டத்திலே
மூத்தவிநா யகனாய் வந்தார்

புதிரெ னவே மக்களெல்லாம்
புகழ்ந் தவரின் அடிபணிந்தார்
புதிய தொரு கோவில்கட்டி
பூசை செய்து மகிழ்ச்சிகொண்டார்

(தேடி வந்தார் ......)

**வேறு**

எல்லையில் லாப்பெருமை கொண்டவர் – நல்ல
ஏரம்ப னாம் பெயரைக் கொண்டவர்
கல்லை வைத்தாலும் அதில் அமருவார் – மண்
கழியை வைத்தாலும் அதில் அமருவார்

புல்லை வைத்தாலும் அதில் அமருவார் (அறுகம்) – ஒரு
பூவை வைத்தாலும் அதில் அமருவார்
நெல்லை விளைய வைக்கக் குளக்கட்டில் – வந்து
நீங்காமல் காவல் செய்து அருளுவார்

(தேடி வந்தார் ......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மானிப்பாய் மருதடி விநாயகர்

மருதடி விநாயகரே – மக்கள்
மனதினில் நிலைத்தவரே
அருள்தர அமர்ந்தவரே – எம்மை
ஆதரிக்க வேண்டுமையா

(மருதடி ....)

மானிப்பாய் எனும்பதியில் – நல்ல
மருத மரத்தருகில்
மாண்புடனே வீற்றிருக்கும் – எங்கள்
மருதடி விநாயகரே

(மருதடி ....)

மேற்கினிலே வாசல்கொண்டாய் – நல்ல
மேன்மையெல்லாம் எமக்குத்தந்தாய்
ஆர்க்கினிமேல் சேவைசெய்வோம் – எங்கள்
ஐங்கரனே காத்தருள்வாய்

(மருதடி ....)

சித்திரை வருடத்தன்று – நல்ல
சித்திரத்தேர் ஏறிடுவாய்
இத்தரை குளிர்ந்திடவே – எங்கள்
இதயத்தில் வலம்வருவாய்

(மருதடி ....)

படித்தவர் பாமரர்கள் – நல்ல
பண்பான உழைப்பாளர்கள்
தடித்தபணக் காரருக்கும் – ஏழைத்
தரித்திரர்க்கும் அருள்சுரப்பாய்

(மருதடி ....)

குற்றங்குறை தீர்த்தருளும் – நல்ல
குஞ்சரத்தோன் எனுமிறைவா
சுற்றமெல்லாம் வாழவேண்டும் – எங்கள்
சுகம்பெருக அருள்சுரப்பாய்

(மருதடி ....)

ஆனைமுகம் கொண்டவரே – ஊழாம்
ஆணையெல்லாம் வென்றவரே
நாளையிந்த உலகுக்கெல்லாம் – நிலைத்த
நல்லகதி தந்திடையா

(மருதடி ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## குயின்ஸ்லாந்து பிறிஸ்பேர்ன் செல்வவிநாயகர்

ஸ்ரீ செல்வ விநாயகரைச் சிந்தைதனில் நினைந்தால்
தீராத துன்பமெல்லாம் தீர்ந்துவிடும்

(ஸ்ரீ செல்வ ......)

அவுஸ்ரேலிய நாட்டினிலே குயின்ஸ்லாந்து மாநிலத்தில்
அழகிய பிரிஸ்பேர்ன் நகரத்திலே
தென்மக்லீன் பதியினிலே லின்சிமலைப் பாதையிலே
லோகன் நதிதீரத்திலே அமர்ந்திருக்கும்

(ஸ்ரீ செல்வ ......)

**வேறு**

**சாந்த ரூபனாக** அமர்ந்திருந்து அடியார்
சங்கடங்கள் போக்கி அருள் சுரந்து
காந்த மெனஅடியார் உள்ளங்களைக் கவர்ந்து
கருமங்களைக் காக்கும் கடவுளென விளங்கும்

(ஸ்ரீ செல்வ ......)

அம்மை அப்பரைச் சுற்றிவந்து – நல்ல
அரிய மாங்கனியைப் பெற்று மகிழ்ந்து
நம்மையெல் லாங்காக்க உலகினைச் சுற்றிவந்து
நமது பிரிஸ்பேனில் அமர்ந்து கொண்ட

(ஸ்ரீ செல்வ ......)

ஆனை முகத்தவராய் அனைத்துக்கும் முன்னவராய்
ஆயிரம் கோடிமலர் அழகு நிறைந்தவராய்
பானை வயிற்றவராய் பரம சிவன்மகனாய்
பாராளும் ஸ்ரீ செல்வ விநாயகராய் விளங்கும்

(ஸ்ரீ செல்வ ......)

பாரதக் கதையைமேரு மலையினில் பொறித்தவராய்
பரமசிவன் தேரின் அச்சினை முறித்தவராய்
ஊரினைக் காக்கவென்று ஊரூராய் அமர்ந்தவராய்
உத்தமராய் ஞான சக்தியின்குமாரர் என்னும்

(ஸ்ரீ செல்வ ......)

தம்பிக்கு மணமுந்தந்து நம்பிக்கு அருளுந்தந்து
நம்பிக்கை கொண்டவர்க்கு நாளுந் துணையாய்நின்று
தும்பிக்கை நாயகராய்த் துதிக்கும் அடியவர்க்கு
நம்பிக்கை தருபவராய் நல்வாழ்வு தருமெங்கள்

(ஸ்ரீ செல்வ ......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கரப்பாங்காடு வரசித்தி விநாயகர்

**பல்லவி**

வர மருள்வாய் வரசித்தி விநாயகரே – செல்வ
வள மருள்வாய் வரசித்தி விநாயகரே

(வர மருள்வாய் .....)

**அனுபல்லவி**

கரங் கூப்பி வழிபட்டோம் கண்டிடுவாய் – எங்கள்
கவலை களைப் போக்கி அருள்புரிவாய்

(வர மருள்வாய் .....)

**சரணம்**

வவுனியா கரப்பங் காட்டில் கோயில்கொண்ட – நல்ல
வரந்தரும் வரசித்தி விநாயகரே!
செவியசைந் தாடத்திரு நடனஞ் செய்யும் – எங்கள்
செல்வமே யாவரையும் காத்தருள்வாய்

(வர மருள்வாய் .....)

கரம்பைச் செடி படர்ந்த காட்டினிலே – நல்ல
கற்றவர் பரந்திருக்கச் செய்தவரே
விரும்பி வழி படுவோர் விருப்பங்களை – தந்து
வீட்டில் **நவநிதி**யைப் பெருக்கிடுவாய்

(வர மருள்வாய் .....)

பால மர நிழலில் அமர்ந்திருந்தாய் – இன்று
பக்குவமாய் உனக்குக் கோயிலமைத்தோம்
ஆல விஷமுண்ட அரன் மகனே – நல்ல
அமுதே விநாயகரே அடிபணிந்தோம்

(வர மருள்வாய் .....)

அலை கரையில் அமர்ந்த அருட்கடலே – எங்கள்
அவலங்களைப் போக்கும் அருமருந்தே!
கலை களெல்லாந் தருவாய் கணபதியே – உந்தன்
கால்பணிந்தோம் எம்மைக் காத்தருளே

(வர மருள்வாய் .....)

கஜமுக அசுரனுக்கும் கருணை செய்தாய் – இரு
கண்ணற்ற அடியவர்க்கும் ஏவல்செய்தாய்
புஜமீரா றுடைய தம்பி முருகனுக்கு – மணம்
புரிவிக்க யானைவடி வெடுத்துவந்தாய்

(வர மருள்வாய் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வேல் இருக்கும் உலகினிலே வினை இல்லையே....

**பல்லவி**

வேல் இருக்கும் உல கினிலே வினை இல்லையே – கந்த
வேள் இருக்கும் மன தினிலே துயர் இல்லையே

(வேல் இருக்கும்....)

**அனுபல்லவி**

சேல் இருக்கும் விழி இருக்கும் சேவற் கொடி உயர்ந் திருக்கும்
கால் இருக்கும் மயில் இருக்கும் கந்தமுரு கேசன் கை

(வேல் இருக்கும்....)

**சரணம்**

உமையவள் பாலகனே சரணம் ஐயா
உன்பாதம் தலைவைத்தோம் சரணம் ஐயா
இமையவர் குறை தீர்த்த எழிற்குமரா
எமக்கருள் செய்யஇது தருணம் ஐயா

(வேல் இருக்கும்....)

**பாலச் சந்திரனைச்** சூடிய எம்
பரம் பொருள் பாலகனே சரணம் ஐயா
காலக் கடும்புயலில் எமைக் காத்துக்
கருணை செய்பவனே சரணம் ஐயா

வவுனியா நகர் நடுவில் வாழ்பவனே
வந்தோரை வாழ வைக்கும் வேலவனே
கவுரி சிவன் மகிழும் பாலகனே
காத்தருள் எங்கள்மனம் ஆள் பவனே

(வேல் இருக்கும்....)

கார்த்திகைப் பெண் களுக்கும் நீபுதல்வன்
கற்போர்க்கும் மற் றோர்க்கும் நீமுதல்வன்
நேர்த்திவைத் துனை வணங்கும் அடியவர்க்கு
நெஞ்சத் துயரகற்றும் நிர் மலனே

(வேல் இருக்கும்....)

சஸ்டியும் கார்த்திகையும் உன் விரதம்(சூர)
சங்கார வேல் காக்கும் இதுசரதம்
கஷ்டங்கள் போக்கிடலோ உனக் கரிது
கந்தனே உன்கருணை மிகப் பெரிது

(வேல் இருக்கும்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிந்தை செய்வாய் மனமே

### பல்லவி

சிந்தை செய்வாய் மனமே – என்றும்
சிந்தை செய்வாய் மனமே

(சிந்தை....)

### அனுபல்லவி

எந்தை என் ஆருயிர்
எழில் வன்னிக் கந்தனை – நீ

(சிந்தை....)

### சரணம்

மந்திகள் மயில்களோடு மான்மரை நிறைந்த வன்னிக்
கந்தனை, கயி லாயர்
மைந்தனை மனதில் என்றும்

(சிந்தை....)

வள்ளிக்கு நாயகனாய் வன்னிக்கும் நாய கனாய்
வவுனியா நகரில் உறை
வடிவேற் குமரனை நீ

(சிந்தை....)

குளங்கள் நிறைந்தவன்னி குயில்கள் பாடும் வன்னி
வளங்கள் மிகுந்த வன்னி
வாழும்வடி வேலனை நீ

(சிந்தை....)

மாடுகள் மரங்கள்நல்ல மனிதர்கள் வாழும் வன்னி
காடுகள் தேன் சொரிய
கருணைசெய் வேலனை நீ

(சிந்தை....)

உன்மயில் அசுரமயில் உனக்கெதிர் பொருத மயில்
உண்மையில் என் மனமே
உனக்கென்றும் உரிய மயில்

என்மன மயில்அமர்வாய் என்னைநீ அடிமை கொள்வாய்
உன்மன விருப்பம் போல
ஊர்ந்துநீ அருள் புரிவாய்

(சிந்தை....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மருதோடை முருகன்

ஓமந்தை நகரினிலே ஓங்காரன் வீற்றிருக்க
ஓமென்னும் மந்திரத்தின் ஒலிமுழங்கும் கீழ்த்திசையில்
மாமந்தைப் பசுக்களெல்லாம் மழைபோலப் பால்பொழிய
மருதோடை அமர்ந்தவனே மால்மருகா வேல்முருகா

(ஓமந்தை .....)

வயல்மனைகள் சூழவுள்ள வளமான பதியினிலே
வந்தமர்ந்து அருள்பொழியும் வடிவழகா! குமரேசா!
மயில்குயில்கள் ஆடிப்பாடும் மருதநில அழகினிலே
மயங்கினையோ மாமுருகா மருதோடை வடிவேலா

(ஓமந்தை .....)

பழத்துக்குச் சுற்றிவந்த போதுஇந்த இடத்தைகண்டோ
பக்குவமாய் வந்தமர்ந்தாய் பன்னிருகை வடிவேலா
உளத்துக்கு உகந்தஇடம் உன்மனதுக் குவந்தஇடம்
உத்தமமாய் அமைந்தஇடம் உன்வரவால் உயர்ந்தஇடம்

(ஓமந்தை .....)

இயற்கையின் இன்பத்திலே இளகாத மனமுமுண்டோ
இளகிய மனத்தோடு எங்கள்குறை தீர்த்தருள்வாய்
கயற்கண்ணி வள்ளியின்மேல் காதல்கொண்ட கதிர்வேலா
கால்பணியும் அடியவர்மேல் காதல்கொண்டால் ஆகாதா

(ஓமந்தை .....)

தேரோடிய முதற்கோவில் தேவார புராணமெல்லாம்
வேரோடிய பழங்கோயில் மருதோடை வாழ்முருகா
பாரோடிய உலகமெல்லாம் பறந்தோடிய மாமயிலா
காரோடிய திசையெல்லாம் கண்ணோடிய கதிர்வேலா

(ஓமந்தை .....)

ஊரோடு வந்திருந்து உன்பூசை செய்தொருகால்
நீரோடும் கண்ணோடு நெஞ்சுருகி நின்றனரே
சூரோட வேல்விடுத்து தொலைத்தழித்த சுந்தரனே
ஆரோடு இனியிருப்போம் அடியவரைக் காத்தருள்வாய்

(ஓமந்தை .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தாண்டிக் குளம் பதியினிலே

தாண்டிக் குளம் பதியினிலே
யாழ்வீதி கிழக் கினிலே
வேண்டிவரும் அடியவர்க்கு அருள்புரிய – மகிழ்ந்து
வீதியோர மாய் அமர்ந்த வேலையா – எங்கள்
வேதனைகள் போக்கும் வடி வேலையா

(தாண்டிக் குளம் ....)

ஆண்டி யாகி நின்றவனே
அசுரர் களைக் கொன்றவனே
தாண்டிக்குளம் பதியினிலே அமர்ந்தவனே – தன்னைத்
தாண்டிச் செல்வோர் அனைவருக்கும் அருள்பவனே – சிவ
சக்திஉமை பாலகனாய் வந்தவனே

வேண்டி யொரு கனிக்காக
விண்ணும் மண்ணும் சுற்றிவந்து
ஆண்டியாகி மலைமேலே நின்றவனே – சொர்க்க
அதி பதியாய் இந்திரனை வைத்தவனே – தமிழ்
ஆராய்ந்து தலைவனாக நின்றவனே

(தாண்டிக் குளம் ....)

**வேறு**

குற வள்ளி மணம்விரும்பி
கோலூன்றி வயோதி பராய்
தினைப் புனத்தில் சென்றுலீலை நீபுரிந்தாய் – அங்கு
தேனோடு தினை மாவும் நீசுவைத்தாய் – தேவர்
பூசைசெய்த நெய்வேத்தியமும் நீபுசித்தாய்

ஆறு முகம் கொண்டவனே
அதி ரூப சுந்தரனே
அடிய வர்க்கு அருள்புரியும் சரவணனே – தேவர்
அடிபரவ அவர்க்கு அருள் செய்தவனே – இங்கு
அடியார்க்கு அருள்புரிய வந்தவனே

(தாண்டிக் குளம் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிதம்பரபுரம் திருப்பழநித் திருமுருகன்

திருப் பழநி மலையிருக்கும் திரு முருகா - நாங்கள்
செய்த தவப் பயனல்லவோ நீ முருகா
விருப் புடனே நீயமர்ந்து அருள் புரிந்தாய் - எங்கள்
வினைகள் யாவும் போக்கிடவே துணை புரிந்தாய்

(திருப்பழநி ....)

பழம் பெறாமல் ஆண்டியாகி நின்ற வனே - மூத்த
பழம் பொருளின் இளையவனாய் வந்த வனே
உளம் மகிழ்ந்து தமிழ்ப் பாடல் ரசிப்பவனே - அன்று
ஔண் தமிழைத் தலைமை தாங்கி வளர்த்தவனே

(திருப்பழநி ....)

வவுனி யாவின் சிதம்பரபுரம் கற் குளத்திலே - இருக்கும்
வானு யர்ந்த மலையினிலே கோயில் கொண்டாய்
அவனி போற்ற அடியவர்க்கு அருள் புரிந்து - என்றும்
அழியாத பெரு வாழ்வைத் தந் தருள்வாய்

(திருப்பழநி ....)

குன்று தனில் நடம் புரியும் குருபரனே - பழநிக்
குன்று தனில் வந்த மர்ந்த குமரேசனே
அன்ற சுரர் பெரு மலையை அழித்தவனே - வந்து
இன்ற மர்ந்தாய் பழநி யிலே இளஞ்சேயே

(திருப்பழநி ....)

வள்ளி தெய்வ யானை மகிழ் மணமகனே - வந்து
வவுனி யாவின் தென் கிழக்கில் அமர்ந்தவனே
அள்ளி அள்ளிச் செல்வ மெல்லாம் தருபவனே - எங்கள்
அன்பில் மகிழ்ந்து அமர்ந் திருக்கும் அரியவனே

(திருப்பழநி ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## நெளுக்குளம் முருகா

நெளுக் குளத்தில் குடி யிருக்கும் வேல் முருகா – எங்கள்
நெஞ்ச மெல்லாம் நிறைந் திருக்கும் மால் மருகா
அருட் குளமாய் நிரம்பி வழியும் ஆறு முகா – இந்த
அகில மெல்லாம் வாழ வழி கூறு மு(ரு)கா

(நெளுக்குளத்தில் ....)

சூரர் குல கால னென வந்த வனே – தேவர்
சுற்றத் துக்குக் காவ லென நின்ற வனே
பாரு லகு போற்றும் படை கொண்ட வனே – மேருப்
பக்க மலை மேல் நடனம் செய்த வனே

(நெளுக்குளத்தில் ....)

காலைக் கதிர் ஒளி எனவே அருள் சுரப்பாய் – நீயே
காவ லென்று நம்பி வந்தோம் கண் திறப்பாய்
ஊழை வெல்லும் வழி தேடி உழலு கின்றோம் – எங்கள்
உயிர் உனக்கே அபயம் என்று சுழலு கின்றோம்

(நெளுக்குளத்தில் ....)

கந்த சஷ்டி காலத்திலுன் கால் பணிந் தோம் – உந்தன்
கருணை விழிப் பார்வைக் காகக் காத் திருந்தோம்
எந்த வினை யானாலும் தீர்த்து வைப் பாய் – இங்கு
வந்த வினை நோய்தீர்த்து வாழ வைப் பாய்

(நெளுக்குளத்தில் ....)

வள்ளி தெய்வ யானை யுடன் மயி லேறி – இந்த
வைய கத்தைச் சுற்றி ஒரு வலம் வருவாய்
துள்ளி வரும் வேலாலே துயர் துடைப் பாய் – நோய்த்
துன்பத் தினை நொடிப் பொழுதில் துடைத் தழிப்பாய்

(நெளுக்குளத்தில் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பம்பைமடு முருகா

மருத மரச் சூழலிலே மயில்கள் நடம் ஆடலிலே
திரு முருகன் மகிழ்ந் திருப்பான் வாருங்கள் – உங்கள்
தீராத வினைகள் தீர்ப்பான் பாருங்கள்

(மருதமரச் ....)

இளந் தென்றல் காற்றுவரும் இதயத்திலே மகிழ்ச்சி தரும்
எங்கள் முரு கேசனிடம் வாருங் கள் – வந்தால்
உங்கள்குறை தீரும் உண்மை பாருங்கள்

(மருதமரச் ....)

அன்னை உமை பாலனவன் அசுரர்குல காலன் அவன்
முன்னை வினை போக்க வந்த முருகனவன் – அன்று
மண்ணை அளந்தோன் மகிழும் மருகனவன்

(மருதமரச் ....)

முப்புரத்தை எரித் தழித்த முன்ன வனின் புதல்வனவன்
முப்பழத்தை விரும்பி உண்ணும் மூத்தவனின் தம்பியவன் – எங்கள்
முற்பிறவி நோய்தீர முன்னிற்கும் குமரனவன்

(மருதமரச் ....)

**வீரவாகு** தேவருக்கு மூத்த வனாய்த் தோன்றி யங்கு
சூரர் தொகை நாசஞ் செய்த சுந்தரன் – உலகைச்
சுற்றிவந்த தோகை மயில் வாகனன்

(மருதமரச் ....)

பம்பை மடுப் பதியினிலே பழமை மிகு கோயிலிலே
நம் முருகன் அருள் தருவான் வாருங்கள் – வந்து
உம் குறைகள் சொல்லிமனம் ஆற்றுங்கள்

(மருதமரச் ....)

தேவர் குறை தீர்த்த எங்கள் திருமுருகன் கோவிலுக்கு
ஆவ லோடு வந்து பூசை ஆற்றுங்கள் – அவன்
சேவ லோடு வந்துஉமைத் தேற்றுவான்.

(மருதமரச் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## புளியங்குளம் முருகா

தேவ குலம் காத்தவா! தேவ சேனைக் காவலா!
பாவ வினை தீர்ப்பவா! பன் னிருகை வேலவா
மூவ ருக்கும் முதல்வ னான முழுமுதலின் பாலகா!
மூவு லகும் வாழ வைக்கும் முருகனான மூலவா!

(தேவ குலம் ......)

வழியின் அருகில் கோவில்கொண்டு வருப வரைக் காப்பவா!
வணங்கும் அடியார் துன்பம்போக்கி வாழ்வு கொடுக்கும் வேலவா!
புளியங் குளத்தில் அமர்ந்தவா! புரட்சி அன்று செய்தவா!
எளிய ரான வேடுவர்க்கும் மருக னாகி வாழ்ந்தவா!

(தேவ குலம் ......)

வள்ள லான வேலவா! வாழ் வளிக்கும் மேலவா!
உள்ள மெங்கும் உறைபவா! உலகைக் காக்கும் உத்தமா!
தெள்ளு தமிழ்க் காவலா! தெய்வ யானை காதலா!
திருப் புகழில் குடியிருக்கும் தேவதேவ தேவவா!

(தேவ குலம் ......)

அகத்தி யர்க்கும் பாடம்சொன்ன அன்னை உமை பாலகா!
ஆனை முகன் தம்பியான அழகு முரு கேசவா!
சகத்தி லுள்ளோர் வணங்கஅருள் தந்த ருளும் சரவணா!
சர்வ லோக நாயகா! சக்தி வேலாய் நின்றவா!

(தேவ குலம் ......)

மாமரமாய் நின்ற சூரன் மார்பில் வேலை விட்டவா!
மாங்க னிக்காய் உலகைவலம் வந்த மயில் வாகனா!
தாமரையில் தவழ்ந்து வந்த தங்க நிற வேலவா!
தமிழைக் காக்கச் சங்கத்திலே தலைவ ரான மூலவா!

(தேவ குலம் ......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஆறுமுகத்தான் புதுக்குளத்து முருகா

**பல்லவி**

ஆறு முகத்தானைக் காணலாம் – யாவரும்
ஆறு முகத்தானைக் காணலாம் (ஆறு முகத்தானை.....)

**அனுபல்லவி**

ஆறு முகத்தான் புதுக்குளத்தில் வந்து
அமர்ந்த முருகேசன் என்னும் (ஆறு முகத்தானை.....)

**சரணம்**

ஏறு மயில் தனிலே ஏறுமுகத் தோடிருக்கும்
ஆறு முகத் தானைக் காணலாம்.
மாறு படு சூரரை வதைத்தமுரு கேசனாம்
ஆறு முகத் தானைக் காணலாம்

கூறு தமிழ்ப் பாட்டில் குதூகலித்தே இருக்கும்
சேறு வயல் நிறைந்த செந்நெல் விளைநிலமாம்
ஆறு முகத்தான் புதுக் குளத்தில் வந்து
ஆறு முகத் தானைக் காணலாம் (ஆறு முகத்தானை.....)

**வேறு**

கூறு படு மாறுசூரன் உடல் கிழித்த வேலனெனும்
நாறு மலர்க் கூந்தல் நம்வள்ளி மணாளனாம்
ஆறு முகத் தானைக் காணலாம்

சாறு தரு மாங்கனிக்காய் சகல லோகம் சுற்றிவந்த
ஆறு முகத் தானை வந்து
ஆறு முகத்தான் புதுக்குளத்தில் காணலாம்

நூறு பிறவி களில் நோற்ற தவம் வாய்த்ததென
கூறு முகத்தான்வந்து அமர்ந்தமுரு கேசனைநாம்
ஆறு முகத்தான் புதுக்குளத்தில் காணலாம்

சோறு தரும் நல்ல சுக போக வாழ்வுதரும்
ஆறு முகத் தானை வந்து
ஆறு முகத்தான் புதுக்குளத்தில் காணலாம்

வேறு பாடில்லா மக்கள் விவசாயம் செய்து வாழும்
ஏறு பசுக்களென இருக்கும் மனைநிறைந்த
ஆறு முகத்தான் புதுக்குளத்தில் வந்து (ஆறு முகத்தானை.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## நல்லூர் அலங்காரக் கந்தன்

யாழ்ப்பாண நல்லூரிலே யாவருக்கும் அருள்புரிய
வாய்ப்பாக அமர்ந்துகொண்ட வடிவேலா - உன்னைப்
பாப்பாடிப் புகழவந்தேன் வடிவேலா

(யாழ்ப்பாண .....)

காப்புநீ என்றுவந்த கணக்கில்லா அடியவரைப்
பார்த்துநீ அருள்புரிவாய் வடிவேலா - செய்த
பாவங்களைப் போக்கிடுவாய் வடிவேலா

(யாழ்ப்பாண .....)

**வேறு**

நல்லையிலே வாழுகின்ற அலங்காரக் கந்தா - எங்கள்
தொல்லைவினை நீக்கிடுவாய் தோகைமயில்க் கந்தா
எல்லையில்லா அழகுடனே எழிலாகி நீவருவாய் - தேவர்
அல்லல்களைப் போக்கிடவே அக்கினியில் நீவந்தாய்

(யாழ்ப்பாண .....)

**வேறு**

தமிழர்களின் கடவுளும்நீ தமிழுக்கும் கடவுளும் நீ
அமிழ்தினிலும் இனிதான அருமருந்தாய் ஆனவன் நீ
அவியாகத் தமிழ் சொரிய ஆதரிக்கும் கடவுளும் நீ
அடியவரைக் காத்திடவே அருள்சுரக்கும் அருள்நிதி நீ

(யாழ்ப்பாண .....)

வள்ளி தெய்வ யானையுடன் வாழுகின்ற தெய்வம் நீ
அள்ள அள்ளக் குறையாத அருட்கடலாய் ஆனவன் நீ
உள்ள மென்னும் தாமரையில் உறைகின்ற உத்தமன் நீ
ஊருலகு வாழ வைக்க உயிர்க்குயிராய் ஆனவன் நீ

(யாழ்ப்பாண .....)

தில்லை நட ராஜன் மகன் திருமாலின் மருகன் நீ
எல்லை யில்லாப் பேரழகின் எழில் விளங்கும் முருகன் நீ
கல்லைக் கனி ஆக்கி வைத்த கருணைவடி வானவன் நீ
நல்லை யிலே குடிகொண்டாய் நமக்கெல்லாம் வாழ்வு தந்தாய்

(யாழ்ப்பாண .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## செல்லச் சன்னதி அன்னதானக் கந்தன்

ஆலிலையில் அமுது படைக்க
அடியவர்க்கு அருள் படைக்கும்
அன்னதானக் கந்தன்புகழ் பாடுவோம் - செல்லச்
சன்னதியில் மகிழ்ந்து ஒன்றாய்க் கூடுவோம்.

(ஆலிலையில் .....)

**வேறு**

மௌனமொழிப் பூசையினை மகிழ்ந்தேற்குங் கந்தனைநாம்
மௌனமாக வழிபட்டேத்தி வணங்குவோம் - என்றும்
மாறாத பெருவாழ்வை வெல்லுவோம்.

(ஆலிலையில் .....)

தொண்டைமா னாறுஎன்னும் தொல்பதியில் கோயில்கொண்டு
தொண்டருக்கு அருள்புரியும் கந்தனைக் - கண்டு
தொண்டுசெய்து துயரங்களைக் கொல்லுவோம்

(ஆலிலையில் .....)

**வேறு**

கந்தபுரா ணப்படிப்பும் கவின்தமிழின் புராணங்களும்
எந்த நாளும் படிக்க இருந் தருளுவான் - கந்தன்
சொந்தமென எமக்கு அருள் புரிகுவான்

(ஆலிலையில் .....)

கல்விகலை சிறந்தபதி யாழ்மண்ணின் தலையாகி
செல்வ வளம் நிறைந்த செல்லச் சன்னதி - வந்து
சீர்க் குமரேசன் பாதம் வணங்குவோம்.

(ஆலிலையில் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மாவிட்டபுரம் அபிஷேகக் கந்தன்

அபி ஷேகக் கந்த னென்னும் அழகையா – உலகை
அரை நொடியில் சுற்றி வந்த வேலையா
செவி குளிர தவில் முழங்கும் கோவிலிலே – நீ
சேர்ந் திருந்தாய் தேவி யரை முருகையா

(அபிஷேகக் கந்தன் ......)

மாவிட்ட புரம் என்னும் ஊரினிலே – உன்னை
மனம் விட்டுப் பாடுவாரே அடியவர்கள்
வேல் விட்டு பகை வென்ற வேலவனே – இன்னும்
வேல் உண்டு பகை யுண்டு நீயுமுண்டே

(அபிஷேகக் கந்தன் ......)

சேல் தொட்ட விழியழகி வள்ளியம்மை – தன்னைக்
கால் தொட்டுக் காந்தர்வம் புரிந்தவனே
செல் வந்து பாழ் பட்ட பூமிதன்னை – மீட்டு
செல் வந்த பூமி யென ஆக்கிவைப்பாய்

(அபிஷேகக் கந்தன் ......)

தேவர் களைச் சிறைமீட்டு அரசுதந்தாய் – அவரின்
தேசத்திலே அவர்க்குரிய காணி தந்தாய்
ஆவ லோடு உனை வணங்கும் அடியவர்கள் – இழந்த
அனைத்து நிலம் பெறவும் அருள் புரிவாய்

(அபிஷேகக் கந்தன் ......)

கந்த னென்ற சொல்லுக்குள்ளே கட்டுப்பட்டோம் – நல்ல
காந்த மென எம்மனதை ஈர்த்துக்கொண்டாய்
உந்தன் அடி வணங்குவதே வேலை யென்று – இருக்கும்
உன் அடியார் குறைதீர்க்க வேலை விடு

(அபிஷேகக் கந்தன் ......)

கண் ணினிலே மணியாக இருப்பவனே – என்றும்
கருத் தினிலே ஒளியாக இருப்பவனே
எண்ண மெல்லாம் நிறைந் திருக்கும் வேலவனே - நீ
எங்கள் குறை தீர்த் திடவே எழுந்தருளே

(அபிஷேகக் கந்தன் ......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## குருநாத சுவாமிகள்

சிவபூமி யாய்த்திகழ்ந்த ஈழத்தின் வடக்கினிலே
சீலம்மிக்க யாழ்ப்பாணம் சங்கிலியன் ஆண்டமண்ணாம்.
தவபூமி எனப்பெருமை பேசுகின்ற யாழ்மண்ணின்
தலையாய் விளங்குவது காங்கேசன் துறைநகரம்.

(சிவபூமி .....)

கற்றவர்கள் வாழுகின்ற காங்கேசன் துறையினிலே
கணக்கில்லாப் புகழ்மிக்க இறங்கண்யவளை ஊரினிலே
நற்றவர்கள் போற்றுகின்ற நம்குலத்துத் தெய்வமான
நல்லகுரு நாதஸ்வாமி நல்லருளோ டுறைகின்றார்.

(சிவபூமி .....)

மாடுபூட்டி வண்டியிலே வந்தவரின் மாடுகளோ
மயங்கிக் களைப்பினிலே வழியினிலே படுத்துவிட
குடிமனை இல்லாத நீரில்லா இடத்தினிலே
கும்பிட்டார் முருகனையே கூவியே அழைத்திட்டார்

(சிவபூமி .....)

வயோதிபராய் வடிவெடுத்து வந்தகுரு நாதஸ்வாமி
வாளியிலே நீர்கொணர்ந்து நீர்கொடுத்து அருள்செய்தார்
வந்தவரோ மறைந்துவிட்டார் வண்டிலோட்டி அதிசயித்தார்
அந்தஇடத் தேகோவில் அமையஅங்கே இருந்துகொண்டார்.

(சிவபூமி .....)

சுட்டபழம் கேட்டஔவை தோல்வியுறத் தமிழ்தந்த
சுந்தரனாம் கந்தமுரு கேசனவன் அமர்ந்தகோவில்.
குருநாதா எனஅழைத்தால் ஓடிவந்து அருள்புரிவான்.
கும்பிடுவோர் குறைதீர்த்து நல்லருளை உடன்தருவான்.

(சிவபூமி .....)

வள்ளியம்மை அச்சமுற வந்தயானை திரும்பியோட
வள்ளியினை அணைத்தெடுத்து காந்தர்வ மணம்புரிந்தான்.
வேங்கைமர மாகிநின்றான் விருத்தனாக வடிவுகொண்டான்
நாங்காண இங்குவந்து நல்லருளைப் புரிகின்றான்

(சிவபூமி .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மண்டூர்க் கந்தசுவாமி

**பல்லவி**

மண்டூரிலே கந்தன் வாழ்கிறான் – புகழ்
மண்டூரிலே கந்தன் வாழ்கிறான்

(மண்டூரிலே .....)

**அனுபல்லவி**

வண்டூரும் மலர்ச் சோலைக் குள்ளே
கண்டோடி வந்து வேடர் போற்றிய

(மண்டூரிலே .....)

**சரணம்**

இந்திர னுக்கும் மருகன் மாயச்
சுந்தர னுக்கும் மருகன் மலைத்
தந்திர வேடன் நம்பிக்கும் மருகன்
வந்திருக் கின்றான் மண்டூர்ப் பதியில்

மந்திர மில்லை தந்திர மில்லை
மௌனப் பூசையை ஏற்றுக் கொள்வான்
சுந்தரன் முருகன் மண்டூர்க் கந்தனைச்
சுற்றி வந்தாலே சுகம் பெறலாம்

(மண்டூரிலே .....)

சூரர் குலத்தை அழித்த குமரன்
சுந்தரன் கந்தன் மண்டூர் வந்தான்
வாருங்கள் கந்தனின் பாதம் பணிவோம்
வாழ்க்கையை வெல்ல வரங்கள் பெறுவோம்

சிவனின் மகனாம் பார்பதி மைந்தன்
சிந்துர யானை முகத்தோன் தம்பி
அவனின் பாதம் ஆதர வாகும்
அன்போடு ஒன்றாய்க் கும்பிட்டு வாழ்வோம்

(மண்டூரிலே .....)

புகழ் மண்டூர் – புகழ் நிரம்பிய ஊர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## குன்றாத இளமையுடன் குமரன்

குன்றாத இளமையுடன் குமரன் – மலைக்
குன்றுகளில் ஆடி வருகின்றான்
நின்றாலும் இருந்தாலும் நினைவில் – என்றும்
நீங்காமல் ஓடி வருகின்றான்.

(குன்றாத.....)

சூரர் தொகையினுக்குக் காலன் – அன்னை
தோளில் விளையாடும் பாலன்
பாரோர் தொழுதேத்தும் வேலன் – வள்ளி
பாகம் அணையும்மண வாளன்.

(குன்றாத.....)

காலக் கடும்புயலில் வாடும் – மனம்
கவலைகள் தீர்க்கவழி தேடும்
நீலக் கதிரமலை கூடும் – கந்தன்
நினைத்தால் வினைகள் பறந்தோடும்

(குன்றாத.....)

தீராத வினைகளென்னும் தொல்லை – கங்கைத்
தீர்த்தத்தில் ஆடியபின் இல்லை
வாயார முருகனென்ற சொல்லை – சொன்னால்
வருமே துயர்களுக்கு எல்லை

(குன்றாத.....)

இசையமைப்பு : திரு.ரொக்சாமி

(இலங்கை வானொலி மெல்லிசைப் பாடல் – 1979)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கிளிநொச்சி கந்தசுவாமி

யாழ்ப்பாண வீதியிலே கிளிநொச்சி நகரினிலே
காப்பாக அமர்ந்து கொண்ட கந்தையா – உன்
கால் பிடித்தோம் காத்தருள்வாய் கந்தையா

(யாழ்ப்பாண .....)

ஊழ்ப்பானை எனஇருக்கும் உடற்பானை தனிலிருக்கும்
ஊழ்வினையை மாற்றி விடு கந்தையா – உயிர்க்கு
உவப்பான அருள் தருவாய் வேலையா

(யாழ்ப்பாண .....)

கோள்கிரக நிலைமூலம் கொடுமைகளை வரவிடாதே
கும்பிட்டோம் உனை நம்பி கந்தையா – எங்கள்
குடும்பங்களை வாழ வைப்பாய் கந்தையா

(யாழ்ப்பாண .....)

கிளிநொச்சி தனில்வாழும் கந்தையா எங்களுக்கு
கிழக்கின்னும் வெளுக்க வில்லை கந்தையா – உன்
கீழ்க்காலின் ஒளி காட்டு கந்தையா

(யாழ்ப்பாண .....)

கந்தமுரு கேசனென்றே கசிந்துருகும் அடியவர்க்கு
வந்தவினை போக்கி யருள் கந்தையா – வாழ்வில்
நொந்தவரைக் காத்தருள் வாய் கந்தையா

(யாழ்ப்பாண .....)

பாவக்கடல் சூழ்ந்தஇந்தப் பவக்கடலில் வீழ்ந்துவிட்டோம்
பாவியரைக் கரையேற்று வேல்முருகா – எங்கள்
பவவினையைப் போக்கி விடு கந்தையா

(யாழ்ப்பாண .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பேராதனைக் குறிஞ்சிக் குமரன்

**பல்லவி**

பேராதனை வந்தோம் பெரு மானே – உன்னை
ஆரா தனைசெய்ய அன்போடு தான்

**அனுபல்லவி**

தாராள மாய்இங்கு எழில் கொஞ்சுதே – இளந்
தாராக்க ளைப்பெண்கள் நடை விஞ்சுதே

**சரணம்**

மலையினில் அருவிதவழ் சோலை கண்டோம் – இளம்
மாமயில் நடமாடும் மாலை கண்டோம்
கலையென மேகங்கள் வானந் தன்னை – வந்து
கைநீட்டி முழுதாக மூடக் கண்டோம்

(பேராதனை....)

கங்கையின் கரைதனிலே கலை தூங்குதே – அதைக்
கைகளில் பறித்திடவே மனம் ஏங்குதே
மங்கையர் முகமென்ற மதி வாட்டுதே – மலர்
மாரன் கணையதற்கு மகிழ் வூட்டுதே

(பேராதனை....)

பனிதூங்கும் மலையழகில் மனம் நாடுதே – எழில்
பவளங்கள் தனையிங்கு கதிர் வாங்குதே
கனிதூங்கும் மரங்களைத்தன் கலையால் மூடி – மேகம்
கண்மூடி மையிட்டுக் கவி கேட்குதே

(பேராதனை....)

இந்துமா மன்றவெள்ளி விழா நாளிலே – வந்து
இந்தமா மன்றத்தில் பாடு கின்றோம்
சொந்தமாய் அனைவருக்கும் நன்றி சொன்னோம் – இன்னும்
தொடர்ந்திடும் பந்தமென்று வணக்கம் சொன்னோம்.

(பேராதனை....)

**இசையமைப்பு: திரு.உமாகாந்தன் (1978)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## குறவள்ளி தனைக் கொஞ்சும் குமரேசனே

### பல்லவி

குறவள்ளி தனைக் கொஞ்சும் குமரேசனே – எங்கள்
குறைதீர்க்க எழுந்தோடி வரும் ஐயனே

### அனுபல்லவி

மறவேடர் மகள்மேலே மையல் கொண்டு – கொடுங்
கிழவேடம் கொண்டதமிழ்க் கிழவா நீவா

### சரணம்

மலர் கொஞ்சும் மலைசேர்ந்த முருகா நீவா – கடல்
அலை கொஞ்சும் திருமாலின் மருகா நீவா
கலை வல்ல புலவோர்தம் கண்ணே நீவா – கல்விக்
கரை சேர்க்கும் குறிஞ்சிவாழ் குமரா நீவா

(குறவள்ளி....)

வேலுண்டு உன் கையில் வினை தீர்க்கவே – இரு
காலுண்டு எம் பாவம் தனைப் போக்கவே
ஆலுண்ட கண் டத்து அர னாருக்கே – மிக
அருகாகி உப தேசம் புரிந் தாண்டவா

(குறவள்ளி....)

மான் தேடி நீயிங்கு வர வில்லையே – கல்வி
மான் தேடி வந்தாயோ சொல் ஐயனே
நான் தேடி அழைக்கின்றேன் அது தொல்லையோ – இங்கு
நான் பாட நீயன்றிப் பொருள் இல்லையே

(குறவள்ளி....)

தமி ழோடு விளையாடும் முருகா நீவா – நான்
தமிழ் பாட என்னோடு நீ கூடவா
அமிழ் தோடு உலகெனினும் வேண்டேன் ஐயா – செந்
தமி ழோடு சுடுகாடு தருவாய் ஐயா

(குறவள்ளி....)

இசையமைப்பு: திரு.உமாகாந்தன் (1978)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## காட்டுக் குறவள்ளி காதலா

காட்டுக் குற வள்ளிக் காதலா - எங்கள்
கதிர்காமக் கோயி லுறை வேலவா
பாட்டுப் புல வர்களின் காதலா - வள்ளி
பாதம் பணிந்த மயில் வாகனா

(காட்டுக் குற .....)

போட்டிக் குலகை வலம் வந்தவா - ஔவைப்
பாட்டிக் கருள் புரிந்த வேலவா
நாட்டுக் கெல்லாம் தலைவன் ஆனவா - எங்கள்
நாட்டின் கதிர் காம வேலவா

(காட்டுக் குற .....)

மௌனப் பூசை யேற்கும் மன்னவா - நல்ல
மாணிக்க கங்கைக் கரை அமர்ந்தவா
மௌன நிலை யிருந்த ஈசற்கு - நல்ல
மந்திரப் பொரு ளுரைத்த மயிலவா

(காட்டுக் குற .....)

அருண கிரி பாட மகிழ்ந்தவா - மயில்
அசைந்து நடம் புரிய அமர்ந்தவா
கருணை மணங் கொண்ட கந்தவா - கல்லுக்
கிரவுஞ்ச மலை அழித்த காவலா

(காட்டுக் குற .....)

செல்லக் கதிர் காமம் கொண்டவா - நல்ல
செல்வச் செழிப்புத் தரும் வேலவா
வெல்ல முடியா வேல் கொண்டவா - சூரை
வென்று அமரர் களைக் காத்தவா

(காட்டுக் குற .....)

கார்த்திகைத் திரு நாளைக் கொண்டவா - அன்று
கார்த்திகைப் பெண்கள் பால் உண்டவா
கார்த்தி கேய னெனும் வேலவா - உலகைக்
காக்கும் நேயங் கொண்ட கந்தையா

(காட்டுக் குற .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## நகரின் நடுவிலுறை நாயகனே நீயே

வவுனியா நகரில் வரந்தரும் நினைவில்
வளமுடன் வாழும் வடி வேலா
செவியுற உந்தன் திருப்புகழ் பாடித்
தினமுனைப் பணிய அடி தாராய்

(வவுனியா....)

**வேறு**

நகரின் நடுவிலுறை நாயகன் நீயே
நம்பினோர் தமைக்காக்கும் நம்மிறை நீயே
இகபர சுகங்கள்தரும் இனியவன் நீயே
எம்பெரு மான்சிவனின் இளைய மகன்நீயே

துன்பங்கள் போக்கவேல் ஏந்தி வந்தாய்
துயரங்கள் நீக்கமயில் ஏறி வந்தாய்
இன்பங்கள் பெருகநாம் ஏத்து கின்றோம்
இன்னல்கள் போக்கியெமை வாழ வைப்பாய்

(வவுனியா....)

**வேறு**

சேவல் கொடியாய் நின்று கூவும் ஒலியில் எந்தன்
சிந்தை நிறைந் துணர்வு சிலிர்க் கின்றதே
ஆவல் பெருக உன்னை அண்டி வந்தோம் நல்ல
அமரத் துவ வாழ்வை வேண்டி நின்றோம்

(வவுனியா....)

**வேறு**

பன்னிரண்டு கண்களிலே ஒன்றிரண்டு பார்த்தாலும்
பரவச நிலைக்கு உள்ளம் பறந்தோடுமே
உன்னிரண்டு காலின்ஒளி அதுபோதுமே எந்தன்
உயிரே உன்னோடு கலந் திடுமே

(வவுனியா....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வாழ்வுக்கு உகந்த பெருமான்

கூப்பிட் டழைத்தாலும் கும்பிட் டழைத்தாலும்
காப்பேன் என வருவான் – கந்தன்
காப்பேன் என வருவான்

(கூப்பிட் டழைத்தாலும்....)

பக்திப் பரவச ராய்விடும் கண்ணீரைப்
பார்த்து மனம் நெகிழ்வான் – கந்தன்
பக்கத் திலே வருவான்

(கூப்பிட் டழைத்தாலும்....)

நோய்நொடி என்றாலும் பாழ்மிடி வந்தாலும்
தாய் எனவே வருவான் – கந்தன்
தன்னரு ளைத் தருவான்

(கூப்பிட் டழைத்தாலும்....)

ஈசன் உமைதிருப் பாலன் இளையவன்
எண்ணமெல் லாம் நிறைவான் – எங்கள்
எண்ண மெல்லாம் தருவான்

(கூப்பிட் டழைத்தாலும்....)

வன்னி வவுனியா வாழ்பதி மத்தியில்
வாழ்ந்திடும் கந்தப் பெருமான் – எங்கள்
வாழ்வுக் குகந்த பெருமான்

(கூப்பிட் டழைத்தாலும்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கந்தனே என்று உன்னை

கந் தனே என்று உன்னைச்
சிந் தனை செய் பவர்க்கு
வந் தருள் செய்யும் முருகா – சிவன்
மைந் தனே செல்வக் குமரா

(கந் தனே என்று....)

புவி யினோர் போற்றும் வண்ணம்
வவு னியா நகரில் வந்து
கவி னுறத் தோன்றும் முருகா – சக்தி
செவி குளிர் மாயோன் மருகா

(கந் தனே என்று....)

உன்னை நாம் எண்ணி எண்ணி
உரு கினோம் கண்ணீர் மல்கி
ஒரு துணை நீயே முருகா – இன்றுன்
கரு ணையே தேவை முருகா

(கந் தனே என்று....)

வே லினைக் கையில் கொண்டு
வே லவன் நாமம் கொண்டு
வினை களைத் தீர்க்கும் முருகா – சூர
வீ ரரைக் கொன்ற முருகா

(கந் தனே என்று....)

அசு ரர்கள் அன்று செய்த
அநி யாயச் செயல்கள் தன்னை
அழித் திட வந்த முருகா – இன்றும்
அதற் கென வாராய் முருகா

(கந் தனே என்று....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அழகான சித்திரத்தேர்

அழகான சித்திரத் தேர்
அருமையான விசித்திரத் தேர்
அன்னைசிவ காமிமகன் வருகிறான் - மக்கள்
அலைபோலத் திரண்டுநின்று தொழுகிறார்.

எண்கோண வடி வமைந்த
பூசாந்தர முக பத்திர
எழிலான சித்திரத்தேர் பாருங்கள் - வாழ்வில்
இதனைவிடப் பேறுஎது கூறுங்கள்.

வவுனியாவின் நகரில் வாழும்
வடிவேலன் எழுந் தருளி
அவனிகாக்க ஊர்வலமாய் வருகிறான். - அடியார்
அவனழகில் மனம்மயங்கி உருகிறார்.

எத்தனையோ ஆண்டு செய்த
எங்கள்தவம் பலித்த தனால்
இத்தனைநாள் காத்திருந்தோம் பார்க்கவே - கந்தன்
ஏறிவந்தான் பார்த்தகண்கள் பூக்கவே

கந்தன்வேலன் கடம்பன்,வள்ளி
காதல்மண வாளன், குகன்
வந்தமர்ந்து தேரில்வலம் வருகிறான் - எங்கள்
வாழ்வினுக்கோர் பெறுமதியைத் தருகிறான்.

சரவணனே குரு பரனே
சர்வலோக நாய கனே
அரவணைத்து அருள்பொழிந்து காத்திடாய் - எங்கள்
அரும்பாவ வினைகளெல்லாம் தீர்த்திடாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தேரேறி வருகிறான் முருகன்

**பல்லவி**

தேரேறி வருகிறான் முருகன் - வண்ணத்
தேரேறி வருகிறான் முருகன்

**அனுபல்லவி**

காரேறி மழை பொழியும்
களனி மிகும் வவுனியாவில்

(தேரேறி வருகிறான்....)

**சரணம்**

நீரேறி மீன்பாய நிலமேறி மான்பாய
தாரேறி வண்டுகளோ சங்கீதப் பண்பாட

(தேரேறிவருகிறான்....)

மயிலேறி நட மாட மனமேறிக் கவிபாட
குயிலேறிப் புகழ்பாட குரங்குகளோ ஜதி போட

(தேரேறி வருகிறான்....)

**வேறு**

கந்தன் குகன் கார்த்தி கேயன்
கருணை முரு கேசன் வேலன்
வந்தமர்ந்தான் தேரினிலே வாருங்கள் - உங்கள்
பந்தவினை தீர அருகில் சேருங்கள்

(தேரேறி வருகிறான்....)

என்ன காட்சி என்ன மாட்சி
என்னஅழகு என்ன சிறப்பு
எண்ணஎண்ண இனிக்கும்வண்ணத் தேரிலே - கந்தன்
எழுந்தருளி வருகி றானே நேரிலே

(தேரேறி வருகிறான்....)

வடம் பிடித்தால் வறுமை நீங்கும்
வற்றாப் பெருஞ் செல்வந் தேங்கும்
இடம்பிடித்து வடம்பிடித்து இழுப்போமே - கந்தன்
இருக்கும்தேரை இழுத்து வலம் வருவோமே

(தேரேறி வருகிறான்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## எந்த வினை ஆனாலும்

எந்த வினை யானாலும்
வந்த வினை தீர்த்தருளும்
சொந்தமென நம்பி வந்தோம் சுகந் தருவாய் - வவுனியா
கந்தனுனைச் சரணடைந்தோம் நலந் தருவாய்
(எந்த வினை...)

பொய் தழுவும் உலகினிலே
மெய் தழுவும் அடியவர்கள்
கைதொழுதோம் காப்ப துந்தன் கடமை ஐயா - வள்ளி
மெய்தழுவும் வேலவநின் உடமை ஐயா
(எந்த வினை...)

வள்ளி மண வாளனும்நீ
புள்ளி மயில் வாகனன்நீ
எள்ளிஎமை ஊர் சிரிக்க விடு வாயோ - விரைந்து
துள்ளிவர வேல்எடுத்து விடு வாயோ
(எந்த வினை...)

தேவ சேனைக் காவலன்நீ
தேவ சேனைக் காதலன்நீ
பாவவினை எமை வருத்த விடு வாயோ - துன்பம்
வேவவினை வேல்எடுத்து விடு வாயோ.
(எந்த வினை...)

சந்த மெழப் பாடிடுவார்
சிந்தை மகிழ்ந் தாடிடுவார்
கந்த னுனைக் கூடிடுவார் மகிழ்ச்சி யிலே - உமையாள்
மைந்த னுனைச் சொந்தமென்பார் புகழ்ச்சியிலே
(எந்த வினை...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## குறைகேட்டால் போதும்

நீயல்லால் யாருமில்லை முருகா – எங்கும்
நிகரில்லா அருள்வேலா குமரா
வாயல்லால் வார்த்தையில்லை முருகா – உன்னை
வணங்காத நாளில்லை முருகா

(நீயல்லால்....)

சிறைமீட்ட கடவுள்நீ முருகா – பிரம்மனைச்
சிறைவைத்த கடவுளும்நீ முருகா
குறைகேட்டால் போதுமெழில்க் குமரா – வேறு
குறையில்லை வவுனியாவில் குடியிருக்குங்குமரா

(நீயல்லால்....)

திருச்செந்தூர் தனிலிருந்து வந்தாய் – வவுனியா
திருக்கோயில் தனிலமர்ந்து கொண்டாய்
அருச்சனைகள் பூசனைகள் ஏற்பாய் – எம்மை
ஆளாக்கி வழிகாட்டிக் காப்பாய்

(நீயல்லால்....)

எத்தனையோ கோயிலுண்டு முருகா – உனக்கு
எத்தனையோ பக்தருண்டு முருகா
அத்தனைபேர் துயர்களையும் போக்கும் – உனது
ஆற்றலுக்கு அளவுமுண்டோ முருகா.

(நீயல்லால்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வவுனியா நகர்வாழும் திருமுருகா

### பல்லவி

வவுனியா நகர் வாழும் திரு முருகா – இந்த
வையகம் முழு தாளும் ஒரு முருகா

### அனுபல்லவி

அவனியில் உனைப்போலோர் தெய்வமுண்டோ – உன்னை
அடைந்தவர்க் கென்றேனும் துன்பமுண்டோ

(வவுனியா...)

### சரணம்

நல்லையில் அலங்காரக் கந்தனும் நீ – செல்லச்
சன்னதி அன்னதானக் கந்தனும் நீ
எல்லையில் லாதபுகழ் கொண்டவன் நீ – மண்டூர்
இருந்தர சாளுகின்ற இறைவனும் நீ

(வவுனியா...)

மாவிட்ட புரந்தன்னில் அபிஷேகமும் – கதிர
மலையினில் மௌனமொழி மந்திரமும்
நாவிட்டு அருணகிரி நவின்றபல – தமிழ்
நல்லதிருப் புகழ்களையும் கொண்டவன் நீ

(வவுனியா...)

முல்லைமன்னார் கிளிநொச்சிப் பதிகளிலும் – கிழக்கு
மூத்ததிருப் பதிகளென பலவற்றிலும்
கொழும்பனு ராதபுரம் மலையகத்தும் – வந்து
கோயில்கொண்டு அருள்புரியும் கந்தனும் நீ

(வவுனியா...)

அறுபடை வீடுகளில் அமர்ந்தவன் நீ – இந்த
அடியவன் மனதினிலும் உறைபவன் நீ
கருவடை யாமலெமைக் காத்திடுவாய் – வவுனியா
கந்தனே எமைஉன்னில் சேர்த்திடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மண்ணவரைக் காப்பதொரு வேலையா

**பல்லவி**

விண்ணவரைக் காக்கவந்த வேலையா – வன்னி
மண்ணவரைக் காப்பதொரு வேலையா?

**அனுபல்லவி**

கண்கவரும் ஆலயத்தில் குடியிருக்கும் – வவுனியாக்
கந்தசாமிப் பெருமானே கேளையா

**சரணம்**

விண்ணவரைக் காப்பதற்கு விழி திறந்தாய் – சூரரை
வெற்றிகொண்டு தேவர்கட்கு வழி திறந்தாய்
மண்ணவரைக் காப்பதற்கு மண்ணில் வந்தாய் – வவுனியா
மண்ணில்வந்து நகரினிலே குடி யிருந்தாய்.

(விண்ணவரைக்.....)

பன்னிரண்டு விழிதிறக்கத் தேவை இல்லை – நாங்கள்
பண்ணியது தேவர்கள்போல் பாவம் இல்லை
உன்னிரண்டு விழிதிறந்தால் போதும் ஐயா – எங்கள்
உள்ளத்திலே குடியிருக்கும் வேலு ஐயா

(விண்ணவரைக்.....)

என்னவினை செய்தோமோ நாம் அறியோம் - உந்தன்
எண்ணமன்றி வேறெதுவும் நாம்அறியோம்
பன்னிரண்டு தோள்கொண்டு தாங்கி விடு – எங்கள்
பாவங்களை வேரோடு வாங்கி விடு

(விண்ணவரைக்.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வேல்பிடித்து நின்றவனே

### பல்லவி

வேல்பிடித்து நின்றவனே வேலையா – உந்தன்
கால்பிடித்தோம் காத்தருள்வாய் கந்தையா

### அனுபல்லவி

சேல்பிடித்த கண்ணழகி வள்ளியம்மை – இரு
கால்பிடித்த கந்தமுரு கேசையா

(வேல்பிடித்து....)

### சரணம்

நூல்படித்தோம் ஆனாலும் புரியவில்லை – புல்
நுனியளவும் உன்பெருமை தெரியவில்லை
ஆல்அளவின் பெருமைகளை அருகிருக்கும் – சிறு
அறுகளவால் அளவிடவும் முடிவதுண்டோ

(வேல்பிடித்து....)

பாவலர்க்கு எளியவனே முருகையா – ஔவைப்
பாட்டிதமிழ் கேட்டவனே முருகையா
காவலுக்கு வேறுஇல்லை கந்தையா – வவுனியாக்
கந்தசாமிப் பெருமானே காத்திடையா

(வேல்பிடித்து....)

நகருக்கு மத்தியிலே அமர்ந்துகொண்டாய் – உன்னை
நம்பிவந்தோர் இதயத்திலே கோயில்கொண்டாய்
நிகருக்கு யாருமில்லா நிர்மலனே – எமக்கு
நீஅல்லால் தெய்வமில்லை நீஅருளே

(வேல்பிடித்து....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கலை சிறந்த வவுனியாக் கந்தன்

### பல்லவி

சூர ரை வதைத்த சுப்ர மணிய னை வணங்கு வோம்
சூல பாணி யான சிவன் குமர னை வணங்கு வோம்

### அனுபல்லவி

கால னை உதைத்த சிவன் கண்ணில் தோன்றி வளர்ந்த எங்கள்
கந்த னைக் கடம்ப னைக் கார்த்தி கேயன் முருகன் என்னும்

(சூர ரை....)

### சரணம்

தினைப் புனத்தை நாடிச் சென்று சீர் இளமைத் தோற்றம் மாற்றி
களிப்பி னோடு வள்ளி அம்மை கரம் பிடித்த கந்த னை
நினைப்பி லென்றும் நிறுத்தி அன்பு நெஞ்ச மெங்கும் பெரு கிட
நேய உணர் வொன்றி உயிர் நின்று நின்று கலங் கிட

(சூர ரை....)

கடல் சுவற வேலை விட்ட கந்த வேளின் கால் களை
கண்ணில் சூடி மகிழு வோம் கருத்தில் போற்றி வணங்கு வோம்
உடல் பதற ஓடி வந்த வள்ளி அம்மைக் கருள் செய்த
உமை குமாரன் முருக வேளை உள்ளம் குளிர வணங்கு வோம்

(சூர ரை....)

மலை சிதற வேல் எறிந்த மன்று ளாடி மைந்த னை
மனதில் என்றும் போற்று வோம் மகிழ்ந்து கைகள் கூப்பு வோம்
கலை சிறந்த வவுனி யாவின் நகரில் வாழும் கந்தன் பாதம்
கால மெல்லாம் காவல் என்று கண்ணில் வைத்துப் போற்று வோம்

(சூர ரை....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வா என்று அழைத்தால்

### பல்லவி

வா என்று அழைத்தால்
வந்து நிற்பான் – வன்னி
வவுனியா நகர் வாழும்
வள்ளி மண வாளன்

(வா என்று .....)

### அனுபல்லவி

வா என்று அழைத்து வள்ளி
மலர்க்கரம் பற்றியவன்
கா என்று அடியவர்கள்
கைகளைக் கூப்பி நின்று

(வா என்று .....)

### சரணம்

தா என்று கேட்பவர்க்கு
தன்னையே தரும் கடவுள்
பா ஒன்று பாடிநின்றால்
பரவசம் அடையும் அவன்

(வா என்று .....)

மா ஒன்று விழஎறிந்தோன்
மலர்களில் தவழ்ந்து வந்தோன்
ஆ என்று அசுரர்விழ
அமரரைக் காத்த குகன்

(வா என்று .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## நல்லை நகருறைகின்ற

வேளையிது தானென்று
வேலையொரு கைக்கொண்டு
வேலவன் எனநின்றவா – வெற்றி
வேலவன் எனநின்றவா
வேழமொடு நேர்சென்று
வேளம்பு மெய்கொண்டு
வேல்விழி துணைகொண்டவா – வள்ளி
காதலன் எனநின்றவா

தொங்குமுடல் மந்தஒளி
தொடர்ந்துவரும் எமனிடமே
தோல்வியுறா வண்ணமெந்தன் – உயிர்
வாங்கியவன் செல்லுமுன்னர்
தொல்லைதரு வினைகளறு
நல்லைநகர் உறைகின்ற
நடராச மைந்தன்குகனே – தில்லை
நடராச மைந்தன்குகனே

அமரர்க்குத் துணையாகி
அயராத துயர்தீர்க்க
அழித்தவன் நீயல்லவா – அபயம்
அளித்தவன் நீயல்லவா

அல்லலுறும் எனதுமனம்
அமைதிபெற வழிதந்து
அழைத்திடாய் அமரரேறே – அரு
கழைத்திடாய் அமரரேறே

நன்றி : இந்துநெறி (யாழ் பல்கலைக்கழக இந்துமன்ற வெளியீடு – 1978)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கள்ளிக்குளம் கிருஷ்ணர்

கிருஷ்ண பெரு மானே – எங்கள் கிருஷ்ண பெரு மானே
கள்ளிக் குளத்தில் குடி யிருக்கும் கிருஷ்ண பெரு மானே
(கிருஷ்ண பெருமானே....)

கவலை யெல்லாம் தீர்த்தருளும் கிருஷ்ண பெரு மானே – உன்
கால டியைப் பணிந்து நின்றோம் கிருஷ்ண பெரு மானே

அள்ளி அள்ளி வெண்ணெய் உண்ட கிருஷ்ண பெரு மானே – அன்று
ஆயர் பாடி தனில் வளர்ந்த கிருஷ்ண பெரு மானே

செவி குளிர குழல் இசைத்த கிருஷ்ண பெரு மானே – உந்தன்
குழல் கேட்க விரும்பு கின்றோம் கிருஷ்ண பெரு மானே

வவுனி யாவின் வட கிழக்கில் கிருஷ்ண பெரு மானே – நீ
வந் தமர்ந்தாய் கோயில் கொண்டு கிருஷ்ண பெரு மானே

மா மடுவாம் குளத்தின் கீழே கிருஷ்ண பெரு மானே – நீ
மகிழ் வாகக் கோயில் கொண்டாய் கிருஷ்ண பெரு மானே

வயல் விதைப்போம் தோட்டம் செய்வோம் கிருஷ்ண பெருமானே – எங்கள்
வாழ்க்கையை நீ காக்க வேண்டும் கிருஷ்ண பெரு மானே

மலை எடுத்துக் குடை பிடித்த கிருஷ்ண பெருமானே – நாங்கள்
தலை எடுக்க அருள் புரிவாய் கிருஷ்ண பெரு மானே
(கிருஷ்ண பெருமானே....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## திருமலை நிலாவெளி பொற்கோவில்

### பல்லவி

திருமலையின் நிலாவெளியில் திகழுமொரு பொற்கோயில் – அது
தீராத வினைதீர்க்கும் நாராயணன் கோயில்

(திருமலையின் ....)

### அனுபல்லவி

லக்சுமி நாராயணராய் நமக்கெல்லாம் அருள்வழங்க
உத்தம ராந்திருமால் உவந்திருக்கும் பொற்கோவில்

(திருமலையின் ....)

### சரணம்

பார்த்தனுக்குச் சாரதியாய்ப் பாரதப்போர் நடத்தியவர்
பார்பதியின் அண்ணனென பார்போற்றும் கண்ணனவர்
வார்த்தைகளுக் கெட்டாத வடிவழகாய் அமைந்திருக்கும்
வண்ணத்திருக் கோவிலிலே வந்தமர்ந்தார் வாருங்கள்

(திருமலையின் ....)

உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் உத்தமமாம் கோவிலிலே
உலகத்தைக் காக்கவந்து உத்தமனார் அமர்ந்துகொண்டார்
செல்வத்தைத் தருபவளாம் தேவிலக்ஸ்மி சமேதராக
தேசத்தை அளந்ததிரு மாலவனார் குடியமர்ந்தார்

(திருமலையின் ....)

பத்துஅவ தாரங்கொள்ளும் பரந்தாமன் இங்குவந்து
பக்தர்களைக் காக்கவென்று பக்குவமாய் அமர்ந்துகொண்டார்
சொத்துசுகம் வளம்பெருகும் சொந்தபந்தம் ஆதரிக்கும்
சொர்ணமய மானகோயில் சுற்றிவந்தால் அருள்கிடைக்கும்.

(திருமலையின் ....)

பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாம னாந்திருமால்
பாஞ்சாலி மானங்காக்கப் பலப்பலவாய்ச் சேலைதந்தார்.
நாங்காணத் திருமலையின் நிலாவெளியில் கோயில்கொண்ட
நாராயணன் அவரை நாம்வணங்கி அருள்பெறுவோம்

(திருமலையின் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கோயில்க்குளம் கண்ணபிரான்

கோயில்க் குளத்தில் கோயில் கொண்ட கண்ண பிரானே – எங்கள்
குறைகள் எல்லாம் தீர்த்தருளும் கண்ண பிரானே
நாவி னிக்கப் பாடிவந்தார் அடியவ ரெல்லாம் – அவர்க்கு
நல்ல ருளைப் புரிந்தவரே கண்ண பிரானே

(கோயில்க் .....)

**வேறு**

சீதேவி பூதேவி சமேத ராய் இன்று
திருமாலாய் விஷ்ணு கோவில் தன்னிலமர்ந்தாய்
மாதவனாய் பாரதப்போர் நடத்தி முடித்தாய்
மகாவிஷ்ணு அவதாரம் என்று திகழ்ந்தாய்

(கோயில்க் .....)

பாஞ்சாலி கற்பைக் காக்கச் சேலை கொடுத்தாய்
பார்த்தனுக்குக் கீதைசொல்லிக் காலைக் கொடுத்தாய்
வாஞ்சை யோடு வழிபடுவோர் வாழ்வு துலங்க
வற்றாத அருள்பொழிந்து வாழ்வினைத் தந்தாய்

(கோயில்க் .....)

கோகுலத்தில் நீ புரிந்த லீலை கொஞ்சமோ
கோவர்த்தனம் எடுத்தவலிமை சொல்ல வல்லமோ
நாகத்தையே அடக்கி அதில் நடனமும் செய்தாய்
நரகாசுரன் தனைவதைத்து நல்லருள் செய்தாய்

(கோயில்க் .....)

உரலிழுத்து மரு திரண்டை முறித்து வீழ்த்தினாய்
உறியிருந்த வெண்ணெய்ப்பானை உடைத்து வீழ்த்தினாய்
கரத்தினாலே கம்சன் உயிர் பறித்து வீழ்த்தினாய்
கடுஞ்சிறையில் இருந்துமீட்டுப் பெற்றோரைக் காத்தாய்

(கோயில்க் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## உடப்பு பார்த்தசாரதி

பார்த்தனுக்குச் சாரதியாம் பரந் தாமன் – வந்து
பார்த்தசா ரதியாக அமர்ந்து கொண்டான்
பார்த்தவர்க்கு அருள்புரிய சிலா பத்திலே – நல்ல
பக்குவமாய் கோயில் கொண்டான் உடப்பூரில்

(பார்த்தனுக்கு ....)

திரௌபதி அம்மன்கோயில் எனும் பெயரில் – இந்தத்
தேசமெல்லாம் புகழ் விளங்கும் கோயிலிலே
தீராத விளையாட்டுச் செய்யுங் கண்ணன் – வந்து
சிலாபத்து உடப்பூரில் கோயில் கொண்டான்

(பார்த்தனுக்கு ....)

உரகபடம் மீதில்துள்ளி குதித்த கண்ணன் – வந்து
உத்தமமாய்க் கோயில் கொண்டான் உடப்பூரில்
கரகாட்டம் ஆடிவந்து கத்தி வீச – அந்தக்
கத்தியினை நிறுத்திவைப்பான் கண்ண பிரான்

(பார்த்தனுக்கு ....)

பாஞ்சாலி கைகூப்பிக் கதறி அழ – அன்று
பல்லா யிரஞ்சேலை கொடுத்த கண்ணன்
வாஞ்சையோடு அருளு கின்றான் வாருங்கள் – உங்கள்
வம்ச மெல்லாம் தழைத்தோங்கும் வணங்குங்கள்

(பார்த்தனுக்கு ....)

பூமிதித்துப் போவதுபோல் பக்த ரெல்லாம் – வந்து
தீ மிதித்துப் போவார்கள் கோயிலிலே
தா மதித்து நில்லாமல் வாருங்கள் – கண்ணன்
தான் மதித்து அருள்புரிவான் நம்புங்கள்

(பார்த்தனுக்கு ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பம்பைமடு நரசிங்கர்

பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமா – நீ
பக்தருக்கு அருள் செய்ய மறந்தாயா?
போற்றியுன்னை வணங்கி நின்ற பிரகலாதன் – துயர்
போக்கநர சிங்க மான அருளாளா.

(பாற்கடலில் ....)

நாற்றிசையும் நோய் மலிந்து நலிவாகும் – நிலை
நல்ல தென்று நீகருதித் துயின்றாயா?
போற்றியுன்னை வணங்கு கின்றோம் பூபாலா – இந்தப்
பூமியினைக் காக்க எழுந் தருளாயா?

(பாற்கடலில் ....)

பம்பைமடுப் பதி வாழும் நரசிங்கா – பக்தர்
படையலிட்டோம் பொங்க லிட்டோம் பரந்தாமா
நம்மைமட்டும் காக்கவல்ல நர சிங்கா – இந்த
நானிலத்தைக் காக்க வேண்டும் நரசிங்கா.

(பாற்கடலில் ....)

புளியமர நிழலிருந்தாய் முன் னாளில் – உனக்குப்
புதுக்கோவில் அமைத்துத் தந்தோம் புவிநாதா
எளியவனாய் அடியவர்க்கு வழி காட்டும் – எங்கள்
இன்னமுதே நரசிங்கா எமைக் காப்பாய்.

(பாற்கடலில் ....)

இரணியனை அழித்ததுபோல் இக் கொடிய – கொரோனா
இராக்கதனை அழிக்க வேண்டும் நரசிங்கா.
தரணியினைக் காப்பதுந்தன் கடமை யன்றோ – இன்னும்
தாமதமேன் எழுந்தருள்வாய் நர சிங்கா

(பாற்கடலில் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பூந்தோட்டம் நரசிங்கர்

பத்து அவ தாரங் கொள்ளும் பரந்தாமன் – தன்
பக்தர் களைக் காக்க வந்த அவதாரம்
இத் தரையில் ஒழுங்கு நிலை காத்திடவே – மகாவிஷ்ணு
எடுத்த அவ தாரம் நரசிங்க அவதாரம்

(பத்து .....)

பிரக லாதன் வேண்டு தலை நிறைவேற்ற – அவன்
பிதா வான இரணியனை வதம் செய்ய
உரக அணை அறி துயில்கொள் உத்தமனார் – அன்று
உருக் கொண்டார் தூணினிலே நர சிங்கராய்

(பத்து .....)

எங்கே யடா இருக்கின்றான் உன் அரிதான் – இங்கே
எனக் கவன்னக் காட்டென்றான் இரணியன் தான்
இங்கே இத் தூணிலுமே இருக் கின்றான் – அவன்
இல் லாத இடமில்லைக் காண் என்றான்

தூணி னிலும் இருக் கின்றான் எங்கள்அரி – சிறு
துரும் பினிலும் இருக்கின்றான் என்ப தறி
காண்க என்றான் பிரகலாதன், கோபங் கொண்டு – தன்
கதை யினாலே இரணியனும் தூணை அடித்தான்

நர சிங்க மாக விஷ்ணு தோன்றினாரே – பல்லை
நற நற வென்றே கடித்துத் தூக்கினாரே
இர ணியனின் உடலினையே கிழித்துப் பிளந்தார்
இந் திரனும் மகிழ்ச்சிகொள்ளக் கொன்று வீழ்த்தினார்

உலகு புகழ் வவுனியா பூந் தோட்டத்திலே – இந்த
ஊரெல் லாம் போற்றவந்து கோயில் கொண்டார்
அலகு குத்திக் காவடிகள் ஆடி வந்து – அங்கே
அடிய வர்கள் பொங்கல் வைத்துப் படையலிட்டார்

(பத்து .....)

நர சிங்கர் ஆலயத்தை நாடி டுவோம் – அங்கு
நாமொன் றாய்ப் பொங்கி மகிழ்ந் தாடிடுவோம்
செவி குளிர அவர் புகழைப் பாடிடுவோம் – நாங்கள்
செய் தொழில்கள் வெற்றி பெற வேண்டிடுவோம்

(பத்து .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தாண்டிக்குளம் ஐயனாரப்பா

ஆல மரத்தின் கீழமர்ந்த ஐயனாரப்பா - இன்று
ஆல யத்தில் குடியிருக்கும் ஐயனாரப்பா
சூழ மனை புகையிரத நிலையத்தோடு - நல்ல
விளை யாட்டு மைதானம்சேர்ந்த ஐயனாரப்பா

(ஆலமரத்தின் .......)

மோகினி யாய் அன்றுவிஷ்ணு வடிவமெடுக்க - அவரில்
மோகங் கொண்டு அசுரரெல்லாம் அவரைவளைக்க
காம மயக் கோடசுரர் சண்டைபிடிக்க - வந்த
சங்கரனைக் கூடியதால் அங்கு தோன்றினாய்

அரி அர புத்திரனே ஐயனாரப்பா - எங்கள்
அன்புப் பெரு வடிவே ஐயனாரப்பா
சரி வர உன்பூசை செய்பவருக்கு - என்றும்
சகல போகங் களும்வழங்கும் ஐயனாரப்பா

(ஆலமரத்தின் .......)

தாண்டிக்குளம் பதியினிலே யாழ்வீதி மேற்கினிலே
வீதி ஓரக் கோயிலிலே எழுந்தருளி - என்றும்
வேண்டியவர் வினைகள் தீர்க்கும் ஐயனாரப்பா - எமக்கு
வேண்டும் வரம் தருபவரே ஐயனாரப்பா

(ஆலமரத்தின் .......)

ஊரார்கள் வழிபடவே ஒருகல்லு வைத்தார் - இன்று
உருவான கோவில்கண்டு உள்ளம்மகிழ் வுற்றார்
நேரான புகையிரத நிலையத்தின் மேற்கே - நல்ல
நிழலான இடத் தமர்ந்தாய் ஐயனாரப்பா

(ஆலமரத்தின் .......)

ஏழை விவ சாயிகளின் காவலன்நீயே - என்றும்
எங்கள் வவுனி யாமண்ணின் காவலும்உனதே
வாழை இளங் குருத்தெனவே நாங்கள்வளர - எமக்கு
வழி காட்டி அருள்கூட்டும் ஐயனாரப்பா

(ஆலமரத்தின் .......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சூல அசைவினிலே....

**பல்லவி**

ஞான வயிர வரின் பாதம் பணி பவர்கள்
நல்ல மகிழ் வுடனே வாழ்ந் திடுவார் - வவுனியா

(ஞான வயிர....)

**அனுபல்லவி**

ஆல மரத் தடியில் அமர்ந்த வயி ரவரின்
சூல அசை வினிலே துன்பங்கள் ஓடி விடும் - வவுனியா

(ஞான வயிர....)

**சரணம்**

இரண்டாங் குறுக்கு வீதி
இருப்பிட மாய்அமர்ந்து
இணையிலா அருள் வழங்கும்
எங்கள் கடவுள் ஸ்ரீ

(ஞான வயிர....)

நகருக்குக் காவல் தரும்
நல்ல கடவுள், என்றும்
நமக்கெல்லாம் வாழ்வு தரும்
நாய்வா கனக் கடவுள்

(ஞான வயிர....)

அகந்தையை அழித் திடுவார்.
ஆக்கத்தைக் கொடுத் திடுவார்.
உகந்ததோர் வாழ்வு தந்து
உலகத்தில் வாழ வைப்பார்

(ஞான வயிர....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வைரவ புளியங்குளம் ஞான வைரவர்

**பல்லவி**

ஞான வைரவரே - என்றும்
நல்லருள் தருபவரே

(ஞான வைரவரே ....)

**அனுபல்லவி**

மோன பரம் பொருளில்
முகிழ்த்த பெரும் பொருளே

(ஞான வைரவரே ....)

**சரணம்**

வவுனியா நகரின் மிக்க
பழமை மிகுந் தவரே
கவனியா திருப்பா ருண்டோ
கருணை செய்யும் எங்கள்

(ஞான வைரவரே ....)

வைரவ புளியங் குளம்
வாழ்விட மாகக் கொண்டு
வருடங்கள் பல நூறாய்
வாழ்ந்து வரும் எங்கள்

(ஞான வைரவரே ....)

காத் திடும் கடவுளாக
காவல்த் தெய்வம் என்று
சாத் திரங்கள் பேசும்
சர்வ வல்லமை கொண்டுள்ள

(ஞான வைரவரே ....)

நாயினை வா கனமாய்
நயந்தரு கினிலே வைத்து
பேயினை சூனி யத்தை
பிறவினை வராமற் காக்கும்

(ஞான வைரவரே ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தவசிகுளம் ஞான வைரவர்

### பல்லவி

ஞான வைரவரே நவ நிதியே – தவசிகுளம்
ஞான வைரவரே நவ நிதியே

### அனுபல்லவி

நாவல் மரத்தடியில் எழுந் தருளி – நமக்கு
நல்வழி காட்டுகின்ற குண நிதியே

(ஞான வைரவரே ....)

### சரணம்

வவுனியா தவசிகுளம் வாழ்விட மாகக் கொண்டு
அவனியை வாழவைக்கும் அரும்பெருந் தெய்வம் நீயே
நாயினை வாகனமாய் நயந்துநீ ஏற்றுக் கொண்டாய்
தாயினைப் போல்நமக்கு நல்லதோர் காவல் கொண்டாய்

(ஞான வைரவரே ....)

குளம்வயல் குடி மனைகள் சூழ்ந்திருக்கும் பதியில்
கோயில் கொண் டிருக்கின்ற குலதெய்வம் நீஅல்லவோ
சாமுண்டி சமேத ராக தவசிகுளம் அமர்ந்து
நாமுண்டு வாழ் வதற்கே நல்லருளை வழங்கும்

(ஞான வைரவரே ....)

சூலத்தைக் கையில் ஏந்தும் சுந்தரப் பெருவடிவே
ஞாலத்தைக் காத்து நிற்கும் ஞான வைரவரே
ஆலத்தை உண்டசிவன் எடுத்த அருள் உருவே
அனைத்து உலகுங் காக்கும் அருள்ஞான வைரவரே

(ஞான வைரவரே ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வேப்பங்குளம் ஞான வைரவர்

**பல்லவி**

ஞான வைர வரே நலம் அருள்வாய் - இந்த
ஞாலம் உயர்வுபெற நமக்கருள்வாய்

(ஞான வைரவரே ....)

**அனுபல்லவி**

மோனப் பரம் பொருளின் முழு வடிவே - அலை
மோதும் பவக் கடலின் தனியமுதே.

(ஞான வைரவரே ....)

**சரணம்**

கர்வத்தை அடக்கிடவே உதித்தவரே - பிரமன்
கபாலத்தில் இரத்தப்பலி ஏற்றவரே
உருவத்தைக் கண்டுதேவர் அஞ்சிடவே - ஞான
உருவினில் காட்சிதந்த உத்தமரே.

(ஞான வைரவரே ....)

சிவனின் ஒருவடிவாய் உதித்தவரே - என்றும்
சிறப்பாய் கோவிலெல்லாம் காப்பவரே
அயனின் செருக்கழித்த ஆற்றலரே - தன்னை
அடைந்தோர் துயர்தீர்க்கும் அற்புதரே

(ஞான வைரவரே ....)

நன்றி மிகுந்ததொரு நாயினையே - என்றும்
நல்ல வாகனமாய்க் கொள்பவரே
குன்றி மணியனைய நிறத்தவரே - இருள்
குவிந்த நிறச்சட்டை அணிபவரே

(ஞான வைரவரே ....)

அடியவர் **நாகேந்திரம்** கோயிலமைத்தார் - அங்கு
அறுபத்து மூவருக்கும் சிலைகளமைத்தார்
நெடிய பெரியதொரு உருவமும்வைத்தார் - நீ
நின்று உலாப்போக தேருமமைத்தார்

(ஞான வைரவரே ....)

வேப்பங் குளத்தில்வந்து அமர்ந்தவரே - உயர்
வேதப் பரம்பொருளின் திருவுருவே
காப்பு நிலையெடுத்த கடவுளென்றே - நாங்கள்
கூப்பி கரங்குவித்தோம் காத்தருளே.

(ஞான வைரவரே ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## உப்புவெளியினிலே முருகா புரியினிலே

உப்பு வெளியினிலே முருகா புரியினிலே
உவந்து குடியிருக்கும் வைரவா – ஞான வைரவா
உனைத் துதிக்கும் அடியவர்க்கு ஒருகுறைதான் வருவதா
வைரவா – ஞான வைரவா

(உப்பு வெளியினிலே....)

தப்பு தவறு செய்தால் தண்டிப்பதோ உன்கடன்
தர்மமில்லை முருகாபுரி வைரவா – ஞானவைரவா
எப்பொழுதும் எங்களை காப்பதன்றோ உன்கடன்
வைரவா – ஞானவைரவா

(உப்புவெளியினிலே....)

**வேறு**

திருகோண மலையினிலே கோணேசர் மாதுமையும்
கருணையோடு அருளுகிறார் அல்லவா – அங்கே
அருகிருக்கும் காளியம்பாள் அடியவரை அனுதினமும்
அன்போடு ஆதரிப்ப தில்லையா?

(உப்பு வெளியினிலே....)

**வேறு**

வம்சத்துக்கே குலதெய்வம் வைரவரே நீ தானே
வம்சத்தினை வளரவிடு வைரவா – உன்
வாசலிலே தவழவிடு வைரவா – ஞானவைரவா

(உப்பு வெளியினிலே....)

**வேறு**

உன்னடியைத் தொழுவதற்கும் உனக்குத் தீபம் ஏற்றுதற்கும்
என்வழியில் வாரிசுகள் வேண்டுமே – இதற்கு
எனக்குஉந்தன் அருட்பார்வை வேண்டுமே

(உப்புவெளியினிலே....)

**வேறு**

உன் கோயில் சன்னிதியில் உனைப் புகழ்ந்து பாடுதற்கும்
உன் வாசல் கல்லினிலே உனக்குத் தேங்காய் உடைப்பதற்கும்
எம்மகட்குப் பிள்ளையொன்று வேண்டுமே – உனக்கு
உரிமையோடு பூப் போட்டு உணர் வோடு வழிபடற்கு
ஒருகுறையில் லாதவம்சம் வேண்டுமே

(உப்பு வெளியினிலே....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பம்பைமடு வைரவா

பம்பைமடு வைரவா பார்த்திடையா எங்களை
நம்பினோமே உன்னையே நமதுபக்தி உண்மையே

(பம்பைமடு....)

குலதெய்வம் நீ என்றோம்
குறையில்லாமல் காத்திட்டாய்
குலம் வளர்ந்து பெருகாவிட்டால்
குல தெய்வம் ஏனையா

(பம்பைமடு....)

அம்மாள் அருகில் வீற்றிருந்து
அருள்புரியும் வைரவா
சும்மா என்னைத் துன்புறுத்தல்
சுகமோ உனக்கு சொல்லையா

(பம்பைமடு....)

என்னைக் காத்த கடவுள் நீ
என்ப துண்மை என்பதால்
உன்னைக் கேட்டேன் சந்ததி
எம்மகட்கு அருள் செய்வாய்.

(பம்பைமடு....)

உன்னால் முடியா தொன்றில்லை
உனக்குத் தெரியா தொன்றில்லை
என்னால் பொறுக்க முடியாது
என்ப தாலே முறையிட்டேன்.

(பம்பைமடு....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## முருகா உன் லீலை

முருகா உன் லீலை எல்லாம் பொய்யா - உன்னை
முழுதாக நம்பியதும் பொய்யா
கருவாய் என் பரம்பரைக்கு வாராய் - மகள்
கர்ப்பத்திலே நீவந்து சேராய்

(முருகா....)

**வேறு**

புராணம் படிக்க ஒரு பிள்ளை - கந்த
புராணம் படிக்க ஒரு பிள்ளை - எந்தன்
வாரிசென வேண்டாமா சொல்லாய்
பரனே என நினைந்து நானும் - உன்னைப்
பாடிப் பரவிட வேண்டாமா

(முருகா....)

உன்புகழைப் பாடிட வேண் டாமா - தந்தை
உருத்திரரைப் பாடவும் வேண் டாமா
அன்பொடுஉன் தாய் உமையாள் பாதம் - நான்
அர்ச்சனைசெய் திடலும் ஆகாதா

(முருகா....)

உன்னண்ணன் விநாய கரின் புராணம் - நான்
உள்ளன்போடு உருப் போட்டேன் வீணா
வைரவராம் எங்கள் குல தெய்வம் - எனக்கு
வரமருள மாட்டாதா முருகா

(முருகா....)

அம்மாளாச்சி என்றே நாம் வணங்கும் - எங்கள்
ஆதிபரா சக்தி அருளாளா
சும்மா என்னை நீ விடுவிப்பாயா - இல்லை
தொடர்ந்துமுன்னைப் பாடச்செய் வாயா

(முருகா....)

என்பணியை நான் செய்ய விடுவாய் - நான்
என்றுமுனைப் பாட அருள் தருவாய்
உன்பணியைத் தடுக் காதே முருகா - என்மேல்
உளமிரங்கி அருள் செய்வாய் முருகா

(முருகா....)

அத்திமுகன் தம்பி என்னும் முருகா - என்னை
**ஆத்திகனாய்** வைத் திருப்பாய் முருகா
பத்திசெய்து நான் பரவ வேண்டும் - உன்னைப்
பாடிக்கொண்டே நான் இறக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஜெயசித்தி விநாயகர்

### பல்லவி

வெற்றியெல்லாம் வழங்குகின்ற வேழமுக விநாயகரே
வேண்டும்வரந் தந்திடுவாய் **ஜெயசித்தி விநாயகரே**

(வெற்றியெல்லாம்....)

### அனுபல்லவி

இந்தியத் தமிழ்நாட்டின் எழில்மிகு **சென்னை**யிலே
சிந்தைமிக மகிழ்வுடனே **சேத்துப்பட்டில்** அமர்ந்திருக்கும்

(வெற்றியெல்லாம்....)

### சரணம்

வந்து உந்தன் தாள்பணிந்தோம்
வரம் அருள்வாய் விநாயகனே
சொந்த மெல்லாம் இங்குநீயே
சோகமெல்லாம் மாற்றி வைப்பாய்

(வெற்றியெல்லாம்....)

புத்திர வரம் வேண்டிப்
புறப்பட்டு இங்கு வந்தோம்
சித்திரச் சென்னை யிலே
சேத்துப் பட்டில் வீற்றிருந்து

(வெற்றியெல்லாம்....)

மகளுக்குப் பிள்ளை வேண்டி
மன்றாடித் தொழு கின்றோம்
மதயானை போன்ற திரு
முகயானை விநா யகரே

(வெற்றியெல்லாம்....)

கடல்தாண்டி இங்கு வந்தோம்
கவலைகளைக் கொண்டு வந்தோம்
குடம்போன்ற வயிறுகொண்டு
குளிர்நிழலில் அமர்ந் திருக்கும்

(வெற்றியெல்லாம்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பாழையத்தம்மா

பாழையத்தம்மா எங்கள் பாழையத்தம்மா
பாழையத்தம்மா எங்கள் பாழையத்தம்மா
**சென்னை** நகரிலே **சேத்துப்பட்டிலே**
சேர்ந்திருப்பவளே – எங்களைக்
காத்திருப்பவளே

(பாழையத்தம்மா....)

**வேறு**

அரச மரமும் வேப்ப மரமும்
அருகருகே சேர்ந்திருக்க
அவற்றின்கீழே அமர்ந்திருக்கும்

(பாழையத்தம்மா....)

பிள்ளை வரம் கேட்டு நிற்கும்
பேதையரைக் காத்தருளும்
அன்னையும்நீயே அருள்புரிதாயே

(பாழையத்தம்மா....)

**வேறு**

நாடுவிட்டு நாடுவந்தோம்
நம்பியுன்னைச் சரணடைந்தோம்
நல்லவழி காட்டிடுவாயே – நமக்கு
நாள்தோறும் துணைபுரிவாயே

(பாழையத்தம்மா....)

**வேறு**

பிள்ளையில்லா வாழ்வுமொரு
வாழ்வோநாம் உன்னுடைய
பிள்ளை களன்றோ – தாயே
பிழைபொறுத்து அருள்புரிவாயே

(பாழையத்தம்மா....)

**வேறு**

பிரசாந்தப் பிள்ளையார்க்கும்
கருக்காத்த அம்மனுக்கும்
வரமருளும் உனக்குமெங்கள் வணக்கம் – பிள்ளை
வர அருளி மகள்குறையைத் தீர்ப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கருக்காத்த அம்மன்

கருக்காத்த அம்மனே கருணைசெய்வாய் – என்மகள்
கருக்காத்து வளர்வதற்கு அருளைச்செய்வாய்

(கருக்காத்த....)

**சென்னை**மா நகரினிலே **சேத்துப்பட்டு** ஊரினிலே
உன்னையே வணங்கினோமே அம்மனே – எங்கள்
பிள்ளையின் கருவளரச் செய்வாயே

(கருக்காத்த....)

எத்தனை பேருன்னை ஏத்தித் தொழுதிடவும்
அத்தனை பேருக்கும் அருள் நீ செய்தாய் – எமக்கேன்
இத்தனை தாமதத்தை நீ செய்தாய்

(கருக்காத்த....)

நாடுவிட்டு நாடுவந்து நாங்கள் நலிவுற்று
பாடுபட்டு நிற்கிறோமே நீ பாராய் – பிள்ளைப்
பாக்கியம் மகள்பெறவே நீ தாராய்

(கருக்காத்த....)

என்னென்ன பாவங்கள் எவ்வெப்போ செய்தோமோ
என்னென்று தெரியவே இல்லையே – பிள்ளை
எம்மகட்கு இல்லையேல் தெய்வம் இல்லையே

(கருக்காத்த....)

நம்பியே பலருன்னை நாளும் துதிக்கின்றார்
அம்பிகே கருக்காத்த அம்மனே – உன்னை
நம்பினோம் கருக்காத்த அம்மனே.

(கருக்காத்த....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பிரசாந்தப் பிள்ளையாரே

பிர சாந்தப் பிள்ளை யாரே – பிள்ளைப்
பிர சாதம் அருளுவாயே

(பிரசாந்த....)

**இந்திய** நாட்டிலே **சென்னை**மா நகரிலே
இருந்திடும் சேத்துப்பட்டு ஊரினிலே
அழகான **ஹறிங்டன் சாலை** அருகிலே – **பிரசாந்**தெனும்
அரியதொரு மருத்துவ மனையிலே – இருக்கும்

(பிரசாந்த....)

**வேறு**

பிள்ளைவரம் வேண்டிவந்தோர் பெரும்துன்பம் அடைகிறாரே
உன்னைநம்பி வழிபடுவோர் துன்பத்தை – நீ
உடனடியாய்ப் போக்கி அருள் செய்திடாய்

(பிரசாந்தப்....)

ஆறாத வேதனையில் ஐங்கரனே உன்னைநம்பி
ஆராரோ வருகிறாரே பார்த்திடாய் – அவரின்
தீராத சோகங்களைத் தீர்த்திடாய்

(பிரசாந்தப்....)

என்மகளும் இங்குவந்து உன்னைநம்பி வணங்குகிறாள்
உன்கமலக் கண்திறந்து பார்த்திடாய் – பிள்ளை
அவட்குத்தந்து உன்னருளைக் காட்டிடாய்

(பிரசாந்தப்....)

முடியாத தொன்றில்லை முன்னவனே நீநினைத்தால்
அடியாரைக் காப்பதன்றோ உன்கடன் – பிள்ளை
அளிப்பதன்றோ ஐங்கரனேஉன்கடன்

(பிரசாந்தப்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சின்னத்தம்பனை ஸ்ரீ சித்திவிநாயகர் திரு ஊஞ்சற் பாமாலை

### காப்பு

வந்தாரை வாழவைக்கும் வன்னி மண்ணின்
வளமான விவசாயப் பூமி தன்னில்
சிந்தூர முகங்கொண்டு சிறந்து தோன்றும்
செட்டிகுளப் பகுதியிலே செழிப்பு மிக்க
செந்தாம ரைக்குளஞ்சேர் **சின்னத் தம்பனைச்**
**சித்திவிநா யகர்**மேலே ஊஞ்சற் பாடல்
தந்தாரைப் படித்தாரைக் கேட்டார் தம்மைத்
தந்திமுகன் அருள்பொழிந்து காப்பார் தானே.

### திரு ஊஞ்சல்

நால்வேதம் நல்லபெருந் தூண்கள் ஆக
நல்லபெருஞ் சாத்திரங்கள் மேற்தாம் பாக
நூல்களெனும் புராணங்கள் வடம தாக
நுட்பமிகு தத்துவங்கள் பலகை ஆக
பால்வேறு பாடின்றி உழைத்து வாழும்
பரம்பரையில் வந்தவர்கள் வாழும் நல்ல
சீலமிகு **சின்னத்தம் பனை**யில் வாழும்
**சித்திவிநா யகரே**மகிழ்ந்து ஆடீர் ஊஞ்சல். 1

சூரியசந் திரர்கள்வடம் பிடித்தே ஆட்டச்
சுக்கிரனும் குருவும்சோ பனங்கள் சொல்ல
காரியெனும் சனியோடு புதன் செவ்வாயும்
கரியதெனும் இராகுவொடு கேது சேர்ந்து
மாரியெனக் கட்டியங்கள் மகிழ்ந்து கூற
மக்களொடு தேவர்களும் மகிழ்ந்து போற்ற
சீரியநற் கோவிலுறை **சின்னத் தம்பனைச்**
**சித்திவிநா யகரே**மகிழ்ந்து ஆடீர் ஊஞ்சல் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மனொடு மகாவிஷ்ணு குடை பிடிக்கப்
பெருமையொடு இந்திரன் ஆலவட்டம் தூக்க
அரம்பையர்கள் இரண்டுபுறம் அழகாய் நின்று
அசைத்தசைத்துச் சாமரைகள் அழகாய் வீச
உரமேறி உழைப்பவர்கள் வாழும் நல்ல
உத்தமமாய் இயற்கைநலம் சிறந்து ஓங்கும்
சிரமான **சின்னத்தம்பனைக்** கோயில் வாழும்
**சித்திவிநா யகரே**மகிழ்ந்து ஆடீர் ஊஞ்சல். 3

சித்தரொடு ரிசிகளெல்லாம் வணங்கி நிற்கத்
தேவர்கிம் புருடர்கள் வாழ்த்துச் சொல்ல
சக்தியொடு சரஸ்வதியும் மாலை தூக்க
சயமாதும் இலக்குமியும் களித்து நிற்கப்
பக்தியொடு அடியார்கள் பலரும் சூழ்ந்து
பரவசமாய் வணங்குகின்ற கோயில் என்னும்
சித்திதரும் **சின்னத்தம்பனைக்** கோயில் வாழும்
**சித்திவிநா யகரே**மகிழ்ந்து ஆடீர் ஊஞ்சல். 4

பத்திரகா ளியம்மன் கிழக்கே சேரப்
பசுமைமிகு வயல்நிலங்கள் வளம் பெருக்க
உத்தமமாய்க் குடிமனைகள் ஏனைத் திக்கில்
ஒழுங்குமுறை வாழ்க்கையினை வாழ்ந்து கொள்ள
பத்திரமாய் எமைக்காக்கப் பாரில் வந்து
பாக்கியமாய் நம்மூரில் குடி யிருக்கும்
சித்தாகி வாழ்வுதரும் **சின்னத் தம்பனைச்**
**சித்திவிநா யகரே**மகிழ்ந்து ஆடீர் ஊஞ்சல் 5

தவில்நாதஸ் வரஒலியும் தாள மேள
தத்துவமாய் மழைமேக ஒலியும் பொங்க
எழில்மேவு மக்களெல்லாம் இனிய பாடல்
இசைத்திசைத்துக் கைகூப்பி இனிதாய்ப் பாட
பொழில்மேவு அழகுநிறை பதியில் வந்து
பொலிவோடு வீற்றிருந்து அருள் பாலிக்கும்
செழிப்பான **சின்னத்தம் பனையில்** வாழும்
**சித்திவிநா யகரே**மகிழ்ந்து ஆடீர் ஊஞ்சல். 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயிலிசையும் மயில்நடமும் குழுவாய் எங்கும்
குதூகலித்துத் திரிகின்ற பசுக்கூட் டங்கள்
வயல்நிலங்கள் தோட்டங்கள் வளமாய் மக்கள்
வாழ்கின்ற சொர்க்கமெனச் சொல்லும் நல்ல
இயல்பான வளம்நிறைந்த எங்கள் வன்னி
எழில்நகரில் ஒன்றாகச் சிறப்பு மிக்க
செயல்வீரர் நிறைந்திட்ட **சின்னத் தம்பனைச்**
**சித்திவிநா யகரே**மகிழ்ந்து ஆடீர் ஊஞ்சல். 7

வளமான **வன்னி**யெனும் மண்ணின் மிக்க
வளமான **செட்டிகுளம்** நகரைச் சேர்ந்த
அழகான கிராமமென அமைந்து நின்று
அனைவரையும் அரவணைக்கும் அரிய நல்ல
களமாக இருக்கின்ற கற்றோர் போற்றும்
கருதரிய **சின்னத்தம் பனை**ஊர் வாழும்
செழிப்பான தோற்றத்தில் அழகாய்த் தோன்றும்
**சித்திவிநா யகரே**மகிழ்ந்து ஆடீர் ஊஞ்சல். 8

தேன்வதைகள் பால்தயிர்கள் நெய்யும் மிக்க
தெவிட்டாத பழமரங்கள் வாழை தோடை
மான்மரைகள் முயல்உடும்பு பன்றி மற்றும்
மரங்களொடு மிருகங்கள் உயிர்க் கூட்டங்கள்
மீன்நிறைந்த குளங்களெல்லாம் பொருந்தி நிற்கும்
மிகப்பழைய வன்னியரின் ஆட்சி பெற்ற
சீர்நிறைந்த **சின்னத்தம் பனையில்** வாழும்
**சித்திவிநா யகரே**மகிழ்ந்து ஆடீர் ஊஞ்சல் 9

காற்றுக்கு அசைகின்ற இலைகள் போலக்
கர்மவினைக் காடுகின்ற பிறவி பெற்று
நாற்றுக்கள் ஆகிமண்ணில் நலிந்து நிற்கும்
நம்வினைகள் போக்கிடுவாய் என்றே நாளும்
நாற்றிக்கும் வாழுகின்ற அடியார் வேண்ட
நல்லவரம் அளிக்கின்ற நமது தேவே!
சீற்றங்கள் தனைப்போக்கும் **சின்னத் தம்பனைச்**
**சித்திவிநா யகரே**மகிழ்ந்து ஆடீர் ஊஞ்சல். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

திருநீறும் ஐந்தெழுத்தும் திகழ்ந்து வாழி
திருநிறைந்து இல்லமெல்லாம் செழித்து வாழி
அருவினைகள் எதுவுமின்றி உயர்ந்து வாழி
அடியவர்கள் தினந்தோறும் சிறந்து வாழி
பெருநீதி சைவநெறி பொலிந்து வாழி
புராணங்கள் இதிகாசம் கதைகள் வாழி
கருணையொடு **சின்னத்தம் பனை**யில் வாழும்
கணபதியே காலாதி காலம் வாழி.

## லாலி

லாலி லாலி லாலி லாலி
லாலி லாலி லாலி லாலி
கஜ முகனைச் சாய்த்தவரே லாலி லாலி
கண பதியாய் ஆனவரே லாலி லாலி
பவ நோயை மாய்ப்பவரே லாலி லாலி
பார் பதியார் பாலகரே லாலி லாலி
சிவ னார்க்கு மூத்தவரே லாலி லாலி
**சித்தி வி நாயகரே** லாலி லாலி.

## பராக்கு

பாரதத்தை மேருவிலே பதித்தாய் பராக்கு
பாதகத்தை வேரோடு பறித்தாய் பராக்கு
ஆரணத்து மூலவரே அழகே பராக்கு
ஆனைமுக வாரணரே அன்பே பராக்கு
வாரணத்து நாயகரே வாழ்வே பராக்கு
வணங்குமடி யார்பரனே வளமே பராக்கு
காரணமாய் நிற்பவரே கண்ணே பராக்கு
கருதரிய **சித்திவிநா யகரே** பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் – சுப
மங்களம் மங்களம் மங்களம்.

சித்தி விநாயகர்க்கு மங்களம் – தாய்
சீர்மல்கு பார்வதிக்கு மங்களம்
பக்தி மிகுந்தவர்க்கு மங்களம் – தந்தை
பரமனுக்கும் முருகனுக்கும் மங்களம்
சுத்தி இருப்போர்க்கு மங்களம் – என்றும்
சூழ்ந்திருக்கும் அடியவர்க்கும் மங்களம்.
சித்தி தருபவர்க்கு மங்களம் – நமது
**சின்னத்தம் பனை**யூர்க்கும் மங்களம்.

மங்களம் மங்களம் மங்களம் – சுப
மங்களம் மங்களம் மங்களம்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# புதுவிளாங்குளம் விளாங்குளேஸ்வரர்
# திரு ஊஞ்சற் பாமாலை

## காப்பு

வற்றாத வளம்மிக்க வன்னி மண்ணின்
    வவுனியா நகருக்கு வடமேற் காகப்
பொற்றா மரைக்குளங்கள் சூழ்ந்த மண்ணில்
    பொலிவான வயல்நிலங்கள் பொருந்தி நிற்க
கற்றாவைப் போலுள்ளம் கசிந்து நின்று
    கருணைபொழி **கௌரியம்பாள்** சமேத ரான
நற்றாயாம் **விளாங்குளேஸ்வரர்**மேல் ஊஞ்சல் பாட
    நல்லவிநா யகர்பாதம் காப்ப தாமே

## திருவூஞ்சல்

வேதங்கள் நான்குமே தூண்கள் ஆக
    விருத்திபெறு சாத்திரங்கள் கலைகள் மற்றும்
போதங்கள் புராணங்கள் மேற்தாம் பாகப்
    போற்றுகின்ற தத்துவங்கள் பலகை ஆக
பாதங்கள் பணிகின்ற அடியார்க் கென்றும்
    பவவினைகள் தீர்த்தருளும் பதியாய் எங்கும்
பூதங்கள் அனைத்திலுமே நிறைந்து நிற்கும்
    **புதுவிளாங் குளேஸ்வரரே** ஆடீர் ஊஞ்சல் 1

சூரியனும் சந்திரனும் வடம் பிடிக்கச்
    சுக்கிரனும் சற்குருவும் சுபங்கள் சொல்ல
காரியெனும் சனியோடு புதன் செவ்வாயும்
    கரியதெனும் இராகுவொடு கேது சேர்ந்து
மாரியெனக் கட்டியங்கள் மகிழ்ந்து கூற
    மக்களொடு தேவர்களும் மகிழ்ந்து போற்ற
சீரியநற் **புதுவிளாங் குளேஸ் வரரே**
    சிந்தைமகிழ்ந் தெழுந்தருளி ஆடீர் ஊஞ்சல் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமாலும் நான்முகனும் குடைகள் பற்றத்
 திருவளரும் இந்திரன் ஆலவட்டம் தூக்க
பெருமையுறு அரம்பையர் சாமரைகள் வீச
 பெரும்பேறாய் **புதுவிளாங் குளத்தில்** மேவி
அருமறைகள் போற்றிடவே ஆட்சி செய்யும்
 அழகான கோவிலிலே அமர்ந்து நாளும்
வருமடியார் குறைதீர்க்கும் **விளாங்குளேஸ் வரரே**
 வனப்போடு மகிழ்ந்தினிது ஆடீர் ஊஞ்சல் 3

ஞானிகளும் சித்தர்களும் வணங்கி நிற்க
 நற்தேவர் கிம்புருடர் நலன்கள் சொல்ல
வாணியொடு திருமகளும் மாலை தூக்க
 வரமருளும் கௌரியம்மாள் களித்து நிற்க
காணிநிலம் வயல்நிலமாய்ச் சூழ்ந்தி ருக்கக்
 கணபதியும் முருகனும்நாக தம்பி ரானும்
வானிலுறை தேவர்களும் நாகர் தாமும்
 வணங்கு**விளாங் குளேஸ்வரரே** ஆடீர் ஊஞ்சல் 4

வடதிசையில் மன்னகுளம், தெற்கே புதூர்,
 வற்றாத ஆறாக ஓடி நிற்கும்
குடதிசையில் பாலியாறு, கிழக்கே குளம்
 கொலுவைத்த தாகிமலர்ச் சோலை சூழ
இடபத்தின் மீதமர்ந்து உலகைக் காக்கும்
 ஈசனார் **கேதீச்சரர்** எழுந் தருளி
நடமாடிக் கௌரியம்மாள் சமேதர் ஆக
 நல்ல**விளாங் குளேஸ்வரரே** ஆடீர் ஊஞ்சல் 5

**குலசேகர முதலியாராம்** எங்கள் நல்ல
 குலமுதல்வர் பேரனாம் **சபா ரத்தினம்**
நலமுறையே விரதமுறை நோன் பிருந்து
 நல்ல**திருக் கேதீச்சர நாதர்** காட்ட
தலைமுறையே கண்டுவழி பாடே யாற்றத்
 தந்ததொரு கோவிலிலே உவப்பாய் வந்து
நிலவுகின்ற **புதுவிளாங் குளத்தில்** மன்னும்
 நிர்மல**விளாங் குளேஸ்வரரே** ஆடீர் ஊஞ்சல் 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டார வன்னியனார் ஆண்ட மண்ணில்
பண்போடு மக்களெல்லாம் வாழ்ந்த மண்ணில்
கண்டார்கள் போற்றுகின்ற வன்னி மண்ணில்
கண்ணகியார் கோயில்கொண்ட வீர மண்ணில்
பண்ணோடு தேவாரப் பாடல் பாடிப்
பாவையரும் ஆடவரும் பரவும் மண்ணில்
விண்ணோரை வியக்கவைக்கும் கோயில் வாழும்
**விளாங்குளேஸ் வரரே**மகிழ்ந் தாடீர் ஊஞ்சல் 7

மயில்கள்நட மாடமழை மேகம் சூழ்ந்து
மத்தளங்கள் இசைத்திடமா மலர்கள் கோதி
குயில்களிசை பாடவண்டு குழல்கள் ஊத
குதூகலமாய் மந்தியினம் கிளைகள் தாவ
பயில்வனபோல் முயல்மான்கள் மரைகள் சுற்ற
பசுமாடு பால்சுரந்து பொழிந்து செல்ல
அயில்வேலோன் தந்தையுமை பங்கர் ஆன
அழகு**விளாங் குளேஸ்வரரே** ஆடீர் ஊஞ்சல் 8

காடுகளும் களனிகளும் சேர்ந்தி ருக்கும்
காரணத்தால் முல்லையொடு மருத மாகி
ஏடுகளும் போற்றுகின்ற எழிலாய்த் தோன்றும்
இயற்கையழ கமைந்திட்ட எமது மண்ணில்
ஈடுஇணை அற்றதொரு கோயில் தன்னில்
எழுந்தருளி இருக்கின்ற ஈசர் தம்மைப்
பாடுகின்ற அடியார்கள் பாவம் போக்கும்
பழைய**விளாங் குளேஸ்வரரே** ஆடீர் ஊஞ்சல் 9

இந்துவெனும் சமுத்திரத்தின் எழில் முத்தாக
இலங்குகின்ற இலங்கையெனும் எமது மண்ணில்
முந்துபுகழ் இராசதானி பலவும் கொண்ட
மூத்தகுடி மக்களெல்லாம் வாழ்ந்த மண்ணாம்
வந்தாரை வாழவைக்கும் **வன்னி** மண்ணில்
வடக்கினிலே **புதுவிளாங் குளத்தில்** வந்து
நொந்தாரை வாழவைக்கும் தெய்வ மாகும்
நல்ல**விளாங் குளேஸ்வரரே ஆடீர்** ஊஞ்சல் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழி**

ஐந்தெழுத்தும் திருநீறும் நிலைத்து வாழி
ஐங்கரனார் முருகனருள் சிறந்து வாழி
பைந்தொடியார் கற்புநிலை என்றும் வாழி
பசுக்களெல்லாம் பால்பொழிந்து பரந்து வாழி
மைந்துடனே மக்களெல்லாம் மகிழ்ந்து வாழி
மனைகளெல்லாம் செல்வவளம் நிறைந்து வாழி
நைந்துருகும் அடியவர்க்குத் தாயே யாகும்
நல்ல**விளாங் குளேஸ்வரரே** வாழி! வாழி!

**லாலி**

லாலி லாலி லாலி லாலி
லாலி லாலி லாலி லாலி

முப்புரங்கள் எரித்தவரே லாலி லாலி
முயலகனை நசித்தவரே லாலி லாலி
செப்பரிய பரம்பொருளே லாலி லாலி
தேவி கௌரி பாகருமே லாலி லாலி
எப்பொருளு மானவரே லாலி லாலி
எமது**விளாங் குளேஸ்வரரே** லாலி லாலி

**பராக்கு**

ஆலகால முண்டவனே அரனே பராக்கு
ஆனைமுகன் தாதையெனும் அரனே பராக்கு
காலகால காரணனே சிவனே பராக்கு
கண்கள்மூன்று கொண்டவனே கண்ணே பராக்கு
மாலயற்கும் அரியவனே மன்னே பராக்கு
மன்றுதனில் ஆடிவரும் மணியே பராக்கு
வாலயமாய் வந்தெமக்கு அருள்வாய் பராக்கு
வல்ல**விளாங் குளேஸ்வரரே** மகிழ்வாய் பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் - சுப
மங்களம் மங்களம் மங்களம்

அடியவரைக் காத்தருளும் அரனார்க்கு மங்களம்
அன்புடனே அரவணைக்கும் அம்பிகைக்கும் மங்களம்
கொடியவரை அழித்தருளும் குகனார்க்கு மங்களம்
கொம்புஒன்று கொண்டஅண்ணன் கணபதிக்கும் மங்களம்
அடியொன்றால் உலகளந்த அச்சுதற்கும் மங்களம்
அள்ளிஅள்ளிச் செல்வந்தரும் அலைமகட்கும் மங்களம்
படியென்றே பாடம்தரும் சரஸ்வதிக்கும் மங்களம்
பாரிலுள்ள யாவருக்கும் பாவமில்லை மங்களம்.

மங்களம் மங்களம் மங்களம் - சுப
மங்களம் மங்களம் மங்களம்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந் நூலாசிரியரின் நூல்கள்

1) "செல்" "வா" என்று ஆணையிடாய் (அஞ்சலிக் கவிதை-1977)
2) சேரர் வழியில் வீரர் காவியம் (குறுங்காவியம்,-1982)
3) சமவெளி மலைகள் (அகளங்கன்.சு.முரளிதரன் கவிதைகள்-1985)
4) வாலி (ஆய்வு நூல், மூன்று பதிப்புகள்.1987, 1989, 2006 - இலங்கை இலக்கியப் பேரவையின் சிறந்த இலக்கிய நூலுக்கான சான்றிதழ் - 1987)
5) இலக்கியத் தேறல் (கட்டுரைகள்-1988)
6) நளவெண்பா (கதை-1989)
7) அன்றில் பறவைகள் (நாடகங்கள், 1992-தேசிய சாகித்திய மண்டலப் பரிசு- 1992)
8) முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் (வரலாறு-1992)
9) இலக்கியச் சிமிழ் (கட்டுரைகள் - இருபதிப்புக்கள் - 1992, 1993)
10) தென்றலும் தெம்மாங்கும் (கவிதைகள்-1993)
11) பன்னிரு திருமுறை அறிமுகம் - இரு பதிப்புகள் (சமயம் - 1994, 2021)
12) மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள் (ஆய்வு-1994)
13) இலக்கிய நாடகங்கள். (நாடகங்கள்,-1994, வடக்கு கிழக்கு மாகாண சிறந்த நூற் பரிசு, கொழும்புத் தமிழ்ச் சங்கப் பரிசு -1994)
14) ஆத்தி சூடி (விளக்கவுரை-1995)
15) கொன்றை வேந்தன் (விளக்கவுரை-1996)
16) அகளங்கன் கவிதைகள் (கவிதைகள்-1996, வடக்கு கிழக்கு மாகாண சிறந்த நூற் பரிசு - 1996)
17) வாக்குண்டாம் (மூதுரை - விளக்கவுரை-1997)
18) சிவபுராணம் (பொருளுரை-1997)
19) செந்தமிழும் நாப்பழக்கம் (பேச்சுக்கள்- மூன்று பதிப்புக்கள் 1997, 2015, 2017)
20) நாமறிந்த நாவலர் (சிறு குறிப்புக்கள்- இரு பதிப்புக்கள், 1997, 2008.)
21) நல்வழி (பொழிப்புரை -விளக்கவுரை-1998)
22) இசைப்பாமாலை (இசைப் பாடல்கள்-1998)
23) கவிஞர் ஜின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு (ஆய்வு-1999)
24) இலக்கியச் சரம் (கட்டுரைகள்- 2000)
25) வெற்றி வேற்கை (நறுந்தொகை - உரை இரு பதிப்புக்கள் 2000, 2015)
26) கூவாத குயில்கள் (நாடகங்கள்-2001)
27) திருவெம்பாவை உரை (சமயம் இரு பதிப்புக்கள் - 2002, 2018)
28) பாரதப் போரில் மீறல்கள் (கட்டுரை-2003)
29) சுட்டிக் குருவிகள் (மழலைப் பாடல்கள்-2003)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30) சின்னச் சிட்டுக்கள் (சிறுவர் பாடல்கள்-2005)
31) நறுந் தமிழ் (கட்டுரைகள்-2006)
32) பாரதியாரும் பாஞ்சாலி சபதமும் (ஆய்வு-2007)
33) பத்தினித் தெய்வம்(நாட்டிய நாடகங்கள்-2008-வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு 2008)
34) வேரும் விழுதும் (கட்டுரைகள்-2008, வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு 2008)
35) கங்கையின் மைந்தன் (நாடகங்கள் - 2009, வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு, தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றப் பரிசு, தமிழியல் விருது, தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழ், இலங்கை இலக்கியப்பேரவை விருது-.2009)
36) பந்து அடிப்போம் (சிறுவர் பாடல்கள்-2010)
37) சிரிக்க விடுங்கள் (சிறுவர் பாடல்கள்-2010)
38) சகல கலா வல்லிமாலை-(உரையுடன்-2011)
39) அலைக்குமிழ் (நாவல்-2011, தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழ். கொடகே தேசிய சாகித்திய சிறப்புச் சான்றிதழ். இலங்கை இலக்கியப் பேரவையின் சிறப்புச் சான்றிதழ். தமிழியல் விருது-2011)
40) சின்னஞ் சிறிய சிறகுகள். (குழந்தைப் பாடல்-2012, தேசிய சாகித்திய மண்டலப் பரிசு, வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு, தமிழியல் விருது.-2012)
41) கம்பனில் நான். (கட்டுரைகள். 2013.)
42) முற்றத்துக் கரடி (சிறுகதைகள் - 2014 - தமிழ்நாடு **S.R.M.** பல்கலைக்கழக தமிழ்ப் பேராய சர்வதேச விருது, தமிழ்நாடு, திருப்பூர், கவிஞர் சுகந்தி சுப்பிரமணியம் நினைவுப் பரிசு - 2014)
43) தமிழ்த் தூது. வண. பிதா. தனிநாயகம் அடிகளார். (சிறு குறிப்புக்கள் -2014)
44) வன்னிப் பிரதேச வயற் பண்பாடு.( ஆய்வு- 2014, வடக்கு மாகாண சிறந்த நூற்பரிசு, தமிழியல் விருது-2014, கொழும்புக் கம்பன் கழக நுழைபுலம் ஆய்வுவிருது - 2017)
45) ஞானப்பழம் (பாநாடகம் - 2017, வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு)
46) ஆனைகட்டிய அரியாத்தை (நாடகம் -2017)
47) சிறுவர் சிந்தனைக் கதைகள் - 2017
48) சங்கமும் தமிழரும் (ஆய்வு - 2018, வவுனியூர் இரா உதயணன் இலங்கை இலண்டன் இலக்கிய நிறுவகப் பரிசு)
49) எங்கள் காடு (சிறுவர் நாடகம் - 2019, தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழ்)
50) அகளங்கன் இசை நடனப் பாடல்கள் (தேசிய சாகித்திய மண்டல பரிசு 2021)
51) திருக்கேதீச்சரம் (நாட்டிய நாடகம் - 2022)
52) அகளங்கன் பக்திப் பாடல்கள் - (பாடல்கள் - 2023)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அகளங்கன்



கவிதை, இலக்கிய ரசனை, சமயம், சமூகப் பணி முதலிய துறைகளில் கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக ஈடுபட்டு மாநிலம் பயனுற வாழ்ந்து வருபவர் தமிழ்மணி அகளங்கன்.

பழந்தமிழ் இலக்கியங்களில் ஆட்சியுடைய அகளங்கன், அவற்றுள் நுழைந்து புதிய தரிசனங்க ளைக் காட்ட வல்லவர் என்பதற்கு இவருடைய "வாலி", "இலக்கியத்தேறல்" என்பவை உதாரணங்கள்.

"அகளங்கன் கவிதைகள்" மற்றும் "சிறுவர் பாடல்கள்" இவரைக் கவிஞராக நிறுவ, "அன்றில் பறவைகள்" இவருக்கு நாடக உலகில் இடந்தரும். அகளங்கன் இசை, நடனப் பாடல்கள் இவரைப் பாடலாசிரியராக நிலை நிறுத்தும்.



வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தை அச்சாணியாகக் கொண்டு அகளங்கனும் அவர் சகோதரர்களும் ஆற்றிய பணி போற்றத்தக்கது.

பழைமை பேணும் பண்புக்கு அகளங்க னுடைய புராண படன ஆற்றுகையை உதாரண மாகக் காட்டலாம். அதன் நீட்சியாக "அகளங்கன் பக்திப் பாடல்கள்" வெளிவருகிறது. அதை வரவேற்போம். கவிஞரை வாழ்த்துவோம். இவர் காரியம் யாவினும் கைகொடுக்கும் பூரணேஸ்வரியைப் பாராட்டுவோம்.

**கவிஞர் சோ.பத்மநாதன்**

ISBN : 978-624-6141-02-8

விலை : 1000/-

வாணி கணனிப் பதிப்பகம். தொ.பே: 024 2223658

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org